
Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 63 • 23.10.2016



## பயந்தவர்களை ஒதுங்கியிருக்க சொன்ன பிரபாகரன்



### அடர்ந்த காடு: யானைகளே சொந்தம்

## சிங்கள குடியேற்றத்தை தடுக்கும் தனியொரு குடும்பம்



## சுமந்திரன் கஜேந்திரகுமார்

# க்ளிக் பக்கம்

எனது வீட்டு சோலையில் கொஞ்சி குலாவி அன்பை பகிரும் புலுனிகள்

என்னைப்பற்றி: நான் ஆறுமுகம் சபேசன். ஊடகவியலாளராக பணிபுரிகிறேன். புகைப்படங்கள் எடுப்பதில் நிறைய ஆர்வமுள்ளது.



படம்: சபேசன்

இடம்: யாழ்ப்பாணம்



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk

ஒரு டாக்டர்...
நமக்கு நோய் இருக்கனும்னு ஆசைபடுவார்.!!
ஒரு வக்கீல்...
நமக்கு நெறைய பிரச்சனை இருக்கனும்
னு ஆசைபடுவார்.!!
ஒரு மெக்கானிக்...
நம்ம வண்டிக்கு நெறைய கோளாறு இருக்கனும்னு ஆசைபடுவார்.!!
ஆனா....
ஒரு திருடன்....
மட்டும்தான் நம்ம நெறைய காசு பணத்தோட இருக்கனும்னு ஆசைப்படுவான்.!!!
இப்ப சொல்லுங்க மக்களே...
இதுல யார் நல்லவங்க?????



**Gnanadas Kasinathar**

2004 ஆம் ஆண்டு பிபிசி தொலைக்காட்சிக் குழு ஒன்றுடன் யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களில் வேலை செய்து கொண்டிந்த போது மாவீரர் துயிலும் இல்லங்களிலும் படப்பிடிப்புகள் செய்தோம். அப்போது அந்த குழுவின் தலைவி என்னிடம் கேட்டா, "இந்துக்கள் இறந்தவர்களை எரிப்பார்கள் என்றுதானே கேள்விப்பட்டுருக்கிறேன், புலிகள் எப்படி இறந்த தங்கள் போராளிகளை புதைக்க முடிவு செய்தார்கள்?" எனக்கு சிரிப்பும் வந்து விட்டது. பெருமையாகவும் இருந்தது. நான் சொன்னன், "இந்துவுக்கும் புலிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அது மட்டுமல்ல இந்துவுக்கும் எங்கள் போராட்டத்துக்குமே எந்த தொடர்பும் இல்லை. அது மட்டுமல்ல அடிப்படையில் இந்துவுக்கும் தமிழருக்குமே ஒரு தொடர்பும் இல்லை. அது எங்கள் மீது திணிக்கப்பட்ட அடையாளம். கடவுள் நம்பிக்கையும் அதற்கான வழிபாட்டு முறையும் ஒருவரது தனிப்பட்ட தேர்வு. தமிழர்கள் அந்த வழியிலேயே சிறு சிறு குழுக்களாக வெவ்வேறு தெய்வ வழிபாடுகளைச் செய்து வந்தனர். பின்னர் தமிழ் சித்தர்கள் தமிழ் மக்களின் வழிபாட்டு வடிவங்களை பகுத்தறிவின் வழி நெறிப்படுத்தினர். ஆனால் எம்மிடம் மதக் கட்டமைபுகள் எதுவும் இருக்கவில்லை. மடாலயங்களும் இருக்கவில்லை. பின்னர் சமணர்களும், பவுத்தர்களும் வந்தனர். சித்தர் வழிபாடுகளை மந்திரம் தந்திரம் என கேலி செய்தனர். சித்தர்களை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தினர். மடலாயங்களை நிறுவினர். முதன் முதலில் எமக்கு "மதம்" காட்டியவர்கள் அவர்களே. பின்னர் பிராமணியர்கள் வந்தனர். சமணத்தையும் பவுத்தத்தையும் பின்பற்றி வந்த தமிழர்களை உயிரோடு கொழுத்தினர். தூர தேசங்களுக்கு துரத்தினர். பின்னர் தங்கள் மூடநம்பிக்கைகள், அடக்குமுறைச் சட்டங்களோடு தமிழ்ச் சித்தர்களின் சிந்தனைகளையும், பவுத்த தத்துவங்களையும் களவாடி உள்வாங்கி எம்மிடமே தந்து எம்மை "இந்து" ஆக்கினர். மற்றப்படி உலகில் சொந்தமாக "மதம்" எதுவும் இல்லாத இனமே தமிழினம். அந்த "மதம்" அற்ற பண்பை மீளக் கட்டமைப்பதும் தலைவர் பிரபாகரன் அவர்களின் குறிக்கோள்களில் ஒன்று. மாவீரகளைப் புதைப்பதற்கும், தன் மகனுக்கு "சார்ஸ் அன்டனி" என்றும் தன் தளபதிகளுக்கு "கடாபி" என்றும் "இம்ரான்" என்றும் பெயரிட்டதற்கும் பின்னால் தமிழர்களின் "இந்து" அடையாளத்தை அழிக்கும் தூர நோக்கு அவரிடம் இருந்தது".



**Gowripal Sathiri Sri**

இலங்கையில் பிரியாணிக்கடை வைத்திருப்பவர்கள் மற்றும் வீட்டு விசேடங்களுக்காக பிரியாணி செய்பவர்கள் அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கவும் ..
# சிவசேனா #



**Sambavi Kumaralingam**

இன்றைய தமிழ் தொலைக்காட்சி நாடகங்கள் இரண்டே வகை..
1. பெண்கள் பேய்களாக நடிப்பது
2. பேய்கள் பெண்களாக நடிப்பது...


அருந்ததியின்



வரன் தேடுவோம் வாருங்கள்
யாழ் வீரசிங்கம் மண்டபம்
06-11-2016 • 9.00 a.m
076 822 8519
Organized By : Arunthathee
Main Sponsor : JEEVAN STUDIO JAFFNA
Co - Sponsor : Thadsha
Media Sponsor : தீபம்

உங்கள் அலுவலகங்கள் மற்றும் வீட்டு பாவனைகளை சுத்திகரிப்பதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரேயொரு இடம்...
NEW STAR
CLEANING SERVICE
Church Road, Chankanai.
Tel : 0777 496 176





## ரணிலின் வாயை மூடவைத்த ரஞ்சன்!

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்பில் ஜனாதிபதி கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததையடுத்து தேசிய அரசில் மட்டுமல்ல, இலங்கை அரசியலிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தேசிய அரசின் தேனிலவு முடியும் காலத்திற்கு வந்துவிட்டதென்ற அபிப்பிராயங்களும் மேலெழ தொடங்கின. ஆனால் இந்த விவகாரத்தை மைத்திரி ரணில் தரப்புக்கள் சுமுகமாக தீர்த்துக்கொண்டு விட்டன.

இருதரப்பும் சுமுகமாக தீர்த்ததன் பின்னணியில் நடந்த சம்பவங்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரதமரின் ஆலோசகராக உள்ள சிரேஸ்ட ஊடகவியலாளர் சமன் அதாவுதஹெட்டியே இந்தப்பணியில் முன்னின்றுள்ளார். ஜனாதிபதியின் உரையை அடுத்து கொந்தளிப்பு ஏற்பட்டது. சமன் உடனடியாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவை தொடர்பு கொண்டுள்ளார். ஜனாதிபதி, பிரதமருக்கு நெருக்கமானவராக ரஞ்சன் இருப்பதால் சுலபமாக முடிக்கலாமென சமன் நினைத்தார்.

ரஞ்சனிடம் விடயத்தை சொன்னதும், ரஞ்சன் விசித்திரமான நிபந்தனையொன்றை விதித்துள்ளார். யாராவது 2 நிமிடம் பேசினால் 20 நிமிடம் ஆலோசனை சொல்வது ரணிலின் வழக்கமென்றும், அப்படி நடக்க கூடாதென்றும் வாக்குறுதியை பெற்றுக்கொண்டுதான் சமரசத்தில் இறங்கியுள்ளார்.

முதலில் ஜனாதிபதியை சந்தித்து பேசி, அந்த விபரங்களை பிரதமரிடமும் பேசியுள்ளார். இந்த விவகாரத்தை பெரிதாக்காமல் தொடர்ந்து முன்செல்வதென இருதரப்பும் உறுதியெடுத்துக் கொண்டனர். இதனையடுத்து, கொள்ளுப்பிட் வாளுக்காரம விகாரை பெரஹராவை ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து பார்வையிட்டுள்ளனர்.

## வராத கிராமசேவகர்கள்!

கடந்த புதன்கிழமை (19.10.2016) மன்னார் அடம்பன் பிரதேச செயலகத்தில் கிராமசேவகர்கள் கடமைக்கு வராததால் பெரும் அசௌகரியத்தை சந்தித்தாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புதன்கிழமைகள் மக்கள் சந்திப்பு நாள் என்பதால் தூர இடங்களிலிருந்தும் பெருமளவானவர்கள் அடம்பன் பிரதேச செயலகத்திற்கு சென்றுள்ளனர். எனினும் கிராமசேவகர்கள் கடமைக்கு சமூகமளிக்கவில்லை. மதியம் 1.30 மணிவரையும் கிராமசேவகர்களிற்காக காத்திருந்த மக்கள் பின்னர் ஏமாற்றத்துடன் வீட்டுக்கு திரும்பியுள்ளனர்.

கிராமசேவகர்களின் பொறுப்பற்று நடந்ததால் தாம் பெரும் சிரமங்களை சந்திக்க நேர்ந்ததாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.




## காவலாளியை தாக்கியது யார்?

வவுனியா தெற்கு பிரதேச செயலகத்திற்குள் அத்துமீறி உள்நுழைந்தவர்களினால் காவலாளி அச்சுறுத்தப்பட்டுள்ளார். பொலிசார் என கூறிக்கொண்டு உள்நுழைந்தவர்களே தன்னைத் அச்சுறுத்தியதாக காவலாளி கூறியுள்ளார்.

கடந்த 09ம் திகதி இரவு இந்தச்சம்பவம் நடந்துள்ளது. அன்றையதினம் இரவு 10.45 அளவில் பிரதேச செயலகத்திற்கு அருகில் வீதியில் இரண்டு முச்சக்கரவண்டிகள் நின்றுள்ளன. ஒன்றில் இரண்டு பெண்கள் இருந்துள்ளனர். தனது கடமைப்பிரதேசத்திற்கு வெளியில் அவை நின்றதால் காவலாளி அது தொடர்பில் ஆராயவில்லை.

பின்னர் 11.30 அளவில் பிரதேசசெயலகத்தின் பிரதான வாசலை சிலர் மூர்க்கமாக தட்டியுள்ளனர். அவர்கள் யார் என காவலாளி விசாரித்தபோது, தங்களை பொலிஸ் என கூறியதுடன், ஒருவர் மதிலால் உள்ளே குதித்து வாயில் கதவை திறக்க, மற்றவர்களும் உள்நுழைந்துள்ளனர்.

சாதாரண உடையுடன் வந்த அவர்கள் மதுபோதையில் இருந்துள்ளனர். அவர்களில் சந்தேகம் கொண்ட காவலாளி மேலதிகாரிகளிற்கு தொலைபேசியில் தகவல் தெரிவிக்க முயன்றபோது, அதனை தடுத்து அவரை அச்சுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் காவலாளி முறையிட்டும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.




## முடிவை மாற்றாத இந்தியா!

திருகோணமலை சம்பூரில் சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு இந்தியா வெளியிட்ட விருப்பம், திருகோணமலையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இந்தியாவின் விடாமுயற்சியின் இன்னொரு வடிவமென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சம்பூரில் அமைக்கத் திட்டமிட்டிருந்த 500 மெகாவாட் அனல் மின் திட்டத்தை கைவிடுவதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்து ஒரு மாதம் கழித்து இந்தியா இந்த திட்டத்தை முன்வைத்துள்ளது.

கோவாவில் பிரிக்ஸ் பிம்ஸ்ரெக் மாநாட்டின் பக்க நிகழ்வாக, சிறிலங்கா அதிபருடன் கடந்த சனிக்கிழமை நடத்திய பேச்சுக்களின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்த திட்டத்தை முன்வைத்துள்ளதாக இந்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அனல் மின் திட்டத்துக்குப் பதிலாக இயற்கை எரிவாயு மின்திட்டம் அல்லது சூரியசக்தி அல்லது காற்றாலை மின்திட்டத்தை அமைப்பது தொடர்பாக பரிசீலித்து வருவதாக சிறிலங்கா அரசாங்கம் தெரிவிததிருந்தது.

2020ஆம் ஆண்டு 220 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இலக்குடன், சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன சூரிய சக்திக்கான போர் என்ற திட்டத்தை கடந்த மாதம் ஆரம்பித்து வைத்திருந்தார்.

2025ஆம் ஆண்டு 1000 மெகாவாட் மின்சாரத்தை இந்த திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

சிறிலங்கா புதுப்பிக்கத்தக்க சக்தியின் பக்கம் திரும்பியுள்ளதையடுத்தே, சம்பூரில் சூரியசக்தி மின்திட்டத்தை அமைக்க இந்தியா முன்வந்துள்ளது. அனல் மின்நிலைய திட்டத்திற்கு உள்ளூரில் கடுமையான எதிர்ப்பு எழுந்திருந்தது. தமிழ்தேசிய கூட்டமைப்பும் இந்த அழுத்தத்தை பிரயோகித்ததையடுத்து, அனல்மின் நிலைய திட்டத்திலிருந்து இரண்டு அரசாங்கங்களும் விலகிக் கொண்டுள்ளன. எனினும், திருகோணமலையை கட்டுப்படுத்தும் திட்டத்திலிருந்து இந்தியா விலகவில்லையென்பது இந்த அறிவிப்பின் மூலம் தெளிவாகதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



## இறந்தவர்களை கனவில் கண்டால் என்ன பலன்?

நம்மோடு நெருங்கிப் பழகியவர்கள், எமக்கு பிடித்தவர்கள், பிரபலங்கள் போன்றோர் இறந்தால், சில நேரங்களில் எமது கனவில் அவர்களின் உருவம் வரக்கூடும். இயற்கையாக மரணமடைந்தவர்கள் கனவில் வந்தால் நல்ல பலன்கள் கிடைக்கும் என்று கனவுகள் தொடர்பான நூல்களில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக, பேரன், பேத்தி எடுத்து நன்றாக வாழ்ந்து மரணமடைந்த முன்னோர்கள் கனவில் வந்தால் அதனை ஆசி எனக் கருத வேண்டும்.

ஆனால் துர்மரணம் அடைந்தவர்கள் கனவில் வந்தால் சில இடர்பாடுகள் ஏற்படும். உடல் நலம் குறையலாம். விபத்து, குடும்பத்தில் வாக்குவாதம், பிரிவு உள்ளிட்டவை ஏற்படக் கூடும். இதுபோன்ற பிரச்சனைகளைத் தவிர்க்க குலதெய்வக் கோயில் வழிபாட்டை மேற்கொள்ளலாம். பொங்கல் வைத்து அன்னதானம் வழங்கலாம். வஸ்திர தானம் செய்யலாம். வயதானவர்கள், பெரியவர்கள், வாழ்க்கை முழுவதும் சிறப்பாக வாழ்ந்து இயற்கை எய்தியவர்கள் கனவில் வந்தால் கவலை கொள்ளத் தேவையில்லை

# பயந்தவர்களை ஒதுங்கியிருக்க சொன்ன பிரபாகரன்

பாலகுமாரன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து தப்பித்து செல்வதென எடுத்து முடிவு சாதாரணமானதல்ல. அது தனி பாலகுமாரன் என்ற நபர் தப்பித்து செல்லும் சம்பவமுமல்ல. இனி விடுதலைப்போராட்டத்தின் ஆயுதவழி சாத்தியமல்ல என அவர் உணர்ந்ததாலும் இருக்கலாம். 1990 ஆம் ஆண்டு தொடக்கம் விடுதலைப்புலிகளுடன் இணைந்திருந்து, புலிகளின் எல்லா சரிகள், தவறுகளிலும் தார்மீகரீதியில்பொறுப்புகூறவேண்டியவராக இருந்துவிட்டு, 26 ஆண்டுகளின் பின்னர் புலிகளை விட்டு தப்பிச் செல்வதென்று ஒரு பெரு வீழ்ச்சி.

இந்த இடத்தில் இன்னொன்றையும் சொல்லலாம்.

1970களில் மத்தியிலிருந்து பல்வேறு இயக்கங்கள் தோற்றம் பெற்றன. எல்லாவற்றினது இலக்கும் தமிழீழம்தான். இப்படி தோன்றிய இயக்கங்களின் எண்ணிக்கை 33-40 வரையானது. இதில் மிகச்சிறியனவற்றில் தொடங்கி விடுதலைப்புலிகள், புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரையான பெரிய இயக்கங்கள் வரை அடக்கம்.

இந்த இயக்கங்களில் பல அழிந்தன.




கொள்கையை கைவிட்டன. தலைவர்கள் இறந்தார்கள். அரசுடன் இணைந்தன. எனினும், இறுதிவரை தமிழீழம் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தது புலிகள். அந்த அமைப்பின் தலைவர் பிரபாகரன்.

மற்ற எல்லா இயக்கங்களும் தமிழீழ கோரிக்கையை கைவிட, பிரபாகரன் மட்டும்தான் அதில் உறுதியாக இருந்தார். தான் முன்மொழிந்த இலட்சியத்தை ஏற்று, தன்னை நம்பி இறந்த போராளிகளிற்கு விசுவாசமாக இருக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தார்.

பாலகுமாரன் விடுதலைப்புலிகளுடன் இணைந்திருந்தது தமிழீழ இலட்சியத்தை ஏற்றுத்தான். அவர் ஒரு நபரல்ல. ஈரோஸ் இயக்கத்தின் தலைவர். பாலகுமாரனும் தமிழீழ இலட்சியத்தைகைவிடாமல் இருந்தார் என்ற வரலாறு, 2009 ஏப்ரல் மாதத்துடன் முடிந்தது பாலகுமாரன் விடுதலைப்புலிகள் அமைப்பை விட்டு தப்பிச் செல்தென எடுத்த முடிவுடன். தமிழீழ கொள்கையில் எந்த சமரசமுமில்லாமல் இறுதிவரை போராடிய ஒரே தலைவர் பிரபாகரன்தான்.



பாலகுமாரன், மனைவி இந்திரா, மகன் சூரியதீபன், மகள் மகிழினி ஆகியோர் மேலும் சிலருடன் தப்பிச் சென்ற படகை கடற்புலிகளின் காவல் அணியொன்று மடக்கிப்பிடித்ததை கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். அந்த சமயத்தில் படகில் இருந்தது சாதாரண பொதுமக்கள் என்றால் நிலைமை வேறு. இரண்டாவது பேச்சிற்கு இடமில்லாமல் அவர்களை கரைக்கு கொண்டு வந்து தண்டனை வழங்கியிருப்பார்கள். ஆனால் படகிலிருந்தது பாலகுமாரனும் குடும்பமும். தம்மை தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்குமாறு படகிலிருந்தவர்கள் உருக்கமாக கேட்டுக் கொண்டனர்.

இந்த சூழ்நிலையில் என்ன முடிவெடுப்பதென தெரியாமல் விழித்த கடற்புலி போராளிகள், உடனடியாக கரையிலிருந்த கட்டளைமையத்தைதொடர்புகொண்டனர். விபரத்தை கேட்டு, நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த கட்டளை மையம் கடற்புலிகளின் தளபதி சூசையை தொடர்பு கொண்டது.

ஏப்ரல்மாதம்யுத்தத்தின் இறுதிக்கட்டத்தை எட்டி, விடுதலைப்புலிகளின் தளபதிகளிற்கு அதிக நெருக்கடியை கொடுத்திருந்தது. இப்படியான சூழலில் கோபமான அதிரடி முடிவுகளைத்தான் தளபதிகள் எடுப்பார்கள். சூசையிடம் விடயத்தை சொன்னதும், சம்பவ இடத்திலுள்ள போராளிகளின் இணைப்பை ஏற்படுத்தி தரச் சொன்னார். கட்டளை மையமும் விரைவாக தொடர்பை ஏற்படுத்தி கொடுத்தது.

சூசையை அறிந்தவர்களிற்கு தெரியும் அவரது கோபம். இயக்க வேலைகளில், களமுனைகளில் யாராவது தவறுவிட்டால் அவரது கதி அதோகதிதான். அதுபற்றிய விசாரணை நடக்கும்போது, அவரது கையில் என்ன பொருள் இருக்கிறதோ அந்தப்பொருளால் தவறிழைத்தவரிற்கு சாத்துப்படி நடக்கும்.

தப்பிச்சென்றவர்களின் படகை வழிமறித்த அணியின் பொறுப்பாளரை சூசை நேரடியாக வோக்கி டோக்கியில் தொடர்பு கொண்டார். "தப்பிச் சென்ற படகொன்றை துரத்திப் பிடித்தோம். அதிலிருப்பது பாலகுமாரன். அவர்களை என்ன செய்யலாம்" என கடலிலிருந்து கேட்டார்கள். இந்த உரையாடல்களை பாலகுமாரனும் தெளிவாக கேட்டுக் கொண்டிருந்தார்.



"இயக்கத்தில் எல்லோருக்கும் ஒரே சட்டம்தான். எமது பகுதியை விட்டு வெளியேற மக்கள், போராளிகளிற்கு கட்டுப்பாடு இருந்தால் அது நான் உட்பட அனைவருக்கும் பொருந்தும். அவர்களை கரைக்கு கொண்டு வாருங்கள்" என கடும் தொனியில் உத்தரவிட்டார்.

பாலகுமாரன் எதுவும் பேசாமல் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்தார். மகள் மகிழினிதான் பெரிதாக சத்தமிட்டு அழுதபடியிருந்தார். அதன் பின்னர்தான் போராளிகளும் கவனித்தார்கள். படகை துரத்திச் சென்று சுட்டதில் அவரது கையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. கையொன்றில் தோள்மூட்டிற்கும் முழங்கைக்கும் இடைப்பட்ட பகுதி எலும்பை உடைத்துக் கொண்டு ரவையொன்று சென்றிருக்கிறது.

அவர்கள் கரைக்கு கொண்டுவரப்பட்டு வீடுகளிற்கு அனுப்பப்பட்டார்கள். அதன் பின்னர், மே 17ம் திகதி புலிகள் அமைப்பு முழுமையாக சிதறும்வரை அமைப்பு சார்பில் யாருமே அவரை தொடர்பு கொள்ளவில்லை. புலிகளை பொறுத்தவரை ஏப்ரல் மாதத்திலேயே பாலகுமாரன் இறந்து விட்டார்.

மே 17ம் திகதி இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு வரும் வரையிலும் முறையான மருத்துவ வசதிகள் இல்லாமல் மகிழினி சிரமப்பட்டார். பாலகுமாரனின் மனைவி மருத்துவதாதியென்பதால் ஓரளவு சமாளித்துக் கொண்டிருந்தார். பின்னர் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் வந்ததன் பின்னர்தான் முறையான சிகிச்சையளிக்கப்பட்டது. கை எலும்புகள் பொருந்த "அன்ரனா" பொருத்தப்பட்டது. அன்ரனாவுடன்தான் யாழில் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதினார். அன்ரனாவுடன்தான் பின்னர் இலங்கையை விட்டு வெளியேறினார்.

விடுதலைப்புலிகளின் இயல்பு அது. தமது கொள்கையில் மிக உறுதியாக இருப்பார்கள். கொள்கை மாத்திரம்தான் முதன்மையானது. ஆசாபாசம், குடும்பம் எல்லாம் இரண்டாம் பட்சம்தான். இந்த இயல்புகளுடன் கூட வருபவர்கள் வரலாம். பின் தங்குபவர்கள் சென்றுவிடலாம் என்பதுதான் சொல்லாமல் சொல்லும் சங்கதி. 1987 யூலை 27 இல் இந்திய இலங்கை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. சில மாதங்களிலேயே முறிந்து 1987-10.10 இல் புலிகள் இந்தியா மோதல் ஏற்பட்டது.

ஒப்பந்தம் நெருக்கடி நிலையை எட்டிய சமயம். முல்லைத்தீவு தளபதியாக இருந்த மேஜர் பசீலனின் ஏற்பாட்டில் மணலாற்று காட்டுக்குள் முகாம் அமைத்து பிரபாகரன் அங்கு செல்ல தயாராகிறார். அதாவது இந்தியாவுடன் போர் என்ற முடிவை எடுக்கிறார்.

இந்தியா உலகின் நான்காவது வல்லரசு. இலங்கைக்கு வந்த இந்திய படையணியே கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம். விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை சில நூறு. இந்த சூழலில் போர் ஏற்பட்டால் என்ன நடக்கும்? எல்லோரும் நினைப்பதை போலத்தான் அப்போதைய இந்திய தூதர் டிக்சிற்கும் நினைத்தார். "சாரம் கட்டிய சில பொடியளை ஒரு சிகரெட் பற்றி முடிப்பதற்குள் நசித்து விடுவோம்" என்றார்.

விடுதலைப்புலிகளிற்குள்ளும் அந்த குழப்பம் இருந்தது. இந்தியாவுடன் போர் நடந்தால் அழிந்து விடுவோம் என்று பயந்தார்கள். அமைப்பிற்குள் குழப்பம் ஏற்பட்டதை அறிந்த பிரபாகரன், போராளிகளை அழைத்து, பேசினார். அதில் அவர் சுருக்கமாக சொன்னது இதுதான் "இந்தியாவுடன் போரிடுவதென முடிவெடுத்துள்ளோம். இந்த முடிவில் உடன்பாடில்லாதவர்கள் தாராளமாக ஒதுங்கிக்கொள்ளலாம். உடன்படுபவர்கள் என்னுடன் இருங்கள்". சில போராளிகள் வெளியேறினார்கள். அவர்களில் முக்கியமானவர் காக்கா.

காக்கா இயக்கத்தின் மூத்தபோராளி. புலிகளின் முதல் பெரும் தாக்குதலான திருநெல்வேலி கண்ணிவெடி தாக்குதலில் பங்குபற்றியவர்களில் இன்றும் உயிருடன் உள்ள ஒரேநபர். (தொடரும்)

# மீனவர்களிற்கு எப்பொழுது விடிவு?

ஜனாதிபதி, பிரதமரின் இந்திய விஜயத்தின்போது இருதரப்பு மீனவர் பிரச்சனை முக்கிய விவகாரமாக பேசப்பட்டது. எனினும், மீனவர் பிரச்சனையில் தீர்வுகளை எட்டும் விதமான பேச்சுக்கள் எதுவும் திட்டமிடப்படவில்லை. மீனவர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதென்ற கொள்கை முடிவுகள் எட்டப்பட்டன.

இலங்கை இந்திய அரச உயர்மட்ட பிரதிநிதிகள் சந்திப்பில் இப்படியான உறுதியெடுப்பு நிகழ்வதொன்றும் ஆச்சரியமான சங்கதியல்ல. ஒவ்வொருமுறையும் இப்படியான செய்திகள் வெளிவருகின்றன. கிட்டத்தட்ட மீனவர் பிரச்சனை பற்றி இருதரப்பும் பேசுவது சம்பிரதாயமான ஒன்றாகிவிட்டது.

இந்த விவகாரத்தில் இலங்கைக்குத்தான் அதிக பொறுப்பு உள்ளது. ஏனெனில், இந்திய மீனவர்களின் அத்துமீறிய சட்டவிரோத மீன்பிடியால் அவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள்.

யுத்த சமயத்தில் நிறைய நெருக்கடிகளை மீனவர்கள் சந்தித்தார்கள். பொருளாதாரத்தில் எழுச்சிபெற முடியாத தடைக்கற்களிற்கு அப்பால் உயிருத்தரவாதமும் இருக்கவில்லை. யுத்த காலத்திலிருந்து வெளியில் வந்த மீனவர்களிற்கு புதிய தலையிடி இந்திய மீனவர்கள் வடிவத்தில் எழுந்துள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் யாரும் உருப்படியாக பேசவில்லை. இந்தியா தொடர்பான கண்டிப்பான கருத்துக்களை தமிழ் மக்கள் பிரதிநிதிகள் வெளியிடுவதில்லை. ஏதோ ஒருவிதத்தில் அவர்கள் இந்தியாவால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். அதனால் தமது சொந்த மக்களின் பிரச்சனைகளில் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறார்கள்.

மீனவர் பிரச்சனையில் இந்திய தரப்பில் முன்வைக்கப்படும் பாரம்பரிய மீன்பிடி பிரதேசங்கள் என்ற கருத்து வஞ்சகமானது. அது இலங்கை மீனவர்களின் மீன்பிடி பிரதேசங்களை பங்கு கேட்பதற்காக உருவாக்கப்பட்ட வார்த்தை.

ஒரு நாட்டின் இறைமை பிரதேசங்களை இன்னொரு நாட்டு குடிமக்கள் பாரம்பரியமாக பாவித்தார்கள் என்ற வாதத்தை முன் வைத்து விட்டுக்கொடுக்க முடியாது. இந்தியாவும் தனது எல்லை விவகாரத்தில் பாகிஸ்தான், சீனாவுடன் தீராத சர்ச்சையில் ஈடுபட்டுள்ளது. எல்லை கடந்து வரும் பாகிஸ்தான் மீனவர்கள் நீண்ட சிறைவாசம் அனுபவிக்கிறார்கள். ஆனால், இன்னொரு திசையில் எல்லை கடப்பதற்கு இந்தியா விசித்திர விளக்கமளித்துக் கொண்டிருக்கிறது.

இழுவைமடி மீன்பிடி முறையை இலங்கை மீனவர்கள் பயன்படுத்துவதில்லை. ஆனால் இந்திய மீனவர்கள் இலங்கை கரையை நெருங்கி இழுவைமடியை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். தமிழக ரோலர்கள் நுழைந்த பகுதிகளில் கடல்தரை வழித்து துடைக்கப்படுகிறது. மீன், பவளப்பாறைகள், மீன் முட்டையிடும் சூழல் முற்றாக அழிக்கப்படுகிறது. இந்த நிலை நீடித்தால், இலங்கை கடற்பரப்பில் மீன்வளம் அழிந்துவிடும். இதன்பின்னர் இந்திய ரோலர்களில் பணியாளர்களாக இணைந்து வேறொரு நாட்டின் எல்லைக்குள் இலங்கை மீனவர்களும் நுழைவதுதான் நடக்கும்.

மீனவர் விவகாரத்தில் இலங்கை அரசு இறுக்கமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இலங்கை கடல் எல்லைக்குள் வெளியார் நுழைவதை தடுப்பது நாட்டு இறைமையுடன் சம்பந்தப் பட்டது மட்டுமல்ல, சொந்த மக்களின் வாழ்வோடும் சம்பந்தப் பட்டதென்பதை அரசு நினைவில் வைத்திருக்கட்டும்.

யாழில் உள்ள இந்திய துணைத்தூதரகம் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி ஏராளம் நிகழ்வுகளை நடத்துகிறது. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வில் அக்கறை கொண்டிருப்பதாக கூறுகிறது. பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிவாரணம் என தென்னிந்திய நடிகர்கள், பாடகர்கள், கலைஞர்கள் வருகிறார்கள். இலங்கையுடன் எந்த தொடர்புமற்ற அம்பேத்கரின் பிறந்தநாள் யாழில் கொண்டாடப்படுகிறது. அகிம்சைதினம் அனுட்டிக்கப்படுகிறது.

கீரிமலையை புனித பிரதேசமாக்க, திருக்கேதீஸ்வரத்தை புனரமைக்க இந்திய துணைத்தூதரகம் ஆர்வமாக உள்ளது.

ஆனால் கரையோர மீனவ மக்களின் வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்ட மீனவர் விவகாரத்தில் கண்டும்காணாமலும் உள்ளது. இன்னொரு நாட்டின் எல்லையை பங்குகேட்பதற்கு பாகிஸ்தானிற்கும், சீனாவிற்கும் உரித்தில்லையெனில், இந்தியாவிற்கும் இது கிடையாது. மீனவர் பிரச்சனையில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் பகிரங்கமாக குரல் கொடுக்க வேண்டும். போராட வேண்டும். இதையே செய்ய துணிவற்றவர்கள் எப்படி தமிழர்களின் உரிமைகளிற்காக சிறிய தியாகத்தையாவது செய்வார்கள்?

**தீபம்**

197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**பொ.ஐங்கரநேசன்**
**– விவசாய அமைச்சர், வடமாகாணம்**

நாங்கள் எவ்வாறு இந்த மண்ணின் சொந்தக்காரர்களோ, அதுபோல இந்த மண்ணுக்கே உரித்தான கால்நடைகளும் உள்ளன. கலப்பினங்களின் வருகையோடு நாட்டு பசுக்கள், நாட்டு ஆடுகள், நாட்டு நாய்கள் மீதான ஆர்வம் குறைந்துபோக, அவை தெருவோர விலங்குகளாக அலைகின்றன. கலப்பின கால்நடைகள் மீது காட்டும் அன்பை எமது மண்ணின் சொத்தான இவற்றின் மீதும் காட்டுங்கள்.




**எம்.ஏ.சுமந்திரன்**
**– பேச்சாளர், தமிழ்தேசிய கூட்டமைப்பு**

இலங்கையிலுள்ள சிறுபான்மை சமூகங்களிற்கு தேசிய வாழ்க்கையில் சரியான இடம் வழங்கப்படவில்லையென்பது தெளிவாக தெரிவதாக ஐ.நா விசேட அறிக்கையாளர் ரீட்டா ஐசக் நாடியா கூறியுள்ளார். இலங்கையில் வெவ்வேறான பல மக்கள் கூட்டங்கள் இருக்கின்றனர். அவர்கள் இருப்பதே நாட்டில் பலருக்கு தெரியவில்லை. அமிலச்சோதனை போல, இராணுவத்தை உதாரணத்திற்கு எடுத்தால் அதில் 99 வீதமானவர்கள் ஒரு இனத்தவர்களே. இப்படியிருந்தால் நாட்டில் சகவாழ்வு, அனைவருக்கும் சம உரித்து உள்ளதாக சொல்ல முடியாது.



**ரிஷாட் பதியுதீன்**
**– அமைச்சர், கைத்தொழில் வணிகத்துறை**

இடம்பெயர்ந்து வாழும் முஸ்லீம் மக்களை மீள்குடியேற்றுவதற்காக அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட விசேட மீள்குடியேற்ற செயலணிக்கு தமிழ்தேசிய கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள வடமாகாணசபை தடை போடுகிறது. மாகாணசபை முஸ்லீம்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்துகிறது. அவர்கள் உதவுகிறார்களுமில்லை, உதவி செய்கிறவர்களை அனுமதிக்கிறார்களுமில்லை.



**சி.வி.விக்னேஸ்வரன்**
**– முதல்வர், வடமாகாணம்**

சிங்களத்தில் ஈமெயிலொன்று எனக்கு வந்தது. எனக்கு சிங்களம் நன்றாக வாசிக்க தெரியாதென்பதால் அதை மொழிபெயர்க்க கொடுத்தேன். மொழிபெயர்ப்பு தாமதப்பட்டுக் கொண்டிருந்தது. எழுக தமிழ் முடிந்த சிலநாளில் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. பல்பிட்டியவிலிருந்து பேசியவர் ஒரு தகவல் சொன்னார். என்னையும், சம்பந்தனையும் கொல்ல 25 மில்லியன் ஒப்பந்தம் நடந்துள்ளதாக, அந்த தகவலை எப்படி பெற்றேன் என்றெல்லாம் சொன்னார். உடனே இதை முறைப்பாடாக ஐ.ஜிக்கும், ஜனாதிபதிக்கும் தெரிவித்தேன். சிலநாளின் முன்னர் அந்த நபர் மீண்டும் தொலைபேசியில் அழைத்து, அந்த தகவலை கொடுத்து ஏன் தமிழர்களிற்கு உதவுகிறாய் என ரி.ஐ.டி தொல்லை தருவதாக சொன்னார்.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk



# “மாவை.சேனாதிராசாதான் அடுத்த முதல்வர்” சொல்கிறார் சிறிதரன்

நிதர்ஷன்

‘அடுத்த வடமாகாணசபை தேர்தலில் மாவை.சேனாதிராஜா போட்டியிடுவார். முதல்வர் விக்னேஸ்வரனிற்கு பதவி ஆசை கிடையாது. அடுத்த தேர்தலில் போட்டியிடுவதோ, தனிக்கட்சி ஆரம்பிப்பதோ அவரது நோக்கமல்ல. தமிழ் மக்களின் அபிப்பிராயங்களை பிரதிபலிக்க வேண்டுமென்ற முதல்வரின் தற்போதைய அரசியல் நடவடிக்கைகள் சிலரை அப்படி பேச வைத்துள்ளது' என்கிறார் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் அண்மையில் அவரை சந்தித்தபோது பல்வேறு விடயங்கள் தொடர்பாக பேசினார்.

அவரது முழுமையான நேர்காணல் இது

**தீபம்: நல்லாட்சி அரசின் செயற்பாடுகள் திருப்திகரமானதாக அமைந்திருக்கின்றனவா?**

**சிறிதரன்:** நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் திருப்தியற்ற நிலையில்தான் உள்ளனர். நல்லாட்சியை உருவாக்கி வெளிநாட்டு, உள்நாட்டு சக்திகளிற்கு தேவையானால் நல்லாட்சியாக இது இருக்கலாம். தமிழர்களை பொறுத்தவரை அவர்கள் வாழிடங்களிற்கு போக முடியவில்லை. காணாமல் போனவர்கள் பற்றிய தகவல் இல்லை. அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு மாற்றான சட்டம் தயாரிக்கப்படுகிறது. புதிய அரசியலமைப்பில் பௌத்தத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அதுதானா நல்லாட்சி?

தமிழ் மக்களோ, நாடோ எதிர்பார்க்கும் நிலைமையை நல்லாட்சி உருவாக்கவில்லை. காலங்காலமாக தமிழர்களை ஏமாற்றிய சிங்கள தலைமைகளின் தொடர்ச்சியாகத்தான் இந்த அரசும் இருக்குமென நினைக்கும் சூழல்தான் தென்படுகிறது.

**தீபம்: புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தில் வடக்கு கிழக்கு இணைப்பு, சமஷ்டி அடிப்படையில் அதிகார பகிர்வு இடம்பெறுமென நினைக்கிறீர்களா?**

**சிறிதரன்:** புதிய அரசியலமைப்பு வித்தியாசமானது. இதுவரையான அரசியல் யாப்புக்கள், திருத்தங்கள் எல்லாம் தமிழ் மக்களுடைய விருப்பங்களை பிரதிபலிக்காமல், இனப்பிரச்சனைக்கு தீர்வை முன்வைக்கும் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை.

ஆனால் புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களுடைய சில எண்ணங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. அது அரசியலமைப்பிலே கொண்டு வரப்படுமா இல்லையா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாவதாக, இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசொன்றை அமைத்துள்ளார்கள். அடுத்த சிறிய முன்னேற்றமாக இதை கருதிக் கொள்ளலாம்.

வடக்கு கிழக்கு இணைப்பு, காணி பொலிஸ் அதிகாரம் என்பவை தமிழர்களின் எதிர்பார்ப்பு. இவை நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகங்களிற்கு அப்பால், அவை நிறைவேற்றப்பட்டாலே அது எல்லோருடைய எதிர்பார்ப்பையும் நிறைவேற்றும்.

இந்த யாப்பு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று, சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும். பௌத்த பெரும்பான்மையினர் தமிழர்களின் உரிமைகளை அங்கீகரிப்பார்களா என்பது சந்தேகம் தான். சர்வஜன வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால், சிங்களவர்களோடு சேர்ந்து வாழலாமா என்ற வாக்கெடுப்பை வடக்கு கிழக்கில் நடத்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

**தீபம்: வடக்கு கிழக்கு இணைப்பு இல்லாமல், பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்குப் பதிலாக அதே போன்று வேறு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு சமஸ்டியும் இல்லாமல் ஒரு அரசியலமைப்பு கொண்டு வரப்படுமாயின் ஏற்றுக்கொள்வீர்களா?'**

**சிறிதரன்:** வடக்கு கிழக்கு இணையாத தீர்வுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளாது. அதேபோல பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட ஒரு அரசியல் திர்வுத்திட்டத்தையும் ஏற்கப்போவதில்லை. மக்கள் எங்களுக்குத் தந்த ஆணையை நீதியான முறையிலும் ஜனநாயக முறையிலும் மேற்கொள்வதே எங்களது தலையாய கடமை. அதிலிருந்த இம்மியளவும் நாங்கள் விலகமாட்டோம்.

**தீபம்: அண்மையில் நடந்த எழுக தமிழ் பேரணியில் நீங்கள் கலந்து கொள்வதாக இருந்ததாகவும், பின்னர் முடிவை மாற்றிக் கொண்டுவிட்டீர்கள் என்றும் கூறப்படுகிறதே?**

**சிறிதரன்:** தமிழ் மக்கள் தன்னெழுச்சியாக, ஜனநாயக வழியில் முன்னெடுக்கின்ற போராட்டங்களை நாங்கள் யாரும் தடுக்கவும் இல்லை. அதற்குக் குந்தகமாக இருக்கவும் இல்லை. ஆனால் அந்தப் போராட்டத்தில் நான் பங்கு கொள்வதாக எங்கேயும் அறிக்கையும் விடவில்லை. யாருக்கும் உத்தரவாதம் வழங்கவும் இல்லை. எங்களுடைய கட்சி சார்பாக தமிழ் மக்கள் பேரவையோடு நீண்ட நேரப் பேச்சுக்களில் ஈடுபட்டபோது மிக தெளிவாக பலவற்றை எடுத்துக் கூறியிருந்தோம். அதாவது இதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால் அரசோடு பேசிக் கொண்டிருக்கின்ற போது இரண்டு முகங்களை வெளிக்காட்டாமல் இந்த டிசம்பர் வரையுமான காலத்திற்கு நாங்கள் பொறுமை காக்க வேண்டுமெனப் பார்க்கிறோம். அதற்குப் பிறகு இரண்டு தரப்பும் இணைந்து போராட்டங்களை முன்னெடுப்பதில் எந்தத் தடையும் இல்லை என்று குறிப்பிட்டிருந்தோம். அந்தப் போராட்டங்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் நாங்கள் எந்த வார்த்தைகளையும் முன்வைக்கவில்லை.

**தீபம்: எழுக தமிழில் கலந்து கொள்ளாததற்கு இப்பொழுது ஒரு விளக்கம் சொல்கிறீர்கள். ஆனால், தர்க்கம் பிழைக்கிறதே...**

**சிறிதரன்:** எழுக தமிழ் பேரணியைச் செய்ததற்காக முதலமைச்சரை இனவாதியாச் சித்தரிப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சம்பந்தன் ஐயா பாராளுமன்றத்தில் தெளிவாக பதில் கூறியிருக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூட விக்கினேஸ்வரன் இனவாதியல்ல என்று கூறியிருக்கிறார். நாய்க்கு கல் எறிந்தால் எந்த இடத்தில் பட்டாலும் காலைத் தூக்குவது போல தமிழர்களுடைய உரிமைகள் தொடர்பாக நாங்கள் யார் பேசினாலும் சிங்களவர்கள் அதனை இனவாதக் கண்ணோட்டத்தோடு பார்ப்பது வழக்கமாகிவிட்டது. தென்னிலங்கையில் எதிர்க்கிறார்கள் என்பதற்காக நாம் அடங்கி, ஒடுங்கி உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாது. நாம் இந்த மண்ணின் பூர்வீக குடிகள். சிங்களவர்களிற்கு முன்னரே நீண்ட வரலாற்றைகொண்டவர்கள். நாங்கள் வந்தேறு குடிகளல்ல. எமது உரிமைகலளை கைவிட மாட்டோம்.

**தீபம்: அரசாங்கத்துடன் கூட்டமைப்பு பங்காளியாகிவிட்டதென கூட்டமைப்பிற்குள்ளேயே விமர்சனங்கள் எழ ஆரம்பித்து விட்டதே?**

**சிறிதரன்:** கூட்டமைப்பு அரசாங்கத்துடன் சேர்ந்திருக்கிறது என்ற கருத்து தவறானது. கூட்டமைப்பில் இருந்து கொண்டே அவ்வாறான விமர்சனங்களைச் செய்பவர்கள் யாரும் கூட்டமைப்பை விட்டு விலகிச் செல்லவில்லை. அவர்கள் கூட்டமைப்பில் இருந்து கொண்டே இன்னுமொருவிதமான கருத்தை வெளியே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கருத்துக்களை சொல்லும் உரிமை கூட்டமைப்பிலே இருக்கிறது. இவ்வாறான ஜனநாயக தன்மை கொண்ட கட்சி உலகில் எங்குமே இல்லை. இந்தியாவிலோ, அமெரிக்காவிலோ இவ்வாறு

**எழுக தமிழ் நடப்பதற்கு சில வாரங்களின் முன்னர் இதேவிதமான கோரிக்கைகளுடன் கிளிநொச்சியில் பேரணியொன்றை நடத்தியிருக்கிறீர்களே?**

**சிறிதரன்:** நாங்கள் கிளிநொச்சியில் நடத்தியது போராட்டமல்ல. ஒரு கவனயீர்ப்பை நடத்தினோம். சர்வதேசத்திற்கும் இலங்கை அரசிற்குமான கவனயீர்ப்பது. அங்கு நாங்கள் பிரகடனங்கள் வாசிக்கவில்லை. கூட்டமைப்பின் கட்சிகள் சேர்ந்து, பிரிந்து நின்று எழுச்சிப் பிரகடனங்கள் செய்யவில்லை. நாங்கள் மென்போக்கு அரசியல் காலகட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம்.

மலையக தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சியில் ஒரு போராட்டத்தை மேற்கொள்ள இருக்கிறோம். முஸ்லிம்கள் தாக்கப்பட்ட போதும் போராட்டத்தை மேற்கொண்டோம். மக்கள் சார்பாக பல்வேறு வகையான போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறோம். வலிகாமம் வடக்கிலே போராடியிருக்கிறோம். அந்தக் காணிகளை விடுவிப்பதற்கான வழக்குகளைத் தாக்கல்களை செய்திருக்கறோம். அவ்வாறான பல வழிகளைக் கையாண்டு இருந்தோம். அந்த வழிகளை நாங்கள் கைவிட வில்லை. ஆனால் சில சில சந்தரப்பங்களில் சில கால கட்டங்கள் வழங்கப்படுவதுண்டு. நாங்கள் அந்தச் சந்தர்ப்பத்தை இந்த அரசிற்கு வழங்கியிருக்கின்றோம்.

**தீபம்: உங்கள் கிளிநொச்சி பேரணியில் முன்வைத்த விடயங்கள்தானே எழுக தமிழிலும் முன்வைக்கப்பட்டது. எழுக தமிழிற்கு மட்டும் ஏன் தென்னிலங்கையில். இவ்வளவு எதிர்ப்பு?**

ஒரு கூட்டணிக்குள் இருந்து கொண்டு தேர்தல்களில் தோற்றுப் போன அணியோடு சேர்ந்து இன்னுமொரு அணியாக போராட்டங்களை முன்னெடுப்பதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மட்டும்தான் நடக்கிறது. உலகில் வேறெங்கும் இப்படி இல்லை.

**கேள்வி: தமிழரசுக்கட்சியில் அதிருப்தி கொண்ட அங்கத்துவ கட்சிகள் வடக்கு முதல்வர் தலைமையில் புதிய கட்சியொன்றை உருவாக்கும் சூழல் உள்ளதா?**

**சிறிதரன்:** முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் மிக நேர்மையானவர். அவர் கை சுத்தமானது. மனம் சுத்தமானது. அப்பழுக்கற்றவர். அரசியலுக்கு கூப்பிட்ட போது கூட கடுமையாகத் தயங்கியவர். ஆனால் அந்தக் காலகட்டத்தில் அவருடைய வருகையும் எழுச்சியும் எங்களுக்குத் தேவைப்பட்டது. அதனை சரியாக எடை போட்டுக் கொண்டவர் எங்கள் கட்சியின் தலைவர் சம்மந்தன் ஐயா.

விக்னேஸ்வரன் ஐயா இன்றைக்கும் கட்சித் தலைவர் சம்மந்தன் ஐயாவின் தலைமைக்கு கீழேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் வேட்பாளராக களமிறங்கிய அவருடைய பதிவுகள் அனைத்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கீழேயே இருக்கின்றது. கட்சியை உடைக்கும், கட்சிக்கு எதிரான அணியை உருவாக்கும் மலினமான அரசியலை செய்ய விக்னேஸ்வரன் ஐயா ஒரு காலமும் முனைய மாட்டார். அவர் அவ்வாறான எண்ணங்களைக் கொண்டவர் அல்ல.

விடுதலைப் புலிகள் கூட உயர்ந்த எண்ணங்களோடு அவரை பார்த்தார்கள். அது அவருக்கு நன்றாகத் தெரியும். அவருடைய தேவை புலிகளாலும் ஒரு காலத்தில் உணரப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் காலகட்டம் பொருத்தமற்றதாலேக இருந்திருக்கலாம். யுத்தத்தின் பின்னரான சூழலில் அவரது தேவை அவசியப்பட்டது. கட்சியின் தெரிவும் அவருக்காக உழைத்த தொண்டர்களுடைய பணியும் அவரை தமிழர்களுடைய ஆபாத்பாண்டவனாக கொண்டு வந்ததில் எந்தத் தவறும் இல்லை. அவ்வாறானவரை புரிந்து கொள்ளாத சிலர்; இவ்வாறான அபசகுனமான வார்த்தைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர் கட்சி தொடங்குவார் அவருக்குப் பின்னால் அணி வரும் என பொய்யான தகவல்களைப் பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

**தீபம்: சரி. அவர் கட்சிக்குள்ளேயே இருந்தால் அடுத்த தேர்தலிலும் அவர்தான் முதலமைச்சர் வேட்பாளரா, அல்லது வேறு யாருமா?**

**சிறிதரன்:** அவர் நல்ல மனம் படைத்த மனிதர். இறைபக்தி உள்ளவர். இறை சக்தி இருக்கிறது. அவர் சொன்ன சொல்லு மாறாத மனிதர். நேர்மையானவர். அவ்வாறானவரை அபகீர்த்தி செய்வதோ, சீண்டுவதோ காலத்திற்குப் பொருத்தமானதல்ல.

அடுத்த மாகாணசபைத் தேர்தலில் அனுபவம் வாய்ந்த வேட்பாளர் மாவை. சேனாதிராசா இருக்கிறார். எல்லா தகுதிகளை கொண்டிருந்த மாவை சேனாதிராசா கடந்த மாகாணசபை தேர்தலில் கட்சி தலைமை கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்னொருவருக்காக பாடுபட்டார்.

இந்த நல்ல மனசுள்ள மாவை சேனாதிராசா அடுத்த முறை பின்தள்ளப்பட சாத்தியக்கூறுகளும் இல்லை. அடுத்தமுறை மாவை சேனாதிராச முதல்வராவார். இதில் மாற்றங்கள் இல்லை. யாரும் இதற்கு தவறான வியாக்கியானங்களை வழங்க வேண்டிய அவசியமும் இல்லை.

பதவிகளில் தொடர வேண்டுமென்ற எண்ணங்களை விக்னேஸ்வரன் ஐயா கொண்டவரல்ல. ஏனென்றால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டு சமயத்தில் தலைவர் சம்மந்தன் ஐயா, நேரடியாகவே ஆள்விட்டு விக்னேஸ்வரன் ஐயாவிடம் தமிழரசுக்கட்சி தலைமையை ஏற்குமாறு கேட்டிருந்தார். இது பலருக்குத் தெரியாது. அவரிடம் நேரடியாக கேட்டதாக பத்திரிகைளில் வந்திருந்தாலும் அவரும் அவர் மிகத் தெளிவாகவே மறுத்திருந்தார்.

'நான் அவ்வாறான தலைமைகளில் எண்ணங்கொண்டவனல்ல. அந்தக் கட்சியினுடைய தலைமையை நடத்துகின்ற வல்லமையும் நேர்மையும் கொண்டவர் மாவை சேனாதிராசா. அவருக்கு பலமாக தமிழர்களின் உரிமைக்காக சேர்ந்து பயணிப்பேன்' என்று குறிப்பிட்டிருந்தார். அவ்வாறு நேர்மையான பார்வையுள்ள மனிதர் விக்கினேஸ்வரன் ஐயா; அவர் நினைத்திருந்தால் அன்றே அந்தப் பதவியைப் பெற்றிருக்க முடியும். ஆசை பதவி மோகம் இருந்திருந்தால் இன்று அவருடைய கையில் தமிழரசுக் கட்சி இருந்திருக்கும். யாரும் அவரை ஒன்றுமே செய்திருக்க முடியாத சூழல் இருந்திருக்கும். ஆனால் அவ்வாறான எண்ணங்களையோ பதவி ஆசைகளையோ பதவிகளுக்காக போராடுகின்ற மனநிலையோ விக்கினேஸ்வரன் ஐயா கொண்டவருமல்ல. அதேவகையான எண்ணங்களைக் கொண்ட மாவை சேனாதிராசாவும் பொருத்தமானவர். ஆகவே காலம் சரியானவர்களைத் தெரிவு செய்யும்.


முதலமைச்சர் தலைமையில் கட்சி உருவாகும். அந்தக் கட்சி அடுத்த மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் என்று கூறப்பட்டாலும் அப்படி நடக்காது.



**விக்னேஸ்வரன் ஐயா இன்றைக்கும் கட்சித் தலைவர் சம்மந்தன் ஐயாவின் தலைமைக்கு கீழேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். கட்சியை உடைக்கும், கட்சிக்கு எதிரான அணியை உருவாக்கும் மலினமான அரசியலை செய்ய விக்னேஸ்வரன் ஐயா ஒரு காலமும் முனைய மாட்டார்.**






# யாழில் ஒரு கூவம்

## வயிற்றை பிறட்டும் கழிவு வாய்க்கால்

பி.சியா

தமிழகத்தின் கூவம் ஆற்றை கேள்விப்பட்டிருப்பீர்கள். அழுக்காகி, துர்நாற்றம் வீசுவதாலேயே பிரபல்யமான ஆறு அது. கூவத்தைப்பற்றி நிறைய சினிமாப் பாடல்களும் வந்துவிட்டன. அந்த கூவத்திற்கு சவால்விடுவதைப்போல உருவாகிக்கொண்டிருக்கிறது யாழ்ப்பாணத்தில் ஒரு கால்வாய். சென்னை கூவத்தை பின்னுக்கு தள்ளிவிடும் விதமாக யர்ழ்ப்பாணத்தில் கூவம் கால்வாய் உருவாகிக் கொண்டிருக்கிறதென்பதே கசப்பான உண்மை.

யாழ் நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், நிறுவனங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு, நீர் என்பன தேங்கியுள்ள கால்வாயே இப்போது கூவமென பெயரெடுத்துள்ளது. கால்வாய் என்றால் நீர் ஓடிச்செல்வதென அர்த்தம். இதனை கால்வாய் என்றும் அழைக்க முடியாது. வெளியேற்றப்படும் நீர் வெளியேற முடியாமல் இதற்குள் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. யாழ்நகரத்தில் உள்ள உணவகங்கள், நிறுவனங்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் ஒரு பகுதி கடலுக்குள்ளோ அல்லது வேறிடத்திற்குளோ வெளியேற்றப்படாமல் நகரத்திற்குள்ளேயே தேக்கி வைக்கப்பட்டுள்ளதென்பதே கசப்பான அல்லது மூக்கை பொத்த வைக்கும் உண்மை!

யாழ்நகர மத்தியிலுள்ள வின்சர் சந்திக்கு அண்மையில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஐந்து மாடிக்கட்டிடத்திற்கு பின்பக்கமாக அமைந்துள்ள சிறியகுளத்தில் தொடங்கி, பண்ணை கடற்கரை வரையிலும் இந்த கால்வாய் செய்கிறது. எனினும், பெருமழை காலங்களில்தான் குளத்திலிருந்து கடல்வரை நீர்பாயும். ஏனைய காலங்களில் நீர் ஓட முடியாமல் தேங்கி நின்றுவிடும். காரணம், கால்வாயில் ஆங்காங்கே அடைப்பு ஏற்பட்டு விடுகிறது. வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகளின் பொறுப்பற்ற தனமும் கால்வாய் அடைபடுவதற்கு பிரதான காரணம்.




நீரை மாத்திரம் வெளியேற்ற உருவாக்கப்பட்ட கால்வாய்க்குள் கழிவுப்பொருட்களையும் கொட்ட, கால்வாய் இன்று நீர் ஓடிச்செல்ல முடியாத நீர்த்தேக்கமாக உருவெடுத்து நகரை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

இந்த கால்வாய் நகர மையத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் கீழாகவே செல்கிறது. கால்வாய் அடைபட்டதன் காரணங்களில் இதுவுமொன்று. கட்டிடங்களின் கீழாக செல்லும் கால்வாயை சுத்தம் செய்யும் வசதி யாழ் மாநகரசபையிடம் இல்லை. மூச்சுத்திணறல் உள்ளிட்ட பல ஆபத்துக்களை சந்திக்க வேண்டியேற்படும் அந்தபணியை செய்ய துப்பரவுப்பணியாளர்களையும் அமர்த்த முடியாது. ஆகவே, மாநகரசபை கையை விரித்துவிட்டது. விளைவு, கன்னங்கரேலென கழிவுநீர் கால்வாயில் தேங்கி அந்தப்பகுதியில் இருப்பவர்களை மூக்கை பொத்த வைத்துள்ளது. அதுதவிர, நுளம்பு பெருகும் ஆபத்தும் உள்ளது.

முறையான கழிவகற்றல் பொறிமுறை ஏற்படுத்தப்படாவிட்டால் நகரம் பெரும் விளைவை சந்திக்க வேண்டியிருக்கும். ஒருகாலத்தில் புல்லுக்குளம் பெரும் விஸ்தீரணத்துடன் இருந்தது. அதிக தண்ணீரையும் தேக்கிவைத்திருந்தது. இதனால் கழிவுநீர் தேங்கியபோது அதிகம் கண்டுகொள்ளப்படாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது புல்லுக்குளம் ஏப்பமிடப்பட்டு விட்டது. ஒரு பக்கத்தில் மண் நிரப்பி தனியார் பஸ் நிலையம் உருவாகிவிட்டது. மறுபக்கம் மண் நிரப்பி ஐந்து மாடி கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது. மனிதர்களின் நில ஆசை இயற்கை சமனிலையை குலைத்து அகற்ற முடியாத கழிவு வாய்க்காலொன்றை உருவாக்கியுள்ளது.

கால்வாயை சுத்தம் செய்ய வேண்டிய பணி யாழ் மாநகரசபையினுடையது. அவர்களின் மெத்தனமே இந்த ஆபத்திற்கு காரணம்.

புல்லுக்குளம் இன்று அபாய கழிவுத்தேக்கமாக மாறிவிட்டது. இயற்கைகடன் கழிப்பது, வர்த்தக நிலைய கழிவுகள் கொட்டுவதென அங்கு செல்வதற்கு விசேட பயிற்சி தேவையாக உள்ளது. புல்லுக்குளத்தில் மண் நிரப்பி புதிதாக உருவாக்கப்பட்ட ஐந்து மாடி வர்த்தகத் தொகுதியிலுள்ள பல கடைகளின் கழிவுகள் புல்லுக்குளத்தில்தான் கொட்டப்படுகின்றன. காலையில் வர்த்தக நிலையத்தைதிறப்பதற்குமுன்னர் சுற்றாடலை துப்பரவு செய்யும் வர்த்தகர்களின் குப்பை போடும் இடமும் புல்லுக்குளம்தான். மாநகரசபை துப்பரவு பணியாளர்கள் தற்காலிகமாக அந்தப்பகுதியில் குப்பையை சேர்த்து, வாகனங்களில் ஏற்றுகிறார்கள். சில சமயங்களில் இரண்டுநாள்வரை குப்பைகள் அங்கு இருக்கும். காற்றில், விலங்குகளால் சேதப்படுத்தப்படும் பொலித்தீன் கழிவுகள் குளத்திற்குள்த சிதறிச் சென்றுவிடுகின்றன.

அருகிலுள்ள உணவகங்கள் சிலவற்றின் மீதமான உணவுகள், கழிவுகளும் அங்கு கொட்டப்படுவதாக கூறப்படுகிறது. அங்கு கழிவுகளை கொட்டக்கூடாதென்ற பொறுப்புணர்வு வர்த்தகர்களிடமும் இல்லை. .

வர்த்தக நிலையங்களின் கீழாக செல்லும் கால்வாய் அடைப்பை போக்க, கூவம் கால்வாயை சுத்தம் செய்ய வலியுறுத்தி வர்த்தக நிலையங்கள் சில மாநகரசபை ஆணையாளரிற்கு கடிதம் அனுப்பியுள்ளனர். எனினும்,மாநகரசபைதரப்பில்மௌனம்தான் பதில் என்கிறார்கள்.

நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் சுகாதார நிலைமையை கிடுக்குப்பிடி கண்காணிப்பில் வைத்திருக்கும் பொதுச் சுகாதார பணியாளர்கள் யாருமே இந்த கழிவு வாய்க்கால் பற்றி அறிக்கையிடவே இல்லையா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

கழிவுவாய்க்காலில் நுளம்பு பெருகாமல் இருக்க மாநகரசபை மருந்து தெளிக்கிறார்கள். வாராவாரம் இது நடக்கிறது. ஆனால் தொற்று நோய் கிருமிகளை உற்பத்தி செய்வதை இது கட்டுப்படுத்துகிறதா என்பது தெரியவில்லை. விசிறப்படும் மருந்து அனைத்து விதமான தொற்றுக்கிருமிகளையும் அழிக்கிறதென்பதை உறுதிசெய்யும் முறையான ஆய்வுகள் நடந்ததாகவும் தெரியவில்லை. ஏனெனில், கழிவு வாய்க்காலிற்கும் வைத்தியசாலைக்குமிடையில் உள்ள தூரம் ஐநூறு மீற்றர் வரையே. நோயெதிர்ப்பு சக்தி குறைந்த, இலகுவில் தொற்றுக்கிலக்காகும் நோயாளர்கள் அங்கு இருக்கிறார்கள்.

கட்டிடகாடுகளிற்குள் ஒரு நீர்நிலை இருந்தால் அது சக்தியின், மகிழ்ச்சியின், நிம்மதியின் ஊற்றுவாயாகத்தான் இருக்க வேண்டும். துர்நாற்றத்தின் உற்பத்தியிடமாக இருக்க கூடாது. . இதற்கு அதிகாரிகள் மட்டுமல்ல,எல்லோரும் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும்.

### வாகீசன்

ஆணையாளர், யாழ்.மாநகரசபை

நாங்கள் அவசரப்பட்டு ஏதாவது செய்வதென்றால் அது மாநகரசபை நிதியை கொண்டுதான் செய்திருக்க வேண்டும். நகரத்தில் முறையான கழிவகற்றல் வசதியை செய்வதென்றால் மிகப்பெரும் நிதி வேண்டும். மாநகரசபையிடம் அது இல்லை. இதனால் நிதி வழங்குனர்களிற்காக காத்திருந்தோம். இப்பொழுது உலகவங்கி அதற்கு பணம் தந்துள்ளது. புல்லுக்குளம் மாத்திரமல்ல, மாநகரசபை எல்லைக்குள் 44 சிறிய குளங்கள் மாசடைந்துள்ளன. அவற்றையெல்லாம் புனரமைக்க, முறையான கழிவகற்றல் வசதியை செய்யும் திட்டத்திற்கு பணம் கிடைத்துள்ளது'.

53 மில்லியன் அமெரிக்க டொலர் திட்டம் இது. குளங்களை புனரமைத்து, மாநகரசபை எல்லைக்குள் உள்ள 60 கிலோமீற்றர் கால்வாய்களையும் புனரமைக்கவுள்ளோம். 5 வருடகால திட்டம் இது. அடுத்த வருடத்தில் பணிகள் ஆரம்பிக்கிறது. புனரமைப்பின் பின்னர் ஒவ்வொரு குளத்தின் பக்கத்திலும் குழாய்கிணறுகள் அமைக்கப்பட்டு, குளநீர் கிரமமாக பெறப்பட்டு பரிசோதிக்கப்படும். வர்த்தக நிலையங்களில் கழிவுநீர், கழிவு வெளியேற்றத்தில் கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. கால்வாய்க்கு அருகிலுள்ள வர்த்தக நிலையங்கள் நேரடியாக கழிவுநீரை வெளியேற்றும் வகையிலும், ஏனையவை தொட்டியில் சேமித்து மாநகரசபையிடம் ஒப்படைக்கும் விதமாகவும் நடைமுறை வரும்.

எல்லாவிடயத்திலும் அதிகாரிகளை குறைகூறிக்கொண்டிருப்பதை விட, மக்களும் பொறுப்புணர்வாக நடந்து கொள்ள வேண்டும். கழிவுகளை கூடைகளில் போட வேண்டும். குளத்தடி பற்றையாக இருக்கிறதென்பதற்காக அதற்குள் இயற்கைக்கடன்களை கழிப்பதை தவிர்க்க வேண்டும். வர்த்தக நிலையங்கள் கழிவகற்றலில் பொறுப்பாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்தால் நகரில் துர்நாற்றமும் இல்லை. அசுத்தமும் இல்லை.





# சுமந்திரன் ❤ கஜேந்திரகுமார்



கடந்தவாரம் யாழ் ஊடகஅமையத்தில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியிருந்தார். அதில் அவர் தெரிவித்த கருத்துக்கள் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களிற்கு அவலாக இருந்தது. முகநூலில் அதை வைத்து கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

"எங்கள் தோல்விகளை பற்றியே சுமந்திரன் கதைத்துக் கொண்டு திரிகிறார். ஏனப்பா அதையே கதைத்துக் கொண்டு திரிகிறீர்கள். போகுமிடமெல்லாம் எங்களை பற்றியே கதைக்கிறார். எங்களுடன் ஏதாவது இரகசிய காதலோ தெரியாது" இது அவர் கதைத்ததன் ஒரு பகுதியின் சாரம்.

தமிழ்தேசியம் பேசும் கட்சிகளில் அரசியல் தீர்வு, அரசியலமைப்பு தொடர்பில் அறிவுசார் உரையாடல்களில் ஈடுபடத்தக்கவர்கள் அதிகளவில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியில் உள்ளார்கள் என்ற அபிப்பிராயம் பொது வெளியில் உள்ளது. தமிழர்களின் அரசியல் இலக்கு தொடர்பில் கோட்பாட்டு விளக்கங்களுடன் அந்தக்கட்சி பேசி வருகிறது. பல்கலைக்கழக மாணவர்கள், சட்டத்தரணிகளில் கணிசமானவர்கள் கட்சியுடன் இருக்கிறார்கள் என்பதை போன்ற அபிப்பிராயமும் உள்ளது. இதெல்லாம் அந்தக்கட்சி மீது அறிவுசார் பிம்பமொன்றை விழுத்தியுள்ளது.

எனினும், தமிழ்தேசிய மக்கள் முன்னணி தேர்தல் அரசியலில் மேலெழும் சக்தியாக உருவெடுக்கவில்லை. இதற்கு காரணம் என்ன!

அன்றைய பத்திரிகையாளர் சந்திப்பு தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் அரசியலின் ஒரு அளவுகோல். அண்மைய சில வருடங்களில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் அரசியல் சுமந்திரனை முன்னிறுத்தியதாகவே மாறியிருக்கிறது. ஆரம்பத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் குறைகளில் அரசியல் செய்ய ஆரம்பித்தது. இப்பொழுது சுமந்திரனின் குறைகளில் அசியல் செய்ய ஆரம்பித்திருப்பது பெரும் வீழ்ச்சியே.


அன்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் சுமந்திரனிற்கு எதிரான விமர்சனத்தில் விஞ்ஞானபூர்வ பார்வை கஜேந்திரகுமாரிடம் இருக்கவில்லை. திருநாவுக்கரசின் புத்தக வெளியீட்டில் நடந்த எந்த நிகழ்வையும் இந்த பத்தியாளா ஆதரிக்கவில்லை. சுமந்திரன் தனது உரையில் சில விடயங்களை தவிர்த்திருக்க வேண்டுமென்பதே பத்தியாளரின் தனிப்பட்ட கருத்தும் கூட. ஆனால் தவிர்த்திருக்க வேண்டிய உரைகளை கூட அதிகபட்ச விஞ்ஞானத்தன்மையுடனும், தர்க்கத்துடனும்தான் அவர் முன்வைத்தார். தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் தோல்விகள் பற்றிய சுமந்திரனின் கருத்துக்கள் விஞ்ஞானபூர்வமானவை. ஆனால் அதற்கு பதில் சொல்ல வந்த கஜேந்திரகுமாரிடம் அப்படியான தர்க்கரீதியான பலம், விஞ்ஞானபூர்வ தன்மை இருக்கவில்லை.

ஈ.பி.டி.பியின் அரசியல் தோல்வியும் இப்படித்தான் நிகழ்ந்தது. ஈ.பி.டி.பி தனக்கான தனித்துவமான அரசியல் உருவாக்கம் செய்யவில்லை. மாறாக தமிழ்தேசிய கூட்டமைப்பில் பிழை காணும் அரசியல்தான் செய்தது. தேர்தல் மேடைகில் பெரும்பாலான ஈ.பி.டி.பி முக்கியஸ்தர்களின் பேச்சை அவதானித்தால் விடயம் புரியும். தமிழ்தேசிய கூட்டமைப்பை குற்றம் காண்பதிலேயே நேரத்தை செலவிடுவார்கள்.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் உருவாக்கத்தில் மக்கள் நலன்சார்ந்த சிந்தனைகள் இருந்திருக்கலாம். ஆனால் அது ஒன்றே தகுதியாகாது. மற்றவர்களை விமர்சித்து, விமர்சனங்களில் அதிக கவனம் கொடுக்காமல் தமக்கான அரசியல்பாதையை உருவாக்க வேண்டும்.

முகப்புத்தகத்தில் உள்ள தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஆதரவாளர்களின் அரசியல் எனப்படுவது சம்பந்தன், சுமந்திரனை கலாய்த்து மீம்ஸ் போடுவது என்ற அளவிலேயே உள்ளது. உலகம் மிகப்பெரியது. தமிழர்களின் அரசியல் பிரச்சனையும் மிகப்பெரியது. தமிழர்களின் அரசியலில் குதித்தால் அதற்கு தக்கதாக மாறிக்கொள்ள வேண்டும். ஏனெனில், மாறாததெதுவும் நிரந்தரமானதல்ல!

நம்மாழ்வார்



# நீங்களா... யார் குற்றவாளிகள்?

கடந்தவாரம் இணையத்தளங்களில் அதிகமாகவும், தவறாகவும் விவாதிக்கப்பட்ட விடயம் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகன கொள்வனவு விவகாரம். வரி செலுத்தாமல் எந்தெந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வாகனங்களை கொள்வனவு செய்தார்கள், எந்தெந்த வாகனங்களை கொள்வனவு செய்தார்கள் என்ற பட்டியல் வெளியானது. அதனை வைத்து வரி ஏய்ப்பு செய்தவர்கள், வாகன கொள்வனவில் மோசடி என்ற தப்புத்தப்பான தலைப்புக்களில் தமிழ் ஊடகங்களில் செய்தி வெளியிடப்படியிருந்தன.

சட்டத்தரணி கொடித்துவக்கு இந்த விபரத்தை வெளிப்படுத்தி, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடமும் முறையிட்டிருந்தார். தங்களால் நடவடிக்கை எடுக்க முடியாதென அவர்கள் கையை விரித்து விட்டார்கள்.

ஏன் கையை விரித்தார்கள்? அது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட, எம்பிக்கள் உழைப்பதற்கு வசதியாக ஏற்படுத்தப்பட்ட விடயம். எம்பிக்கள் தீர்வை வரியின்றி வாகனங்களை இறக்குமதி செய்ய அரசு அனுமதிக்கிறது. இந்த சலுகையை பயன்படுத்தி, பத்திரத்தின் வரப்பிரசாதத்தை பயன்படுத்தி பெறுமதியான வாகனத்தை இறக்கும் வசதி பெரும்பான்மையான எம்பிக்களிடம் கிடையாது. அல்லது தேவை இருக்காது. அவர்கள் பத்திரத்தை வர்த்தகர்களிற்கு விற்கிறார்கள். அரசுக்கும் இது தெரியும். வெளிப்படையாக சொன்னால், ஒன்றில் வாகனத்தை வாங்குங்கள் அல்லது பத்திரத்தை விற்று பணத்தையாவது எடுக்கும் வழியை பாருங்கள் என்பதுதான் இந்த நடைமுறையின் அர்த்தம்.

இதில் எம்பிக்கள் தவறிழைத்தவர்கள் கிடையாது. தேவையெனில் அரசு உருவாக்கிய நடைமுறையில் பிழை சொல்லலாம். ஆனால் தனியே அரசிலும் பிழை சொல்ல முடியாது. இதற்கு மக்களும் பொறுப்பு சொல்ல வேண்டியவர்களாவார்கள். எப்படியென்பதை பார்ப்போம்.

தற்போதைய தேர்தல்முறையில் அதிக பணம் வைத்திருப்பவர் வெற்றியடையலாம். அண்மைய தேர்தல் முடிவுகளை எடுத்துக் கொண்டால் இது புலப்படும். மக்கள் நல சிந்தனை கொண்ட, பொதுவாழ்வில் உள்ள பலர் மக்கள் பிரதிநிதி என்ற அந்தஸ்தை பெறவில்லை. முதன்முறையாக போட்டியிட்ட பணம்படைத்த வர்த்தகர்கள், வேறுதுறைகளை சேர்ந்தவர்கள் வெற்றியடைந்தார்கள். இதன் அர்த்தம் என்ன?

தேர்தலில் அதிகம் பணம் செலவிட முடியாதவர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பினர். கடந்த பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து வாக்களிப்பு தினம் வரையில் அந்த கட்சியின் பெரும்பாலான வேட்பாளர்களின் நாளாந்த செலவு ஒரு இலட்சம் ரூபாய். இது ஒப்பீட்டளவில் மத்திமமான தொகை. மிக அதிகமாக செலவிட்டவர்களும் உள்ளனர்.

கடந்த தேர்தலில் பிரசாரகாலம் கிட்டத்தட்ட 45 நாட்கள் என வைத்தால், மேலதிக தேவைகளையும் கணக்கிட்டு ஒரு வேட்பாளர் 50 இலட்சம் ரூபாயை செலவிடுகிறார் என வைக்கலாம். இப்படி பணம் செலவிட தயாரில்லாதவர் போட்டியிடுவதில் அர்த்தமில்லையென்பதுதான் தற்போதைய நிலை. இதற்கு தேர்தல் முறையில் மட்டும் குற்றம் சொன்னால் போதுமா? வாக்காளர்களில் எந்த பொறுப்பும் இல்லையா?

தேர்தல் நமது அதிமுக்கிய ஜனநாயக கடமையென்ற உணர்வு குறைந்து செல்கிறது. வாக்களிப்பு வீதங்கள் இதை உறுதிசெய்கின்றன. வாக்களிப்பவர்களும், வீடு தேடிவரும் பிரசார துண்டுப்பிரசுரங்களிற்காக காத்திருக்கிறார்கள். அதை பார்த்து வேட்பாளர்களை அறிந்து கொள்பவர்கள் தான் பெரும்பாலானவர்கள்.


பொருள் கொடுத்து, பணம் கொடுத்து வாக்கு பெறலாம் என்ற நிலை உருவாகிவிட்டது. சனசமூக நிலையங்கள், விளையாட்டு கழகங்கள், பொது அமைப்புக்களிற்கு உதவிகள், பணம் வழங்கப்படுவதன் பின்னணி வாக்குத்தானே?

பிரசாரம் செய்ய ஆள்பிடிக்க, அமைப்புக்கள், மக்களிற்கு உதவி செய்ய, சுவரொட்டி, விளம்பரத்திற்கு செலவிட, கூட்ட ஒழுங்குகளிற்கு செலவிட எல்லாம் பணம் தேவை. வெற்றிபெற்றதும் இதனை ஈட்டிக்கொள்ள அவர்களிற்கு ஒரு வாய்ப்பு இல்லாதுவிட்டால், ஊழல் மோசடிகளில்தானே ஈடுபடுவார்கள்?

எம்பிக்கள் செய்யும் சலுகையை வாக்களிக்கும்போது கவனத்தில் எடுக்காமல், சரியான வேட்பாளரை ஆதரிப்பேன் என்ற முடிவை நாம் ஒவ்வொருவரும் எடுக்காதவரை, அதிக சலுகை செய்யும் வேட்பாளர் தானே வெற்றியடையலாம். செலவிட்ட பணத்தை மீட்டெடுக்க அவர் என்ன செய்வது?

ஆகவே, தேர்தல்முறையில், நமது வாக்களிப்புமுறையில் உள்ள தவறுகளை சீர்செய்து ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதே முதல்பணி.





ராணிமலர், விஜிதினி வீடு

# சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்தும் தனிக்குடும்பம்

## அடர்ந்த காட்டிற்குள் ஒரு திகில் கதை



திலக்ஸ் ரெட்ணம்

மட்டக்களப்பின் எல்லையோர கிராமங்கள் மெதுமெதுவாக சிங்கள மயப்பட்டு வரும் நிலையில் அடர்ந்த காட்டோரம் அமைந்துள்ள கிராமமொன்றில் தன்னந்தனியாக குடியிருந்து சிங்கள ஆக்கிரமிப்பிற்கு எதிரான அரணாக இருக்கிறார் ஒரு இளம்தமிழ் பெண். கிராமத்தை விட்டு வெளியேறாமல் தனது பிள்ளைகளுடன் தன்னந்தனியாக வாழும் அந்தப் பெண்ணின் துணிச்சல் கதை இது. கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் அந்தப் பகுதிக்கு சென்றதன் பின்னரே தனித்து வாழும் பெண்ணின் கதை உலகிற்கு வெளித் தெரிந்துள்ளது.

பட்டிப்பளை பிரதேசசெயலகத்திற்குட்பட்ட கறுவாச்சோலை, புளுக்குனாவ, கெவுளியாமடு, கச்சக்கொடி சுவாமிமலை ஆகிய கிராமங்கள் தமிழர்களின் பூர்வீக நிலங்கள். எனினும், தற்போது தமிழ்களிடமிருந்து மெதுமெதுவாக கைநழுவி சென்று கொண்டிருக்கிறன. இந்தக்கிராமங்கள் மட்டக்களப்பு அம்பாறை எல்லைக் கிராமங்கள். அண்மையகாலங்களில் தமிழர் காணிகள் அபகரிப்புக்குள்ளாகி அடாத்தாக புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு சிங்களமய மாக்கப்பட்டு வருவது தொடர்பான செய்திகள் அடிக்கடி வருவது வழக்கமாகி விட்டது. அதே ஆபத்தை இந்த கிராமங்களும் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

கறுவாச்சோலை கிராமத்தில் குடியிருக்கிறார்கள் விநாயகலிங்கம் ராணிமலர் தம்பதிகள். அடர்ந்த காட்டோரம் உள்ள வயல்வெளியில் சிறிய குடிசையமைத்து வாழ்ந்து வருகிறார்கள். இந்த கிராமத்திற்கு அருகிலுள்ள கெவுளியாமடு தமிழர்களின் பாரம்பரிய நிலம். ஆனால் இன்று அங்கு மருந்துக்கும் தமிழர்களை கண்டுபிடிக்க முடியாது. அந்த ஆபத்து கறுவாச்சோலைக்கும் வந்துவிடக்கூடாதென்பதற்காக கிராமத்தின் எல்லையோரம் உள்ள தமது குடிசையை விட்டு வேறிடம் செல்லாமல் அங்கேயே வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் கிராமத்திலிருந்த மற்றையவர்கள் வெளியேறிச் சென்றுவிட்டார்கள்.

1983ம் ஆண்டு 105 குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் வாழ்ந்தன. தற்போது ஒரேஒரு குடும்பமே இருக்கிறது. அருகில் உள்ள கெவுளியாமடு கிராமத்தில் 345 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அங்கே இரண்டு விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. புளுக்குணாவையில் ரஜமஹாவிகாரையும் அமைக்கப்பட்டு அதனருகே சில வரலாற்றுச் சுவடுகள் பாதுகாக்கப்படுகின்றன. அந்த கிராமத்தின் வீதிகள் காப்பெற் இடப்பட்டு விட்டன. தெற்கு சிங்கள மக்கள் சுற்றுலாவிற்கும் வந்து செல்கின்றனர்.

கறுவாச்சோலையில் ராணிமலர், கணவன் விநாயகலிங்கம், மகன் விஜிதினி ஆகியோர் குடியிருக்கிறார்கள். அவர்களை சுற்றியுள்ள கிராமங்கள் சிங்களக் கிராமங்களாகிவிட்டன. தனது சொந்தக்களை காண, தமிழர் பிரதேசத்தில் பொருட்கள் வாங்க 60 கிலோமீற்றர் சைக்கிளில் பயணம் செய்கிறார். இப்படி பயணம் செய்துதான் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிச் செல்கிறார். நாங்கள் சென்றபோது அவர் பொருட்கள் வாங்க கிராமத்தைவிட்டு வெளியேறிவிட்டார்.

ராணிமலர் தமது வாழ்க்கை பற்றி பேசினார். 'நான் சின்னவயசில இருந்து இங்குதான் இருக்கிறேன். 1983ம் ஆண்டு இஞ்ச 105 குடும்பமும் பிறகு 2007 இடம்பெயர்ந்து திருப்பி குடியேறும் போது 15 குடும்பமும் இருந்தம். ரெண்டு வருஷத்துக்கு மேலாக என்ட குடும்பம் மட்டும்தான் இங்க இருக்கம். தண்ணி இல்ல. திவுளானகுளத்தில இருந்து வாற வாய்க்கால்ல பூவல் தோண்டித்தான் தண்ணிகுடிக்கம். கறண்டும் இல்ல. சமான் வாங்குற என்டாலும் மெயினுக்குத்தான் போகனும். இந்தபிள்ளையையும் இங்க இருக்கிற சிங்களப் பள்ளியிலதான் சேத்திருக்கன். இந்த நிலத்தில செய்யிற விவசாயத்த வச்சுத்தான் நாங்க வாழ்றம்' என்றார்.



**கோவிந்தன் கருணாகரம் (ஜனா)**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

கெவுளியாமடுவில் இரு விகாரைகளும், புளுக்குநாவையில் ஒரு ரஜமஹாவிகாரையும் கட்டப்பட்டுள்ளது. கச்சக்கொடிசுவாமிமலையில் 65 குடும்பங்கள் மாத்திரமே இருக்கின்றார்கள். அங்குள்ள வயல்கள் தமிழர்களுக்கு சொந்தமானவை. பருவகாலத்தில் சில தமிழர்கள் சென்று வயல் செய்கின்றனர். காணிச் சொந்தக்காரர்கள் அங்கு சென்று முன்பு மாதிரி குடியிருக்காவிட்டால் காணிகள் பறிபோகும் அபாயம் உள்ளது. எமது எல்லையை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் காணிச் சொந்தக்காரர்களை குடியேற்ற வேண்டிய தேவை நம் அனைவருக்கும் உண்டு. காணிச் சொந்தக்காரர்களும் இதை கவனத்தில் கொள்ளவேண்டும். உங்களால் அங்கு இருக்க முடியாவிட்டால் குடியேறக்கூடிய, காணிகள் இல்லாத தமிழர்களுக்கு கொடுத்து அவர்களையாவது குடியேற்ற முன்வரவேண்டும். இவர்களுக்கு சூரியப்படலம் (solar power) மூலமான மின்சார வசதியை நான் ஏற்படுத்திக் கொடுப்பேன்.

கறுவாச்சோலையில் காட்டுயானைகளின் அட்டகாசம்தான் அதிகம். ராணிமலரின் வீடும் பல தடவை யானையால் சேதமாக்கப்பட்டுள்ளது. அவர்களின் கல்வீட்டை தரைமட்டமாக்கியே விட்டன. சிதைந்த நிலையில் பக்கத்தில் அந்த வீடும் உள்ளது. யானைகள் இருக்கும்வரை கல்வீடு தமக்கு எட்டாக்கனியென்கிறார் ராணிமலர்.

அது யானைகள் நிறைந்த காடு. மனிதர்களை போல யானைகள்தான் அவர்களை எதிர்ப்படுகிறது.

'எங்கட வீட்டை பலதடவைகள் உடைச்சிருக்கு. ஆனா எங்கள கடவுளே என்டு ஒண்டும் செய்யல. கடைசியாகத்தான் வீட்டை தரைமட்டமாக்கும் போது நாங்க எழும்பித்து ஓடின. அப்பவும் எங்களுக்கு ஒண்டும் செய்யல. ஒருதடவ ஆறு யானைகள் ஒன்டாக வந்திச்சு. வந்து அதுகளின்ட பாட்டில போச்சுது. இரவுல வரும் என்டா நாங்க தீப்பந்தத்த கொழுத்தி சுத்துவம். பயந்து ஓடிரும். ஒருநாள் ஒரு யானை காலில காயத்தோட முடியாமல் விழுந்து

தொடர்ச்சி அடுத்த பக்கம்...



புதிதாக முளைத்த விகாரை



யானை தரைமட்டமாக்கிய வீடு



# தாடி வைக்க முடியாதா முஸ்லீம் மாணவர்கள்?

அன்வர் இஸ்மாயில்

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவரொருவர் தாடி வைத்திருந்தார் என்ற காரணத்தால் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டது முஸ்லீம்கள் மத்தியில் பெரும் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. வட்ஸ்அப், பேஸ்புக், இணையத்தளங்கள் வழியாக இதற்கு பெரும் எதிர்ப்பு கிளப்பப்பட்டுள்ளதுடன், முஸ்லீம்களின் அடையாளம் பேணல் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்த கருத்துக்கள் விரைவாக சென்றடைவதையும் அவதானிக்க முடிகிறது. மறுபுறத்தில், மத அடையாளங்களை முன்னிறுத்தி உணர்ச்சியூட்டும் பேச்சுக்கள் தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்திவிடுமென்ற அச்சம் கலந்த குரல்களும் ஒலிக்கின்றன. ஆனால், அவற்றையும் கடந்து முன்னைய குரல் தீவிரம் பெறுகிறது.

நீக்கப்பட்ட மாணவனின் தந்தை கிழக்கில் பிரபல இஸ்லாமிய மார்க்கப் பிரச்சாரகர். 'என்னுடைய மகன் இஸ்லாமிய மார்க்கத்தில் வலியுறுத்தப்பட்ட ஒரு கடமையையே நிறைவேற்றியுள்ளார். இதனால் எந்தவொரு ஒழுக்க நெறியும் சீர் குலையப்போவதில்லை. அத்தோடு என்னுடைய மகனுக்கு முகத்தில் சவரம் செய்தால் அது ஒவ்வாமையை ஏற்படுத்தும் என்ற விளக்கத்தையும் கூறியுள்ளார்.


எனினும், பாடசாலை நிர்வாகம் அதனை ஏற்காமல் மாணவனை நீக்கஞ் இப்பொழுது பரபரப்பான விடயமாகியுள்ளது. பாடசாலையில் யாரும் தாடிவைத்துக் கொண்டு வர முடியாதென்ற நடைமுறை யுள்ளது. அதனை சரியாக கடைப்பிடித்தோம் என பாடசாலை நிர்வாகம் விளக்க மளித்துள்ளது.





**மா**ணவர் தாடி வைத்துள்ளார் என்ற காரணத்தை கூறி பாடசாலையிலிருந்து இடைநீக்கியுள்ளது. மார்க்க கடமையை நிறைவேற்றவும், ஷேவிங் செய்தால் அல்ர்ஜி ஏற்படும் என்பதாலேயே தாடி வைத்துள்ளார் என மாணவனின் தந்தை விளக்கமளிக்க, அதற்கான மருத்துவ சான்றிழை பெற்றுத்தருமாறு பாடசாலை நிர்வாகம் கூறியுள்ளது. மாணவனிற்குள்ள அலர்ஜியை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் உறுதிசெய்யும் மருத்துவ சான்றிதழை பெற்றதாகவும், வலயக்கல்விப்பணிப்பாளரினால் அது உறுதி செய்யப்பட்டு பாடசாலையில் வழங்கியபோதும் அதனை கணக்கெடுக்காமல் மாணவனை பாடசாலையிலிருந்து நீக்கியமாக மாணவன் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பாடசாலையிலிருந்து மாணவனை நீக்கிய விடுகைப்பத்திரம் (Leaving Certificate) மாணவன் பாடசாலையில் சேர்க்கப்பட்டதை மறைக்கும் விதமாக தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் மாணவனிற்கு ஆதரவானவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.


ஆதார வைத்தியசாலை - அக்கரைப்பற்று
BASE HOSPITAL - AKKARAIPATTU
To Whom it may Concern:
Medical Certificate
Details of the Candidate

மத அடையாளம் சார்ந்த விவகாரங்கள் இலகுவில் பற்றிப்படர்ந்து விடும். இந்த விவகாரமும் இன்று முஸ்லீம்கள் மத்தியில் சூடான விவாதப்பொருளாக மாறிவிட்டது.

முஸ்லீம்கள் பர்தா அணியலாமா. மத அடையாளங்களை வெளிப்படுத்தலாமா என்ற சர்ச்சை உலகளாவிய சர்ச்சை தோற்றுவிக்கப்பட்டுள்ள சமயம் இது. முஸ்லீம்களிற்கு எதிரான கொள்கையுள்ளவர்கள் ஏற்படுத்தும் கட்டுப்பாடுகள் முஸ்லீம்களின் மத உணர்வுகளை காயம்செய்ய, உலகளாவிய விவாதப்பொருளாக மாறியுள்ள காலம் இது. இந்த சமயத்தில் தாடி விவகாரம் மேலெழுந்துள்ளது முஸ்லீம்களின் அடையாள வெளிப்படுத்தல் பற்றிய விவாதத்தையும் தூண்டியுள்ளது.

இந்த விவகாரம் முகநூலில் தீவிரமாக விவாதிக்கப்படுகிறது. முஸ்லீம் பாடசாலைகளில் மாணவர்கள் தாடி வைத்திருப்பதில் கறாரான கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதில்லை. அவர்களிற்கும் ஒரு எல்லையுள்ளது. இலேசான தாடியை கவனிக்காமல் விட்டுவிடுவது வழக்கமான ஒன்றுதான். ஆனால் தாடியை அதிகமாக வளர்க்க தொடங்கும்போதுதான் சிக்கல் ஆரம்பிக்கிறது. ஏனெனில் தாடியை பாடசாலை சட்டவிதிகள் அங்கீகரிக்கவில்லை.

பாடசாலை அரசினுடையது. அரச விதிமுறைகளிற்கு அமைய இயங்க வேண்டியது. மத நிறுவனங்களை போல பாடசாலைகள் இயங்க முடியாதென்ற விதிமுறைகள் உள்ளன. அதனால் இந்த விவகாரத்தில் பாடசாலையை குற்றம்சாட்டுவது பொருத்தமானதாக தெரியவில்லை. மத அடையாளங்களை வெளிப்படுத்தும் உரித்துக்களை சட்டபூர்வமாக பெறும் முயற்சிகளில் ஈடுபட முஸ்லீம் அரசியல் தலைமைகளிற்கு அழுத்தம் கொடுக்கலாம்.

பாடசாலைகளில் முஸ்லீம் மாணவர்கள் தாடி வைத்துக்கொள்வது தொடர்பில் முஸ்லீம் சமூகத்திற்குள்ளேயே இரண்டு விதமான கருத்துக்கள் இப்பொழுது எழுந்து கொண்டிருக்கிறது. பாடசாலை விதிமுறையை மீறி தாடி வைக்க கூடாது, மார்க்க கடமையை நிறைவேற்றும் வகையில் தாடி வைக்க வேண்டும் என்ற இரண்டு கருத்திலும் மார்க்க கடமைக்கு எதிரான புள்ளிகள் இல்லை. பாடசாலையில் தாடி வைக்க கூடாதென்ற கருத்து, பாடசாலை விதிமுறையை மதிக்க வேண்டுமென்பதுதான்.

மத அடையாளங்களை பொது இடங்களில் வெளிப்படுத்தும் உரிமை தொடர்பில் புத்திஜீவிகளுடனான கலந்துரையாடல் அவசியம். அடையாளங்களை வெளிப்படுத்த முடியாத பொதுச்சூழல் பற்றிய மீள்பார்வை அவசியம். அது சரியானதா என்ற விவாதங்கள் அவசியம். சரியானவற்றை தொடரலாம். பிழையானவற்றை சுட்டிக்காட்டி, உரிமைகளை நிலைநாட்டலாம்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகள் நடந்து கொண்டிருக்கும் சமயம் இது. இப்பொழுது தூங்கினால் மீண்டும் விழித்துக்கொள்ள நீண்டகாலம் எடுக்கும்.

சமூகவலைத்தளங்கள், வட்ஸ்அப்பில் உணர்ச்சியூட்டும் கருத்துக்களை பரப்பாமல், அறிவுபூர்வ கருத்தாடல்களை நிகழ்த்துவோம். நமக்கு எது தேவையென்பதை கலந்துரையாடல்கள்தான் வெளிச்சம் போடும்.

---

கிடந்து எங்கள தும்பிக்கையால கத்திகத்தி கூப்பிட்டிச்சு. நாங்க பயத்துல போகல. அது எழும்பி கெந்திகெந்தி நடந்துபோய் ரெண்டுநாளில செத்து போச்சுது' என்றார். ராணிமலரின் மகள் விஜிதினி தற்போது பாலர் பாடசாலை செல்லும் குழந்தை. ஆனால் அருகில் எந்த தமிழ் பாடசாலையும் இல்லாததால், சிங்கள மொழியில் கல்வி கற்க ஆரம்பித்துள்ளார்.

கெவுளியாமடுவிலுள்ள சிங்கள பாடசாலைக்கு சென்று வருகிறார். காட்டுவழியால் யானை ஆபத்திற்கு மத்தியில் சென்று வருகிறார். யானைப்பயம் அவரிடம் இருக்கவில்லை. தினமும் மலைக்குன்றில் அமர்ந்து யானைகள் கூட்டமாக உணவு உண்பதை பார்த்து ரசிக்கிறார் இந்த குழந்தை.

அருகிலுள்ள கச்சக்கொடிசுவாமிமலையில் 65 தமிழ் குடும்பங்கள் மாத்திரமே உள்ளன. இந்த கிராமமும் அடிப்படை வசதிகள் இல்லாமல் உள்ளது. யானை அபாயத்தை எதிர் கொண்டுள்ளது.



'இந்தக் கிராமத்தில் நாங்கள் பலவருஷங்களாக இருக்கம். ஆனையும் எங்கட வீடுகள தரைமட்டமாக்கி போட்டுது. இங்க இருந்த பலகுடும்பங்கள் வெளி இடங்களக்க போய்ட்டாங்க. நாங்களும் இந்த அரசாங்கத்த நம்பி வாழ்ந்து பிரியோசனம் இல்ல. யாருமே எங்கள பாக்கிறாங்கல்ல. வீடு கேட்டு போனா, என்னத்துக்கு வீடுஞ் ஏன் பிள்ளைகளை பெத்தெடுக்கீங்க அளவோட இருக்கனும் என்கின்ற மாதிரியான கதைகள கதைச்சு எங்களையெல்லாம் ஏனோதானோ என்ற மாதிரி நடாத்துறாங்க. நாங்களும் கொஞ்சகாலம் இருந்திட்டு மற்ற ஆக்கள போல வெயின்ல வாழலாம் என்டுதான் யோசிச்சிருக்கம்' என்பது அந்த கிராம மக்களின் ஏகோபித்த குரல். இதன் அர்த்தம் என்னவென்றால், இன்னொரு தமிழ் கிராமமும் சிங்கள மயப்படப் போகிறது.

அங்கே ஒருபிள்ளையார் கோவில் உள்ளது. தூர்ந்துபோன நிலையில் கவனிப்பாரற்று பற்றைகளால் மூடிய நிலையில் ஆலயம் உள்ளது. அதற்கு அருகிலேயே விகாரையொன்றும் உருவாகிவிட்டது. சிங்கள குடியேற்றத்தின் வரவை கட்டியம் கூறுகிறது விகாரை. காலங்காலமாக தமிழர் வாழ்ந்த பூமி இன்று சிங்களவர்களின் பூர்வீக நிலமாக மாறிக் கொண்டிருக்கிறது. கறுவாச்சோலையில் சிங்களவர் ஒருவர் தமிழரின் காணிகளை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்கிறார். விரைவில் இந்த எண்ணிக்கையும் பல்கி பெருகிவிடும்.

பூர்வீகநிலங்களிலிருந்து மக்கள் வெளியேறியதற்கு காரணம் அடிப்படை வசதிகள் இல்லாததுதான். ஆனால் சிங்கள மக்கள் குடியேறும்போது எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, காப்பெற் வீதி இடப்படுகிறது. நரம்பு புடைக்க பேசும் நமது மக்கள் பிரதிநிதிகளின் திட்டமிடல் குறைபாடும் இதற்கு முக்கிய காரணம்.

எல்லைப்புற கிராமங்களில் வாழ்பவர்களிற்கு வீட்டுத்திட்டம், நீர், மின்சாரம், கல்வி, போக்கவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால் மக்கள் பிரதிநிதிகள் மேடைகளில் வாய்கிழிய பேசிக்கொண்டிருக்க, பாரம்பரிய தமிழ் கிராமங்கள் காணாமலேயே போய்விடும்.



பச்சை குத்திக் கொண்ட பின் தன் உதவியாளர்களுடன் எம்.ஜி.ஆர். எடுத்துக் கொண்ட புகைப்படம்.

# திரையுலகில் முடிசூடா மன்னர்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** எப்போதுமே எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செயல்பட்டவர் அல்ல. திரையுலகில் முடிசூடா மன்னராக இருந்தபோதும் சரி; அரசியலில் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்தபோதும் சரி, அவரை யாரும் கேள்வி கேட்க முடியாது என்ற நிலை இருந்தபோதிலும் எதிர் கருத்துக்களுக்கும் மதிப்பளித்தவர் அவர். அதைவிட முக்கியம், தனது கருத்தை செயல்படுத்துவதில் தானே முதலில் நிற்பார்.

திமுகவில் இருந்து எம்.ஜி.ஆர் நீக்கப்பட்ட பிறகு, அதிமுக கொடியிலேயே தனது தலைவரான அண்ணாவின் உருவத்தை பொறித்தார். 1976ம் ஆண்டு கட்சியினருக்கு முக்கிய அறிவிப்பு ஒன்றை எம்.ஜி.ஆர் வெளியிட்டார். அதிமுகவின் 'தென்னகம்' நாளிதழில் அந்த அறிவிப்பு வெளியானது. 'எனது ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்கள் அண்ணா உருவம் பொறித்த நமது கட்சியின் கொடியை பச்சை குத்திக்கொள்ள வேண்டும்' என்பதுதான் அந்த அறிவிப்பு. 'பச்சை குத்திக் கொள்ள வேண்டும்' என்று கட்சியினருக்கு எம்.ஜி.ஆர் கூறியிருந்தாரே தவிர, அது கட்டாயம் என்று அதில் சொல்லவில்லை.

"ஒருவரை ஒருவர் முன்பின் தெரியா விட்டாலும், கட்சிக்கொடியை பச்சை குத்திக் கொள்வதன் மூலம் அதைப் பார்த்ததும் 'இவர் நம்ம ஆள்' என்று அடையாளம் கண்டுகொண்டு கட்சியினரிடையே ஒற்றுமை மனப்பான்மை ஏற்படும், ஒருங்கிணைந்து செயல்பட உதவும்" என்று எம்.ஜி.ஆர் கூறினார். இதை ஏற்று லட்சக்கணக்கான தொண்டர்கள் கட்சிக் கொடியை பச்சை குத்திக் கொண்டனர்.

எம்.ஜி.ஆரின் இந்த அறிவிப்புக்கு கட்சியிலேயே எதிர்ப்பும் எழுந்தது. படத் தயாரிப்பாளரான கோவை செழியன், விருதுநகர் சீனிவாசன் போன்றவர்கள் பகிரங்கமாக எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், "கட்சியினர் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பம். இதை ஏற்பவர்கள் செய்யலாம். பச்சை குத்திக் கொள்ளாதவர்கள் அண்ணாவின் கொள்கையை விரும்பாதவர்கள் என்றோ, கட்சியில் இருக்க தகுதியில்லாதவர்கள் என்றோ கூற முடியாது" என்று எம்.ஜி.ஆர் விளக்கம் அளித்தார்.

இப்படி, மாற்றுக் கருத்துக்களுக்கும் ஜனநாயகரீதியில் எம்.ஜி.ஆர் மதிப்பு அளித்தார் என்பது மட்டுமல்ல; கட்சியையும் தன்னையும் கடுமையாக விமர்சித்ததால் நீக்கப்பட்ட கோவை செழியன் போன்றவர்கள் வருத்தம் தெரிவித்ததையடுத்து, அவர்களை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொண்டார். தனது வழக்கமான இயல்புப்படி, தன்னை விமர்சித்தவர்களுக்கும் பின்னர் கட்சியிலும் ஆட்சியிலும் பதவிகள் கொடுத்தார்.

எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம். 'ஊருக்குத்தான் உபதேசம் எனக்கோ, என் குடும்பத்துக்கோ அல்ல' என்று எம்.ஜி.ஆர் எப்போதுமே செயல்பட்டதில்லை. கட்சியினர் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்று அறிக்கை வெளியான உடனே அதை செயல்படுத்திய முதல் நபர் எம்.ஜி.ஆரேதான். சென்னை மாம்பலம் ஆற்காடு தெருவில் உள்ள அலுவலகத்துக்கு (இப்போது அந்த இடம்தான் நினைவு இல்லமாக உள்ளது) பச்சை குத்துபவரை வரவழைத்து தனது கையில் பச்சை குத்திக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

இதில் சுவாரசியமான ஒரு விஷயம், அதிமுகவில் சேர்ந்து பிறகு கட்சி மாறிய நாஞ்சில் மனோகரன் போன்றவர்கள் கையில் கடைசி வரை பச்சை குத்தப்பட்ட அதிமுக கொடி இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன் பா.ஜ.கவில் சேர்ந்த நடிகர் விஜயகுமார் கையிலும் அந்தப் பச்சை உள்ளது.

எம்.ஜி.ஆர் நடித்த 'பல்லாண்டு வாழ்க' திரைப்படத்தின் பல காட்சிகள் கர்நாடக மாநிலம் கலசபுரா என்ற இடத்தில் படமாக்கப்பட்டன. அங்கு கதைக்கு ஏற்றபடி பாழடைந்த கட்டிடம் போல 'செட்' போட வேண்டும். இரண்டு, மூன்று முறை அமைத்தும் பலத்த காற்று அடித்து 'செட்' வீணாகிவிட்டது. காற்று சுழன்றடிக்காத இடமாக பார்த்து 'செட் 'அமைக்குபடி எம்.ஜி.ஆர் சொல்லிவிட்டார். காற்று அடிக்காத பகுதியாக பார்த்த இடம் ஒரு குன்று பகுதி. அந்த இடத்தில் 'செட்' போட வேண்டும் என்றால் அங்கு பொருட்கள் வந்து சேர ஆகும் செலவும் அதிகமாகும். எம்.ஜி.ஆர் ஆலோசித்தார்.

அந்த ஊர் மக்களின் பிரதான தொழில் கல் உடைப்பது. அங்குள்ள மக்களையும் படப்பிடிப்புக்கு வந்த தொழிலாளர்களையும் கொண்டே சிறு குன்றை உடைக்கச் செய்து, பெருங் கற்களை கொண்டு பலமான



காற்றடித்தாலும் அசைக்க முடியாதபடி, பாழடைந்த வீடு போன்ற கட்டிடம் கட்டப்பட்டது. இதில் ஒரே கல்லில் மூன்று மாங்காய் அடித்துவிட்டார் எம்.ஜி.ஆர்!

படப்பிடிப்புக்குக் குறைந்த செலவில் 'செட்' தயாரானது. குன்று உடைக்கப்பட்டதால் குன்றை சுற்றி ஊருக்கு வராமல் நேர்வழியில் செல்ல மக்களுக்கு பாதை கிடைத்தது. முக்கியமாக, கல் உடைப்பதன் மூலம் ஊர் மக்களுக்கு ஒரு மாதத்துக்கு வேலை கிடைத்தது.

அப்போது, நெகிழச் செய்யும் ஒரு சம்பவம். குன்றை உடைக்கச் சொன்ன எம்.ஜி.ஆர், வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பலர் தடுத்தும், "விரைவில் வேலை ஆக வேண்டும், எல்லாரும் சேர்ந்து செய்தால் தான் முடியும்" என்று கூறி மக்களுடன் சேர்ந்து தானும் கல் உடைத்தார். தான் சொன்னதற்கு, தானே முன்னுதாரணமாக வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர்.

தொடரும்...

கூட்டங்களில் எம்.ஜி.ஆர் பேசும்போது "என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே" என்று கூறி மக்களின் ஆரவாரத்துக் கிடையேதான் பேச்சைத் தொடங்குவார். இது குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் சிகிச்சை பெற்றபோது, எம்.ஜி.ஆருக்கு ஏராளமான ரத்தம் செலுத்தப்பட்டது.

"எனக்கு ரத்தம் அளித்தவர்கள் யார் என்று தெரியாது; ரத்தம் கொடுத்தவர்களுக்கே கூட அது எனக்குத்தான் அளிக்கப்பட்டது என்று தெரிந்திருக்காது. யார், யார் ரத்தம் என் உடலில் கலந்திருக்கிறதோ? அதனால்தான் 'ரத்தத்தின் ரத்தமான' என்று குறிப்பிடுகிறேன்" என்று விளக்கம் அளித்தார் எம்.ஜி.ஆர்.


'பல்லாண்டு வாழ்க' படத்துக்காக கர்நாடக மாநிலம் கலசபுராவில் கட்டப்பட்ட கட்டிடத்தின் முகப்பு பகுதியில் எம்.ஜி.ஆருடன் நடிகர்கள் குண்டுமணி, நம்பியார், வி.கே.ராமசாமி, ஆர்.எஸ்.மனோகர், ஐசரிவேலன், தேங்காய் சீனிவாசன், பி.எஸ்.வீரப்பா, நடிகை லதா.


அன்புடன் சூழ்ந்து கொண்ட ரசிகர்களுக்கு 'ஆட்டோகிராஃப்' போட்டுக் கொடுக்கிறார் எம்.ஜி.ஆர்.



சுய நிதி முகாமைத்துவம்–1

# கடன் என்னும் மாயவலை!

கடன் என்பது இன்று நாம் ஏதாவது பெரிய தேவைகளுக்காக மட்டும் பெற்றுக்கொள்ளும் ஒன்றாக இல்லை. கடன் அட்டைப் பாவனை காரணமாக நாம் தினமும் கடனிலேயே ஓடிக்கொண்டிருக்கிறோம். நமது வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அங்கமாக ஆகிவிட்ட கடன் அட்டைகள் பற்றி அறிந்து வைத்திருப்பது நம் எலோருக்கும் அவசியம். அதைப்பற்றிக் கொஞ்சம் பார்க்கலாம்.

உங்களுக்கு இரண்டு தெரிவுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒன்று உடனடியாக மிகச் சந்தோஷமான விடுமுறை ஒன்றை எடுப்பது. அதற்கான செலவைக் கடனாகப் பெற்றுக்கொண்டு விடுமுறை முடிந்து வந்தபின்னர் ஆறு மாதங்களுக்கு வேலை செய்து விடுமுறைக்கான கடனைக் கட்டி முடிப்பது. இரண்டாவது தெரிவு முதலில் ஆறு மாதம் வேலை செய்து காசு சேர்த்து, அதே விடுமுறையை சேர்த்த காசில் ஆறு மாதங்களின் பின்னர் எடுத்துக்கொள்வது. நீங்கள் எதைத் தெரிவு செய்வீர்கள்?

மனிதர்கள் தமது சந்தோஷத்தை அதிகரித்துக்கொள்வது என்றால் இரண்டாவது முடிவைத்தான் தெரிவு செய்ய வேண்டும் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். ஏனென்றால் ஒரு சந்தோஷமான விடுமுறைக்காக பணத்தை சேமிப்பதில் கூட முதல் ஆறு மாதமும் நாம் மகிழ்வடைகிறோம். பின்னர் சேர்த்த பணத்தினை பெருமையுடன் செலவிடுகின்றோம். ஆனால் கடன் பட்டால் விடுமுறையை குற்ற உணர்வில் செலவிட்டு பின் கடனையும் வருந்தி வருந்தியே அடைக்க வேண்டி வரும் என்கிறது நடத்தை உளவியல். ஆனால் நான் எப்படியும் சேர்த்துப்பிடிக்க மாட்டேன். முதலாவது தெரிவுதான் எனக்குச் சரிவரும் என்று சொல்பவர்களும் நம்மிடையே இருக்கின்றார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக காசு சேர்த்து வீடு, வாகனம் என்று வாங்கிய காலம் எல்லாம் இப்போது இல்லை. சம்பாதிக்க முன்னரே செலவழிக்க எம்மைப் பழக்கி விடும் இந்த நுகர்வுக் கலாசாரத்தில் ஏற்கனவே செலவிட்டுவிட்ட பணத்துக்காக எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கிறோம்.

கடன் என்பது நாம் வாழும் சூழலில் ஒரு தவறான விடயமோ, தவிர்க்கப்பட வேண்டிய விடயமோ அல்ல. அது அவசியமானதும் கூட. ஆனால் நமது கடன் தெரிவுகள் ஆராய்ந்து எடுக்கப்பட்டவையாக, திட்டமிடப்பட்டவையாக அமைவது அவசியம். நமது சமூகத்தினர் பலர் விழும் மிகப்பெரிய படுகுழி கடன் அட்டைகள். அவற்றை ஆரம்பம் முதல் சரியான வகையில் பாவித்தல் மிகவும் அவசியம்.


கடன் அட்டைகள் என்பவை ஒரு குறுங்கால சுழல் முறைக் கடன் வசதிக்கானவை. இவை நீண்ட கால தேவைகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டியவை அல்ல. கடனைக் கட்டி முடித்த பின்னர் மீண்டும் அதேயளவு கடனை அதில் பெற முடியும். பெரும்பாலான அட்டைகள் இரண்டு வாரங்களுக்கு வட்டியில்லாக்கடனைக் கொடுக்கின்றன. ஆனால் வட்டி என்று வந்துவிட்டால் கடன் அட்டைகளின் வட்டி மிக அதிகம்.

கடன் அட்டைகள் என்பவை நாம் வங்கியில் பெற்றுக்கொள்பவை மட்டுமல்ல. பல்வேறு வியாபார நிறுவனங்கள் தமக்கேயுரிய கடன் அட்டைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றன. இவற்றைப் பாவிப்பதனை ஊக்குவிப்பதற்காக பல சலுகைகளையும் வழங்குகின்றன. நாம் இப்போது அட்டைகளை உட்செலுத்தி அடையாள இலக்கத்தை அழுத்தக்கூடத் தேவையில்லை. சும்மா தட்டிவிட்டாலே போதும். காசு காற்றில் போவது என்பதற்கு சரியான உதாரணம் இதுதான்.

இப்போது அட்டைகளைக்கூட வெளியே எடுக்கத் தேவையில்லை. செல்லிடத் தொலைபேசி மூலம் கூட பணம் செலுத்தும் வசதி வந்துவிட்டது. எப்படிக் கொடுத்தாலென்ன? வாங்க வேண்டியதைத் தானே வாங்குகின்றோம் என்கிறீர்களா? நம்மில் பெரும்பாலானவர்களைப் பொறுத்தவரை அது உண்மையல்ல. பணம் கொடுப்பது எவ்வளவுக் கெவ்வளவு இலகுவாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாம் அதிகம் செலவு செய்வதாக உளவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

Canadian Tire, Costco, Wallmart போன்ற பல அமைப்புக்களின் கடன் அட்டைகளை நாம் எல்லோரும் ஏதாவது ஒரு வேளை பாவித்திருப்போம். இந்த நிறுவங்களின் வியாபாரம் இந்த அட்டைகளால் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? நேரத்துக்கு கடனை அடைக்காமல் பல கவனயீனமான வாடிக்கையாளர்கள் கட்டும் வட்டி அதற்கு மேலதிகம். உங்கள் உளவியலை நீங்கள் அறிந்திருப்பதை விட அதிகமாக இந்த வர்த்தக நிலையங்கள் அறிந்திருக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் நமது கடன் அட்டை நடவடிக்கைகளை மிகக் கவனமாக முகாமைத்துவம் செய்தல் அவசியம்.

கடன் அட்டைகள் ஒரு மிகப்பெரும் நஷ்டமாக நம்மில் பலருக்கு மாறிவிடுதன் காரணம் அதன் வட்டி வீதங்களை அறிந்து சரியான தேதிகளில் பணத்தினை செலுத்தி அதனைப் பாவிக்கத் தவறுகின்றமை தான். கடன் அட்டைக் கடன் என்பது வசதியானது தான். ஆனால் இரண்டு வாரம் அல்லது ஒரு மாதத்துக்குள்ளான கடன் வசதியாகத்தான் இருக்க வேண்டும். அதனை கையில் இருக்கும் காசு போல பயன் படுத்தக்கூடாது. உங்கள் நடைமுறைக் கணக்கில் ஏற்கனவே இருக்கும் பணம் அல்லது ஓரிரு நாட்களில் கையில் வரப்போகும் பணத்துக்காக மட்டுமே இந்தக் கடனைப் பெற வேண்டும். இல்லையென்றால் மேற்குறிப்பிட்ட எந்தப்பயனையும் உங்களால் அடைய முடியாதது மட்டுமல்ல நீங்கள் ஒரு மீளமுடியாக் கடனாளியாக மேலும் மேலும் ஆகிக்கொண்டிருப்பீர்கள். ஏனெனில் வட்டி அதிகரிக்க அதிகரிக்க எம்மால் அதைனைக் கையாள முடியாமல் போகும். கடன் அட்டையச் சரியாகப் பாவிப்பது தொடர்பான சில நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக்கொள்வது எல்லோருக்கும் நல்லது. இது பற்றி மேலும் அடுத்த வாரம் பார்க்கலாம்.






▶ உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச சபை, வாகரை பொதுச்சுகாதாரப் பணிமனையுடன் இணைந்து மட்டக்களப்பு குடும்பநலத் திட்ட அமைப்பின் அனுசரணையுடன் இலவச மருத்துவ முகாமை அண்மையில் நடத்தினார்கள்.



# ரீலிங் டாக்கீஸ்

## மேற்றர் புதுக் காதலனுக்கு தெரியும்!

சமந்தாவின் காதல் விவகாரம் பற்றி வாரம் ஒரு செய்தி வெளியாகிக் கொண்டிருக்கிறது. சமந்தாவும், நாகசைதன்யாவும் எப்படி சந்தித்தார்கள், எப்படி காதலை பரிமாறினார்கள் என்று ஆரம்பித்த செய்தி, இப்பொழுது வந்து நிற்பது விபரீதமான ஒரு இடத்தில். ஆம், சமந்தாவின் கடந்தகால காலம்ஞ் வெளிப்படையாக சொன்னால், சித்தார்த்தை காதலித்த விவகாரமெல்லாம் நாகசைதன்யாவிற்கு தெரியுமா என்பதுதான் அந்த வில்லங்க விவகாரம். தனக்கு நெருங்கியவர்களிற்கு சமந்தா இந்த சந்தேகத்தை தீர்த்து வைத்துள்ளாராம். சித்தார்த்துடனான காதல், முறிவு எல்லாம் அக்குவேறு ஆணிவேறாக நாகசைதன்யாவிற்கு தெரியுமாம். சமந்தாவிற்கு தேறுதல் சொன்னவர்களில் சைதன்யாவும் ஒருவராம். தேறுதல் சொல்லி, நண்பராகி, சில வருடம் நட்பை பேணித்தான் காதலை பரிமாறினோம். என் கடந்த காலம் முழுவதும் நாகசைதன்யாவிற்கு தெரியும் என்றுள்ளார்.

தேறி வந்த காதலாக இருக்குமோ!

## எஸ்கேப் ஆன ராகுல் பரீத்!

சில மாதங்களின் முன்னர் நடிகர் சங்கம் நட்சத்திர கிரிக்கெட் போட்டி நடத்தியது. தெலுங்கு படப்பிடிப்பிலிருந்த ராகுல் பிரீத்சிங் பறந்துவிழுந்து வந்து சேர்ந்தார். விசாலின் புதிய படமான துப்பறிவாளன் படத்தில் நடிப்பதால்தான் அவர் போட்டிக்கு வந்தார் என கூறப்பட்டது. ஆனால், இப்பொழுது அவர் படத்தில் நடிக்கவில்லையாம். காரணத்தை அவர் சொல்லவில்லை. ஆனால் விசாரித்தபோது வெளியான தகவல் இது. தற்போது தெலுங்கின் முன்னணி நடிகர்கள் ராம்சரண், மகேஸ்பாபு படங்களில் நடிக்கிறார். தெலுங்கில் இப்படியொரு அருமையான வாய்ப்பு வந்துள்ள சமயத்தில் தமிழில் மிகப்பெரும் ஸ்டாராக இல்லாத விசால் படத்தில் நடிக்க வேண்டாம். விசால் படம் தெலுங்கில் டப் பண்ணப்பட்டு வரும்போது இமேஜில் பாதிப்பை ஏற்படுத்துமென நெருங்கியவர்கள் சொன்ன ஆலோசனையால்த்தான் விலகியுள்ளாராம்.

பிழைக்க தெரிந்த பெண்!



## ஸ்ரேயாவின் காதல்!

ஸ்ரேயாவை அவ்வளவு விரைவில் ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். தமிழ், தெலுங்கில் முன்னணியிலிருந்தவர். தமிழின் அனேக முன்னணி நாயகர்களுடன் நடித்து விட்டார். இப்போது அவருக்கு 34 வயதாகிறது. இளவயது நடிகைகளின் வரவால் வாய்ப்பிழந்து விட்டார். வீட்டில் உட்கார்ந்திருப்பவருக்கு கல்யாணம் காட்சி செய்து பார்க்கும் முயற்சியில் பெற்றோர் ஈடுபட்டுள்ளனர். பெற்றோரை சிரமப்படுத்தாமல் ஸ்ரேயாவே மாப்பிள்ளை பார்த்துவிட்டார் என்பதுதான் இப்போதைய பரபரப்பு. மாப்பிள்ளை மேற்கிந்தியதீவுகள் அணியின் வெய்ன் பிராவோ. இருவரும் ஒன்றாகத்தான் சுற்றி திரிகிறார்களாம். அண்மையில் மும்பை ஹோட்டலின் முன்பாக இருவரையும் ஒருவர் படம்பிடித்து வெளியிட, காதல் பகிரங்கமாகியுள்ளது.

கறுத்த மாப்பிள்ளையை சிவப்பாக்க பெயர் அண்ட் லவ்லியா பாவிப்பார்?

## அலப்பறை அரவிந்த்சாமி!

ஒரு காலத்தில் அரவிந்த்சாமி ஓகோ வென இருந்தார். அலைபாயுதே படத்தில் கெஸ்ட் ரோலில் நடித்த பின்னர் நடிப்பை விட்டு ஒதுங்கிவிட்டார். பின்னர் நீண்ட இடைவெளியின் பின்னர் கடல் படத்தில் நடித்தார். படம் சொல்லிக்கொள்ளும் விதமாக அமையவில்லை. ஆனால் அரவிந்த்சாமிக்கு வாய்ப்புக்கள் வந்தன. தனிஒருவனில் வில்லனென்றாலும், அவரது ஸ்டைலான நடிப்பு பேசப்பட்டது. இப்போது போகன் படத்திலும் ஜெயம் ரவியுடன் நடிக்கிறார். தனி ஒருவனின் தெலுங்கு ரீமேக் துருவா. இதன் படப்பிடிப்பு நடக்கிறது. ஆனால் படப்பிடிப்பிற்கு சரியான நேரத்தில் செல்வதில்லை, இயக்குனர் சொல்வதை போல நடிக்காமல் தனது விருப்பத்தில் நடிக்கிறார் என நிறைய குற்றச்சாட்டுக்கள் வருகின்றன. இதனால் தெலுங்கில் அவரை ஒப்பந்தம் செல்ல பலர் தயங்குகிறார்களாம்.

தனி ஒருவனை தப்பாக விளங்கிவிட்டாரோ!

## 4ஜி ஜி.வி!

ஷங்கரின் உதவியாளர் வெங்கட் பாக்கர் இயக்கும் படம் 4ஜி. ஜி.வி.பிரகாஷ்குமார் ஹீரோவாக நடிக்கிறார். கடந்த வாரம் சென்னையில் படப்பிடிப்பு தொடங்கியது. ரேவதியின் முன்னாள் கணவர் சுரேஷ் மேனன் ஒளிப்பதிவாளர். அனைவரும் ரசிக்கும்விதமான காதல் கதையாக இருக்குமென்கிறார்கள். அடுத்த வருடம் காதலர் தினத்தன்று படம் வெளியாகுமாம்.

4ஜி வேகத்தில் தியேட்டரிலிருந்து ஓடாவிட்டால் சரி!



## நகக்கீறல் பட்ட நடிகை!

கிரிக்கெட் வீரர் தோனியின் வாழ்க்கை வரலாற்று படம் இந்தியாவில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதில் தோனியில் காதலியாக நடித்தவர் திஷா படானி. ஏற்கனவே இந்தி, தெலுங்குப்படங்களில் நடித்திருந்தாலும், இந்தப்படம்தான் அவருக்கு முகவரி கொடுத்துள்ளது. அண்மையில் ஐதராபாத்தில் நகைக்கடை திறப்பு விழாவிற்கு சென்றிருக்கிறார். நிகழ்ச்சி முடிந்து வெளியில் வந்தவரை ரசிகர்கள் மொய்த்துவிட்டார்கள். அவரை தொட்டுப்பார்க்க ரசிகமணிகள் முண்டியடித்ததால் அம்மணி திணறி விட்டார். உணர்ச்சிவசப்பட்ட ரசிகமணிகள் அவரை ஏடாகூடாகமாக தொட்டு பார்த்ததில் கை மற்றும் பின்பகுதிகளில் நகக்கீறல் ஏற்பட்டு விட்டது. கத்தி கூச்சலிட்டவரை நகைக்கடைகாரர் பெரும் பிரயத்தனப்பட்டு மீட்டெடுத்துள்ளனர்.

சிக்கி சின்னாபின்னமாவது என்பது இதைத்தானோ?

## ஜெயித்த பேய்!

12 வருடங்களின் பின்னர் தமிழில் நடிக்க வந்தார் பிரபுதேவா. தமன்னா நாயகி. இப்போதைய பேய் ட்ரெண்டிங் படம் தேவி. பிரபுதேவா காலத்தின் பிறகு நிறைய நாயகர்கள் வந்து இப்போது விஜய் சேதுபதி, சிவகார்த்திகேயன் காலம். தேவி படத்துடன் இந்த நாயகர்களின் படமும் வருகிறதே, பிரதேவா தாக்குப்பிடிப்பாரா என்ற சந்தேகம் திரையுலகத்தில் இருந்தது. ஆனால் எல்லா சந்தேகத்திற்கும் முற்றுப்புள்ளி இட்டுள்ளது தேவி. சில காட்சிகளில் இந்திப்படத்தை நினைவூட்டினாலும், படம் பக்கா வெற்றி. இனி அடுத்தடுத்து தமிழிலும் கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கலாம்.

இதுதான் பேய் வெற்றி!

## கத்தரினுக்கு கட்!

சிரஞ்சீவியின் 150வது படம் "கைதி நம்பர் 150". காஜல் ஜோடி. சிரஞ்சீவிக்கு ராகவா லாரன்சின் நடனம் பிடிக்கும். அதனால் அவர் படத்தின் குத்துப்பாட்டுக்கு நடனம் அமைக்க ஏற்பாடானது. மெட்ராஸ் நாயகி கத்தரின் தெரசா குத்தாட்ட நாயகி. ஆனால் ஆரம்பத்திலேயே இருவருக்குமிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டது. கத்தரின் மன்னிப்பு கேட்க வேண்டுமென ராகவா லாரன்ஸ் அடம்பிடிக்க படப்பிடிப்பு தள்ளிப்போனது. விடயம் சிரஞ்சீவியிடம் போக, அவர் லாரன்சை ஆதரித்து கத்தரினை நீக்கியுள்ளார். கத்தரினுக்கு பதிலாக குத்தாட்டமிட ராய் லட்சுமி ஒப்பந்தமாகியுள்ளார்.

குத்தாட்டத்திலும் குத்துப்பாடா?

# நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

## ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர் 6



✍ மோனிஷா

இந்த சமூகத்தில் நான் சந்தித்த வசைகள், அவமானங்களிற்கு நிகராக வீட்டில் கொடுமைகளை அனுபவித்தேன். திருநங்கை என்பது அவமானம் என்பதாக வீட்டில் உணர்வதால் இந்த கொடுமை.

அனேகமாக இன்றும் நான் இரண்டக வாழ்க்கைதான் வாழ வேண்டியுள்ளது. ஒரு திருநங்கையாக சுதந்திரமாக உலாவுவதும், பேசுவதும், நடப்பதும் வீட்டிற்கு வெளியில் தான். வீட்டுக்குள் அந்த சுதந்திரம் கிடையாது. வீட்டுக்குள் பானுஜனாகத்தான் வாழ வேண்டியிருந்தது.

பெண்களிற்கான உடைகளை வீட்டில் மறைத்து வைத்திருப்பேன். அலங்காரப் பொருட்களையும் மறைத்து வைத்திருப்பேன். என் உணர்வுகளையும், உடைகளையும் மறைத்து வைத்திருப்பதுதான் வாழ்க்கையாக இருந்தது.

அந்த ஆடைகளை அணிந்து, ஒரு பெண்ணாக வெளியில் செல்லும் கணத்திற்காக மனது காத்திருக்கும். பெண்களின் ஆடை அணிந்து, பெண்ணாக அலங்காரம் செய்து வீட்டைவிட்டு வெளியில் செல்லும் கணம்தான் வாழ்வின் மகோன்னத பொழுதாக அமையும். அது எல்லா நாளும் வாய்க்காது. வீட்டிலுள்ள எல்லோரையும் போக்குகாட்டுவதென்றால் சும்மாவா?

எனது உடைப்பைக்குள் பெண்கலிற்கான உடைகளும், அலங்காரப் பொருட்களும் இருக்கும். யாருமறியாமல் அதை மலசல கூடத்திற்குள் எடுத்துச்சென்று, உடைமாற்றிக் கொள்ள வேண்டும். யாருமறியாமல் வீட்டின் பின்பக்கத்தால் வெளியேறி வீதிக்கு செல்ல வேண்டும். இந்த முயற்சிகள் கிட்டத்தட்ட உயிரைப்பணயம் வைப்பதை போன்றவை.

யாரும் கண்டுவிட்டால் அவ்வளவுதான். அடி, உதைதான். இரும்புக்கம்பியாலும் அடிவாங்கியிருக்கிறேன்.

வீதியில் யாரும் கண்டாலும் அடிதான். அப்பா, தம்பி, நெருங்கிய இரத்த உறவுகள் என பலரின் அடிக்கு பயந்து வாழ வேண்டிய கொடூரநாட்கள் அவை. இத்தனை தடைகளையும் கடந்து, வீதிக்கிறங்கும்போதுதான் ஒரு நிறைவு பிறக்கும். இந்த உலகம் எனக்கானதாகவும் தோன்றும்.

திருநங்கையாக எனது உணர்வுகளை வெளிப்படுத்த ஆரம்பித்த பின்னர் ஒருநாள் கூட யாரும் வீட்டில் ஆறுதலாக கதைத்ததில்லை. ஒரு போர்க்களத்தில் வாழ்வதை போலத்தான் வாழ வேண்டியிருந்தது. எதிரிகளை எதிர்கொள்ள வியூகம் வகுப்பதைபோல ஒவ்வொரு கணமும் வியூகம் வகுக்க வேண்டியிருந்தது. போர்க்களத்திலேயே வாழ்வது மிகக்கொடுமையானது. அதனால் பெரும்பாலும் அறையை பூட்டிவிட்டே இருந்து விடுவேன்.

இப்படியே வாழ முடியாதென்ற முடிவிற்கு வந்தபோது வீட்டை விட்டு வெளியேற முடிவு செய்தேன். ஆனால் பதினெட்டு வயதுதான் ஆகிக்கொண்டிருக்கும், திருநங்கையாக உள்ள, திருநங்கையென்பதாலேயே படிப்பை தொடர முடியாத ஒருத்தியால் எங்கு போக முடியும்? சமூகம் என்னை எப்படி எதிர்கொள்ளும்? எப்படி எதிர்நீச்சலிடுவது? இப்படி ஆயிரம் கேள்விகள். இதனால் அம்மம்மாவிடமே சென்றேன்.

என் வாழ்வில் எல்லாமாக அவர்தான் இருக்கிறார். இந்த உலகத்தில் என்னை புரிந்து கொண்ட, என்னையும் அங்கீகரித்த முதல் மனிதப்பிறவி அவர்தான். மிகச்சின்ன வயதில் திருநங்கையென்ற அடையாளத்துடன்,

**அம்மம்மாவிற்கு அப்பால் என்னை அதிகம் பாதுகாத்தது காவல்த்துறையும், சட்டமுமே. பதினைந்தாவது வயதில் கொலை செய்யப்பட்டு விடுவேன் என்ற அச்சத்தில் காவல்நிலையம் ஓடிச்சென்றேன். இன்றுவரை அங்கு அடைக்கலம் புகுவது தொடர்கிறது.**

குடும்ப எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் திண்டாடி, அடுத்து என்னவென தெரியாமல் இருந்த என்னை அணைத்துக் கொண்டது அவர்தான்.

அவர் இல்லாமல் இருந்திருந்தால், நான் இருந்திருப்பேனோ தெரியாது. இந்த தொடரும் இருந்திருக்குமோ தெரியாது.

அவர் ஒரு சமூக அறிவுள்ள, புரட்சியாளர் கிடையாது. எல்லா வயோதிக பெண்மணிகளை போலவும் சிந்திக்க, பேச தெரிந்தவர்தான். ஆனால் கடவுளை நம்புகிறார். கடவுளின் படைப்புக்களை புரிந்து கொள்கிறார். நான் திருநங்கையானதற்கு யார்தான் என்ன செய்ய முடியும், இருக்கும்வரை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றுதான் என்னை அரவணைத்தார்.

எனக்கு அடைக்கலம் கொடுக்க கூடாதென உறவுகள் அவரை நச்சரித்தபடியே இருக்கிறார்கள். என் ஒருத்திக்காக எல்லா உறவுகளையும் எதிர்க்க துணிந்தார்.

அம்மம்மாவிற்கு அப்பால் என்னை அதிகம் பாதுகாத்தது காவல்த்துறையும், சட்டமுமே. பதினைந்தாவது வயதில் கொலை செய்யப்பட்டு விடுவேன் என்ற அச்சத்தில் காவல்நிலையம் ஓடிச்சென்றேன். இன்றுவரை அங்கு அடைக்கலம் புகுவது தொடர்கிறது. நான் அடைக்கலம் புகுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காவல்த்துறையினர் மனிதர்களாக நடந்தார்கள். சட்டத்தின் துணையுடன் என்னை பாதுகாத்தார்கள்.

திருநங்கைகள் குறித்த விழிப்புணர்வை எனது குடும்பத்தில் ஏற்படுத்த அவர்கள் எவ்வளவோ முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த தொடர் எழுத ஆரம்பித்த பின்னர் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் பதிவிட வேண்டும். இந்த தொடரின் முதலாவது பகுதி வெளியானது. அடுத்த நாள் நான் காவல்நிலையம் ஓடிச்செல்ல வேண்டியிருந்தது.

(தொடரும்)



# அந்தநாள் நினைவு

கராத்தேவில் 11 பிளாக் பெல்டுகள் வாங்கி நடிகர் ஆனவர் கராத்தே மணி. ரஜினியுடன் அன்புக்கு நான் அடிமை, ரங்கா உள்பட பல படங்களில் நடித்துள்ளார். அவர் ஹீரோவாக சில படங்களிலேயே நடித்தார், அதில் முக்கியமான படம் தங்கக்கோப்பை: கலைஞானம் தயாரித்த இந்தப் படத்தை ஆர்.சி.சக்தி இயக்கினார். சங்கர் கணேஷ் இசை அமைத்தார்.

உடல் வலுமிக்க ஒரு கராத்தே வீரனை திருமணம் செய்து கொண்டால் தாம்பத்திய வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்று கருதும் ஹீரோயின், திருமணத்துக்கு பிறகு அந்த கராத்தே மாஸ்டர், தாம்பத்தியத்தை விட தங்க கோப்பை மீது ஆர்வம் கொண்டு அலைந்தால் அந்த ஹீரோயின் நிலை என்ன என்பது தான் இந்தப் படத்தின் கதை. முதலில் கராத்தே மணியின் மனைவியாக தீபா நடிப்பதாக இருந்தது, முதலில் ஒப்புக் கொண்ட அவர் பின்னர் கால்ஷீட் குழப்பத்தால் நடிக்கவில்லை. பின்னர் கே.ஆர்.விஜயா நடித்தார். முதலில் அவரும் தாம்பத்திய உறவுக்கு அலையும் பெண்ணாக நடிக்கத் தயங்கினார். பின்னர் அவருக்காக கதையை மாற்றம் செய்தார்கள், அமைதியான குடும்ப வாழ்க்கையை விரும்பும் மனைவி, புகழ், பணத்தை விரும்பும் கணவன் என்று மாற்றப்பட்டது. இந்தப் படத்தில் நடிப்பதற்காக வெளிநாட்டிலிருந்து 100 நிஜமான கராத்தே கலைஞர்கள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள், அவர்களுடன் நிஜமான சண்டை போட்டார் கராத்தே மணி. அது அப்படியே படத்தில் இடம்பெற்றது. ஆனால் படம் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை.

# தமிழ் இளைஞர்களிற்கு பாலியல் உணர்வு தூண்டப்படுகிறதா?

நிதர்சன்



யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் போதைப்பொருள் கடத்தல் கேந்திர நிலையமாக யாழ்ப்பாணம் மாறி வருகின்றது. தமிழகம் மற்றும் கேரளாவிற்கு அண்மையான யாழ்ப்பாணத்தின் அமைவிடம் இந்த முக்கியத்துவத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. அதனால் கஞ்சா, அபின், ஹெரோயின் போதைப்பொருள்கள் வகைதொகையின்றி யாழ்ப்பாணத்தினூடாக கடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாண தினசரிகளின் அன்றாட முன்பக்க செய்தியாக போதைப்பொருள் கடத்தல் விவகாரம் இடம்பெறுவது வழக்கமாகி விட்டது. இதன் இறுதி நிகழ்வாக, பாலியல் உணர்வை தூண்டும் வயாகரா போன்ற மாத்திரைகளும் கடத்தி வரப்பட்டுள்ளது, கடத்தலின் ஆபத்தான பரிமாண வளர்ச்சியை காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தில் பல்லாயிரம் இராணுவம், கடற்படை, விமானப்படை, புலனாய்வுத்துறையினர், பொலிசார் உள்ளபோதும் எப்படி இந்த கடத்தல்கள் நடக்கின்றன? போதைப்பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டாலும் அதனை கடத்தி வருபவர்கள் எத்தனை பேர் கைதாகியுள்ளனர்? சில அடிமட்ட கடத்தல்காரர்கள் கைதாகியிருந்தாலும், எத்தனை வலையமைப்புக்கள் உடைக்கப்பட்டன? எத்தனை சூத்திர [illegible] இந்த [illegible] யாரிடமும் பதிலில்லை.

போதைப்பொருள் சிக்கும்போது பொதைப்பொருளை கடத்தி வந்தவர்கள் தப்பிச் செல்கின்றனர் என்பதை இலகுவாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் போதைப் பொருள் கடத்தல் தகவல் கிடைத்து, கைப்பற்றச்செல்லும் பொலிஸாரோ, கடற்படையினரே, இராணுவத்தினரோ ஆயுதங்களுடன்தான் செல்லுகின்றார்கள். சாதாரன குற்றவாளிகளைப் பிடிக்கச் செல்வது போல அவர்கள் செல்வதில்லை. ஆயுதங்களுடன் செல்லும் பாதுகாப்புத் தரப்பினர் குற்றவாளிகள் தப்பிச் சென்று விட்டனர் என்று கூறுவதை எப்படி ஏற்பது?

போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் முக்கியமான தரப்புக்கள் இருக்கின்றனவா என்ற சந்தேகங்களும் கேள்விகளும் இயல்பாகவே மக்கள் மத்தியில் எழுகின்றன. போதைக்கெதிரான யுத்தம் என பிரகடனம் செய்துள்ள ஜனாதிபதியின் நாட்டில், மக்கள் இப்படியான சந்தேகங்களுடன் வாழ்வது சரியல்ல. போதைக்கெதிரான கறாரான நடவடிக்கைகளை பாதுகாப்பு தரப்பினர் எடுத்தால் நிச்சயம் அதனை கட்டுப்படுத்தலாம். விடுதலைப்புலிகள் மீளெழுகிறார்கள், முளையிலேயே கிள்ளுகிறோம் என அடிக்கடி கைதுகளில் ஈடுபடும் பாதுகாப்பு தரப்பு ஏன் போதைப்பொருள் வலையமைப்பை உடைக்கவில்லை? போதைப்பொருள் கடத்தலிற்கெதிரான உண்மையான நடவடிக்கை எடுக்காவிட்டால் யாழ்ப்பாணம் விரைவில் போதைப்பாணம் ஆகிவிடும்.

வெறுமனே கடத்தல் என்றும் பிடிக்கப்பட்டது என்றும் கூறிக் கொண்டிருக்கின்றிருப்பதில் அர்த்தமில்லை. ஏனெனில் இதனை முற்றாகத் தடை செய்ய வேண்டியது மிக அவசியம். போதை, பாலியல் மாத்திரை பழக்கமும், அதனை பாயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளும் மிக மிக கொடியவை.

போதைப்பொருள் கடத்தல் பாலியல் மாத்திரை கடத்தலாக பரிணமித்துள்ளது. ஏற்கனவே யுத்தத்தின் பின்னரான தமிழ் சூழலில் பெண்களிற்கெதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளது. அந்த வன்முறை பெருக்கத்தின் பின்னணியில் அரசியல் நோக்கமிருப்பதாக பல்வேறு தரப்பிலிருந்தும் சுட்டிக் காட்டப்பட்டு வருகிறது. இப்பொழுது பாலியல் மாத்திரை சிக்கியுள்ளது. எரியும் நெருப்பிற்குள் எண்ணெய் ஊற்றும் நோக்கத்துடன் பாலியல் மாத்திரைகள் கடத்தி வரப்படுகிறதா? தறிகெட்டு திரியும் இளஞ்சந்ததிக்கு கையில் பாலியல் உணர்வை தூண்டும் மாத்திரைகளையும் கொடுத்து அழகு பார்க்கும் கைங்காரியம் இரகசியமாக நடக்கிறதா?

இந்த பாலியல் மாத்திரைகளை சாதாரண மக்களால் கொள்வனவு செய்ய முடியாது. அதிக பணம் தேவை. இதனை வாங்கி பாவித்தவர்களால் அது இல்லாமல் இருக்கவும் முடியாது. மாத்திரைக்காகவும், பணத்திற்காகவும் அலைந்து சமூகத்தில் குற்றச்செயல்கள்தான் பெருகிச்செல்லும்.

இத்தகைய கடத்தல்கள் யுத்த காலத்தில் நடைபெறவில்லை. கடலில் புலிகளும் இராணுவத்தினரும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் எந் நேரமும் கண்காணிப்புடனேயே இருப்பார்கள். அவ்வாறு கடத்தினாலும் இராணுவம் அல்லது புலிகளிடம் சிக்க வேண்டியே ஏற்படும். ஆனால் இன்றைக்கு அவ்வாறான கண்காணிப்புக்கள் இல்லை. இது கடத்தல்காரர்களுக்கு சாதகமாக அமைந்து விட்டது. இது தான் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் குடாநாடு போதைப்பொருள் கடத்தலின் மையமாக இருப்பதற்கு மிக முக்கிய காரணி.

இந்தக் கடத்தல் கும்பல்களுக்கு அதிகாரத்திலுள்ள தரப்புக்களின் நெருக்கமான தொடர்பு இருக்கிறதென்ற சந்தேகத்தை சம்பவங்கள் ஏற்படுத்துகின்றன. குற்றவாளிகள் தப்பிப்பதே இத்தகைய சந்தேகங்கள் எழ காரணம். குற்றவாளிகள் தப்பிச் செல்வதை தவிர்த்து நியாயமான வகையில் அரசாங்கமும் பாதுகாப்புத் தரப்பினர்களும் செயற்படுவார்களாக இருந்தால் போதைப் பொருள் கடத்தல்களையே இல்லாதொழிக்க முடியும்.



## பெப்ரவரி 2017ல் சம்சுங் கலக்சி எஸ்8

திறன்பேசி தயாரிப்பில் முன்னணி நிறுவனமாக இருந்து வரும் சம்சுங், தனது புதிய வகை திறன்பேசியான கலக்சி எஸ்8ஐ வரும் 2017ம் ஆண்டு, பெப்ரவரி 26ம் திகதி அறிமுகம் செய்யும் என கூறப்படுகிறது. அதன்படி, வரும் 2017ம் ஆண்டு நடைபெறவுள்ள உலக செல்பேசி கொங்கிரசில் நடைபெறவுள்ள சிறப்பு நிகழ்வில் கலக்சி எஸ்8 அறிமுகம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதே நிகழ்வில், சம்சுங் கலக்சி எஸ்6, எஸ்6 எட்ஜ் மற்றும் எஸ்5 செல்பேசிகள் காட்சிக்கு வைக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

## மலேசியாவில் வெளியாகும் தமிழ் எண்களைக் கொண்ட நாள்காட்டி...




தமிழ் எண்களைப் 'பாதுகாக்க' இதுபோன்ற சிறு முயற்சிகள் ஆங்காங்கே நடந்தாலும், வழக்கில் இல்லாததால் இந்த எண்களை அனைவராலும் எளிதில் புரிந்து கொள்ள இயலவில்லை. நமது தமிழ் எண்களை நாம் மறந்திருந்தாலும், தொழில்நுட்ப உலகம் மறக்கவில்லை!

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அப்பிள் நிறுவனத்தின் ஐஓஎஸ் 10இல், பயனர்கள் தங்கள் பயன்பாட்டு மொழியாகத் தமிழைத் தேர்வு செய்வது மட்டுமல்லாமல், தொலைபேசி எண்கள் தமிழ் எண்களாகவே தோன்றுவதற்கான விருப்பத் தேர்வினையும் செய்து கொள்ளலாம்.





## ஐபோன்களில் தமிழ் எண்கள்!

தமிழில் எண்கள் எழுதப்படும்போது ௧,௨,௩ எனத் தோன்றும். தற்போதைய உரோமன் வடிவங்களிலேயே இன்று எழுதப்படுகின்றன.

இருப்பினும், தொன்மையான மொழியான தமிழில் எண்களுக்கும் தனிவடிவங்கள் உள்ளன என்பதையும், அவை சில பத்தாண்டுகளுக்கு முன்னும் வழக்கில் இருந்தன. மு. வரதராசனாரின் திருக்குறள் தெளிவுரை நூலின் தொடக்கப் பதிப்புகளில், குறட்பாக்களின் எண்களையும், பக்கங்களின் எண்களையும் தமிழ் எண்களிலேயே காணலாம்.

தமிழ் எண்களைப் பயன்படுத்தி நாள்காட்டிகளும் இன்றும் வெளிவருகின்றன. மலேசியாவில் கடந்த 10 ஆண்டுகளாகத் தமிழியல் ஆய்வுக் களம் தமிழ் எண்களைக் கொண்டு அச்சிடப்பட்ட நாள்காட்டியை வெளியிட்டு வருகின்றது.



# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

"வான் நின்று உலகம் வழங்கி வருகின்றது" என்றார் திருவள்ளுவர். நாம் வாழும் இந்த நிலவுலகுத் தேவையானவை அனைத்தும் வானில் இருந்து வழங்கப்படுகின்றன. ஒரு அதிகாரத்தின் தலைப்பையே "வான் சிறப்பு" என அமைத்தார். அந்த அதிகாரத்திலேயே மழையைப் பற்றிய சேதிகள் உள்ளதால், பல உரையாசிரியர்கள் அதை "மழைச் சிறப்பு" என விளக்குகின்றார்கள். 'வான்' என நம் ஆசான் குறிப்பிடுவது மழையையும் உள்ளடக்கிய ஆகாயத்தை என்பது என் உணர்தல். ஏனெனில், வானில் இருந்து இறங்கிக் கொண்டுள்ள ஆற்றல் வகைகள் தான் பூமியிலுள்ள எல்லா உயிரினங்களையும் வளர்க்கின்றன, வாழவைக்கின்றன.

'நிலத்தில் நிலைபெற்று, வான் அளிக்கும் கொடைகளை உட்கொண்டு வாழ்வீர்' என்பது தான் படைப்பாற்றலின் வரம். எல்லா உயிரினங்களிற்கும், நிலம் உணவு வழங்குவது இல்லை. நிலத்தின் வழியாக உணவு வழங்கப்படுகின்றது.

வோன் ஹெல்மோன்ட் (von helmont) என்கிற அறிவியலாளர், 17 ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில் வாழ்ந்தவர். 'வில்லொ' எனப்படும் ஒரு மரக்கன்றை, ஒரு தொட்டியில் நடவுசெய்தார். அந்தத் தொட்டியில் எவ்வளவு மண் இருக்கிறது என்பதையும், வில்லோ செடியின் எடையையும் அளந்து கொண்டார். ஐந்து ஆண்டுகள் கழித்து வில்லோ செடி, ஓரளவிற்கு வளர்ந்து மரமாகியிருந்தது. அந்த மரத்தை வேரோடு வெட்டி எடுத்து எடை போட்டார். பின்னர் மரம் வளர்ந்திருந்த தொட்டி மண்ணை நன்கு உலரச் செய்து, அந்த மண்ணையும் எடை போட்டார்.

நடவு செய்த போது செடியின் எடை ஏறத்தாழ 2 கிலோ 200 கிராம். ஐந்து ஆண்டுகள் கழித்து வெட்டப்பட்ட போது, அதன் எடை ஏறத்தாழ 77 கிலோ.


மரத்தின் எடை இவ்வளவு அதிகமாகக் கூடியிருந்த போதும், மரம் வளர்ந்த மண்ணின் எடை குறையவில்லை. அவரது கணக்குப்படி மண்ணின் எடை 57 கிராம் குறைவாகவே இருந்தது.

'தாவரங்கள், வளர்ச்சியடையத் தேவையானவற்றை நிலத்தில் இருந்து எடுப்பது இல்லை நீரில் இருந்து தான் எடுத்துக் கொள்கின்றன. ஏனெனில், என் சோதனையில் நான் ஊற்றிய நீர் தான் வில்லோ மரத்தின் எடையைக் கூட்டியது' என்ற கருத்தை இந்த ஆய்வின் வழியாக அவர் அறிவித்தார். இப்படிப் பல ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அவர் மீது வழக்குகள் பதியப்பட்டு, வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் வோன் ஹெல்மோன்ட். வீட்டுச் சிறையில் இருந்து செய்தது தான் வில்லோ மரத்தின் ஆய்வு.

உயிரினங்களின் வளர்ச்சிக்குத் தேவையானவை, வானில் இருந்தும் வான் தரும் மழையிலிருந்தும் கிடைக்கின்றன. என்ற உண்மையை வெளிப்படையாக அறிவித்து விட்டால், உணவு, மருத்துவத் துறைகளில் நிகழும் பொருளாதார வேட்டையைப் பொது மக்கள் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து விடுவார்கள். அதனால் தான், ஊட்டச் சத்துக்கள் எனும் பொய்மையை நவீன மேதைகள் வலுவாகக் கட்டி எழுப்புகிறார்கள்.

நமக்கு உரிய இயல்பான உணவு வகைகளை உட்கொண்டாலே நமக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களும் கிடைக்கும். ஊட்டச்சத்துக்களுக்காக தனித் தனியான ஆய்வுகளையும், அவற்றின் பேரால் பரிந்துரைக்கப்படும் உணவுகளையும், தேடித்தேடி உண்ணும் போது விளையும் நன்மைகளை விட தீங்குகள் தான் அதிகம். பூமியில் உள்ள எல்லா உயிரினங்களும் தமக்கான உணவை மட்டும் உட்கொள்கின்றன. அந்த உயிரினங்களின் உடலில் நிகழும் பல்வேறு செயற்பாடுகளால் உணவுப்பொருட்கள் சத்துக்களாக மாற்றப்படுகின்றன. இந்தத் தகவலைத் தான் நீங்கள் சற்று ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

லூயி கார்வரான் (Louis kervran) என்கின்ற பிரெஞ்சு உயிரியலாளரைப் பற்றி, ஐயா நம்மாழ்வார் அடிக்கடி குறிப்பிடுவார். லூயி கார்வரானுடைய ஆய்வுகளின் சுருக்கம் என்னவெனில், உணவுப் பொருட்கள் உடலுக்குள் செரிமானம் ஆகும் போது, உடலுக்குத் தேவையான சத்துக்களாக தாமாகவே மாற்றம் பெற்றுவிடுகின்றன. உதாரணமாக, மாடுகள் புல்லைத்தான் முக்கியமான உணவாக உட்கொள்கின்றன. புல் மற்றும் வைக்கோல் போன்ற உணவுகளில் அதிகமாக இருப்பது மக்னீசியம் எனும் சத்து.




ஆனால் மாடுகளின் உடலிலும் பாலிலும் சுண்ணாம்புச்சத்துத்தான் கூடுதலாக உள்ளது. மாடுகளின் உணவில் இவ்வளவு சுண்ணாம்புச்சத்து இல்லையே!

அதேபோல, கோழிமுட்டைகளின் மஞ்சள் கருதான் கோழிக்குஞ்சாக மாற்றம் அடைகின்றது. அந்தமஞ்சள்கருஎன்பதுபுரதச் சத்துதான். முட்டைக்குள் வளரும் கோழிக் குஞ்சுக்கு எனத் தனி உணவை எவரும் கொடுப்பது இல்லை. கொடுக்கவும் இயலாது. முட்டைக்குள்ளே வளரும் அந்தக் குஞ்சு முட்டையின் ஓட்டை உடைத்து வெளியே வரும் போது பல்வேறு சத்துக்கள் நிறைந்ததாக மாறிவிடுகின்றது. இவ்வளவு சத்துக்கள் அந்தக் குஞ்சுக்கு எங்கிருந்து வந்தன? விடை என்னவெனில், உணவு எதுவாக இருப்பினும் அந்த உணவின் உள்ளடக்கத்தைத் தனக்குத் தேவையான சத்துக்களாக மாற்றிக் கொள்ளும் வல்லமை உடலுக்கு உண்டு இது லூயி கார்வரானின் மிக நீண்ட ஆய்வறிக்கையின் எளிய விளக்கம்.

மாடுகள் தமக்கான உணவை மட்டும் உட்கொண்டால் அவற்றுக்கு மருத்துவர் தேவையில்லை. கோழிகள் தமக்கான இரையை மட்டும் மேய்ந்து இயற்கை முறையில் அடைகாத்தால் அவற்றின் குஞ்சுகளைப் பொரிப்பதற்கு இயந்திரங்கள் தேவையில்லை. மனிதர்களும் தமது வாழ்விடத்தில் விளையும் உணவுகளை மட்டுமே உட்கொண்டால் எந்த ஊட்டச்சத்து வலையிலும் சிக்கத் தேவையில்லை.

உடலுக்குப் புரதம் தேவையெனில் புரதத்தை நேரடியாக உட்கொள்ளத் தேவையில்லை. அவரவர் தமது மரபுவழிப்பட்ட உணவை மட்டும் உட்கொண்டால் அந்த உணவுகளிலிருந்து உடலால் புரதத்தையும், மற்ற ஊட்டங்களையும் தயாரித்துக் கொள்ள முடியும். எல்லா உயிரினங்களும் அதிகாலையில் விழிப்பதை கவனித்திருப்பீர்கள் வானிலிருந்து இறக்கப்படும் அதிகாலைக் காற்றும், வெப்பமும் தான், எல்லா உயிரினங்களுக்குமான அடிப்படையான ஊட்டம்.

நம் முன்னோர், அதிகாலைக் கண்விழித்தலையும் வாழும் சூழலில் விளையும் உணவுப் பழக்கத்தையும் வாழ்வியலாகக் கொண்டிருந்தனர். ஆறு அடி நீளம் இருந்த வாளை வீசிப் போர் புரியுமளவிற்கு அவர்களின் உடலில் பலம் இருந்தது. இன்றைய நவீன உணவு மேதைகள், தனது பயணப் பைகளைக்கூட சர்க்கரம் வைத்து உருட்டுகிறார்கள். மரபு வாழ்வியலைக் கடைப்பிடித்தோர் தான் கோயில்களின் விமானத்தில் பல்லாயிரம் கிலோ எடை கொண்ட பாறைகளை அடுக்கினர்.

'இந்த உணவில் புரதம் உள்ளது. ஆகவே இதை உட்கொள்ளுங்கள்' என அறிவிப்பவர்களிடம் 'இந்தப் புரதம் எங்கிருந்து எடுக்கப்பட்டது?' எனக் கேளுங்கள். இந்தக் கேள்வி, உணவு மற்றும் மருத்துவ நிறுவனங்களை அசைத்துப் போடத்தக்கது.

புரதம் என்பது, நவீன அறிவியல் கண்டறிந்துள்ள சத்துக்களில் ஒன்று. பெரும்பாலான உணவுகளிலும் உயிரினங்களின் உடல்களிலும் புரதம் உள்ளது. பாம்புகளின் நஞ்சு என்பதே புரதம் தான். தேள், நட்டுவாக்காலி, உள்ளிட்ட உயிரினங்களின் நஞ்சும் புரதம் தான். ஓர் உணவுப்பொருளைக் காட்டி 'இதில் புரதம் உள்ளது' எனக் கூறுபவர்கள், அந்த உணவுப் பொருளில் உள்ள புரதம் எந்த உயிரினத்திலிருந்து எடுக்கப்பட்டது என்பதைக் கூறட்டுமே!

மாட்டு எலும்புகளில் இருந்து அதிகப்படியான சுண்ணாம்புச்சத்து உறிஞ்சப்பட்டு, உணவுகளில் கலக்கப்படுகின்றன. பல்வேறு சத்துணவு மற்றும் தின்பண்ட நிறுவனங்களின் தயாரிப்புக்களில் விலங்குக் கொழுப்புகள் இருக்கின்றன. சில நிறுவனங்கள் தம் உணவில், "தாவரக்கொழுப்பு" உள்ளதாகக் கூறுகின்றனர். எந்தத் தாவரத்தில் கொழுப்பு உள்ளது என்பது வெளிப்படையாகக் கூறட்டுமே!

துப்பாக்கித் தோட்டாக்களில் பன்றிக் கொழுப்பும் பசுவின் கொழுப்பும் கலக்கப்பட்டது, பிரிட்டன் வல்லாதிக்கத்திற்கு

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

அந்த நாட்களில் மக்கள் இனம் தெரியாதவர்களால் கடத்தப்படுவதும் எந்தவித் தடயமுமின்றிக் காணாமற் போவதும் வழமையாய் இருந்தன. ஹெலன் போனதற்கு மறு நாள் குழந்தைகள் நாங்களும் அப்பாவும் விறாந்தையில் அமர்ந்திருந்தோம். முன்பின் தெரியாத இருவர் வந்து இராணுவ முகாமுக்கு உடனடியாக வரவேண்டும் என அப்பாவிற்குக் கட்டளையிட்டனர்.


"எதற்காக என்ன குற்றச்சாட்டின் பேரில் என்னை முகாமுக்கு அழைக்கிறீர்கள்?" என அப்பா கேட்க

"நீ அங்கு வந்ததும் அதைத் தெரிந்து கொள்வாய்!" என அவர்கள் சொன்னார்கள்.

"ஏன் நீங்கள் ஒரு வாகனத்தில் வரவில்லை? சீருடைகள் அணியவில்லை?" அப்பா கேட்டார்.

"மடத்தனமான கேள்விகளைக் கேட்காதே! உடனடியாக எங்களுடன் புறப்படு! அங்கு வந்ததும் எல்லா விளக்கங்களும் உனக்குச் சொல்லப்படும்."

# குழந்தைப் போராளி




# அச்சமும் துயரும்

அப்பாவின் கண்களில் நான் அச்சத்தைப் பார்த்தேன். மிகவும் சிறு வயதினளான நான் கூட ஆட்கள் கடத்தப்படுவது பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். அப்பாவிற்கு என்ன நடந்தாலும் எனக்குக் கவலையில்லை. என்னைப் பொறுத்தவரை அவர் தண்டிக்கப்பட வேண்டியவர் குறிப்பாக ஹெலனுடன் அவர் நடந்துகொண்ட விதத்திற்காக அவர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். வந்த இருவரில் ஒருவரைக் கவனித்தேன். அவர் தனது கண்களை இடைவிடாமல் சிமிட்டிக்கொண்டிருந்தார். அவரின் கண்கள் அவரின் கட்டுப்பாட்டிலில்லை. இது அவரை அவ்வளவு நம்பகரமானவராகக் காட்டவில்லை.

அப்பா அவர்களோடு முண்டி விட்டார். "என்னை நீங்கள் இந்த இடத்திலேயே கொன்று போட்டாலும் கவலையில்லை. என்னால் உங்களுடன் வர முடியாது" என அப்பா விறைத்துக்கொண்டு நின்றார். வந்த மனிதர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாது சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் வீட்டை விட்டு வெளியேறும் போது தாங்கள் இராணுவத்தினருடன் திரும்பி வருவதாக மிரட்டிவிட்டுப் போனார்கள். அவர்கள் அங்கிருந்து சென்றதும் அப்பா வாழைத் தோட்டத்திற்குள் சென்று மறைந்தார். விரைவாகவே அவர் சில இராணுவ வீரர்களுடன் திரும்பி வந்தார்.

அவர்கள் எங்களிலிருந்து மாறுபட்ட உடலமைப்பைக் கொண்டவர்களாக இருந்தார்கள். அந்த இராணுவ வீரர்கள் வடக்கிலிருந்து வந்திருந்தார்கள். அவர்களது கண்கள் சிவப்பாகவும் அவர்களின் சருமம் அட்டைக் கறுப்பாகவுமிருந்தது . எங்கள் வாழ்க்கை முறையில் விவசாயமும் பண்ணை வாழ்வும் முக்கியமானது போல அவர்களுக்கு இராணுவ சேவையே வாழ்க்கை முறையாக இருந்தது. எங்களை அவர்கள் "பால் குடிக்கும் சோம்பேறிகள்" என ஏளனம் செய்வார்கள். அவர்கள் ஒரு விநோதமான மொழியில் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். எங்கள் தோட்டத்தில் பறித்த மிளகாய்ப் பிஞ்சுகளைகளை அவர்கள் வாயில் போட்டு மென்றதைக் கண்ட போது என் கண்களை நான் இறுக மூடிக்கொண்டேன்.

இச்சம்பவத்தின் பின்னர் வடக்கிலிருந்து வந்தவர்களுக்கு அப்பா ஒழுங்காகக் கப்பம் கட்டிக்கொண்டிருந்தார். புதினமான தோற்றமுடைய இராவணுத்தினரைக் கண்டதிலிருந்து எனது கற்பனை புதிய தளங்களுக்குத் தாவத் தொடங்கிவிட்டது. அப்போது கூட இப்படியான இராணுவ உடையை நானும் ஒரு நாள் அணியப்போகிறேன் என்று நான் கனவிற் கூட நினைத்ததில்லை.

## சிற்றன்னையின் வெற்றி

ஹெலன் எங்களை விட்டுப் பிரிந்தும், அம்மாவைத் தேடிச் சென்றும் ஒரு வாரமாகிவிட்டது. அவளை மீண்டும் காண்பேனென்று நான் எண்ணியிருக்கவில்லை. ஆனால் அவள் மீண்டும் வந்து சேர்ந்தாள். அவள் அம்மாவைக் கண்டாளா? என்ற கேள்விக்கு அவள் முகத்திலேயே பதிலிருந்தது. தோல்வி துல்லியமாகவே அவளின் முகத்தில் தெரிந்தது. அவளின் முயற்சியும் பலனின்றிப் போயிற்று. பற்றிசியா நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். அவர் எப்போது திரும்பி வருவாரென்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஹெலன் முற்றோனுடனும் யூடித்துடனும் சிறிது காலம் பற்றிசியாவிற்காக் காத்திருந்துவிட்டுத் திரும்பி வந்திருக்கிறாள். இம் மறுமொழியைக் கேட்டதும் எனக்கு ஆத்திரம் பொங்கியது. "உதவி தேவையென்றால் கூனிக் குறுகிக் கொண்டு மீண்டும் வருவார்கள்" என்ற அப்பாவின் சொற்கள் என் நினைவில் வந்தன.

" நீ ஒரு நாயைப் போல இங்கே தான் சுற்றிச் சுற்றி வருவாய் என்பது எனக்குத் தெரியும்" என அப்பா ஹெலனைப் பழிக்க ஹெலன் தலையைக் குனிந்தவாறிருந்தாள். ஒரு துயரப் புன்னகை அவளின் உதடுகளில் நெளிந்தது. ஆனால் அப்பா இன்னும் தனது உரையை முடிக்கவில்லை.

"நீ எங்கும் போகலாம், ஆனால் எப்போதும் இங்கு தான் திரும்பி வர வேண்டும். உனக்கு வேறு கதியில்லை வீடென்று உனக்கிருப்பது இது ஒன்றுதான்." எனது சகோதரிகள் வீட்டை விட்டுப் போனால் அப்பாவிற்கு எந்தக் கவலையுமில்லை. ஆனால் அவர்கள் திரும்பி வந்தால் எந்த வழியிலாவது அவர்களைப் பழிவாங்கியே தீருவார்.

---

எதிராக நிகழ்ந்த சிப்பாய்க் கலகத்திற்கான காரணங்களில் ஒன்று. இப்போது உள்ள ஊட்டச்சத்து உணவுகளில் கலக்கப்படும் கொழுப்புக்களின் உண்மை நிலை மட்டும் வெளியே கசிந்தால், கட்டுப்படுத்த முடியாத கலகங்கள் வெடிக்கும். அந்தத் தகவல்கள் எல்லாம் "பன்னாட்டு வணிகச் சட்டங்களினால்" பாதுகாக்கப்படும் தொழில் இரகசியங்கள்.

மனிதத் தலைமுடியில் ஏராளமான புரதம், அமினோ அமிலங்கள் உள்ளன. பல்வேறு திருத்தலங்களில் சேகரிக்கப்படும் தலைமுடிகள், பலகோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன. அவையெல்லாம். பல்வேறு நிறுவனங்களில் கிடங்குகளை சென்றடைகின்றன. "தலைமுடியில் இருந்து எடுக்கப்பட்ட புரதத்தை தான் உங்கள் தயாரிப்பில் பயன்படுத்துகிறீர்கள்" என, எந்த உணவு நிறுவனத்தையும் குறிப்பிட்டு எழுதவோ, பேசவோ முடியாது. சட்டம் அவர்களைத் தான் பாதுகாக்கிறது.

இவ்வாறான செயல்முறைகளால் மனித உடலில் உருவாகும் மோசமான மாற்றங்களைப் பற்றிய கவலை. நவீன உணவு மற்றும் மருத்துவத் துறையினருக்கு இருப்பதாக தெரியவில்லை. வைட்டமின் மாத்திரைகளை எழுதித்தரும் மருத்துவர்களுக்கு இந்த மாத்திரைகளில் உள்ள வைட்டமின் எந்த உயிரினத்திலிருந்து எடுக்கப்பட்டது எனத் தெரியுமா? அல்லது தெரிந்து கொள்ளும் விருப்பம் தான் அவர்களுக்கு உள்ளதா?

இயற்கையான உணவைத் தவிர வேறு எந்த வகையிலும் உடலுக்குள் செலுத்தப்படும் சத்துக்களை உடல் ஒரு போதும் ஒத்துக் கொள்ளாது. இந்த விதியை புரிந்து கொள்ளாததன் விளைவைத்தான் நமது சமூகம் இப்போது பல்வேறு நோய்களின் பேரால் அனுபவிக்கின்றது.

**மனிதத் தலைமுடியில் ஏராளமான புரதம், அமினோ அமிலங்கள் உள்ளன. பல்வேறு திருத்தலங்களில் சேகரிக்கப்படும் தலைமுடிகள், பலகோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றன. அவையெல்லாம். பல்வேறு நிறுவனங்களில் கிடங்குகளை சென்றடைகின்றன.**

மழலைகள் மற்றும் சிறுவர்களுக்கான ஊட்டச்சத்து உணவுகளைப் பாருங்கள். அவற்றின் குட்டியில் குறிப்பிடப்படும் பல்வேறு சத்துக்களை அந்தக் குழந்தைகளின் உடல் செரிப்பதில்லை. இதனால் தான் இப்போதைய குழந்தைகளில் மிகப்பெரும் பாலானோருக்கு சளித்தொல்லை நீடிக்கின்றது. பிறந்த சில நாட்களில் தொடங்கும் சளித்தொல்லை, ஒவ்வோர் ஆண்டும் அதிகரிக்கின்றதே தவிர, குறைவது இல்லை. கணிசமான குழந்தைகளின் நுரையீரல் செயல்திறன் குறைந்து, மூச்சிறைப்பு, நோயாளிகளாக மாற்றப்படுகின்றனர்.

நம்வீட்டுப் பிள்ளைகளின் உணவுப் பட்டியலில், ஊட்டச்சத்துப் பொருட்கள் குவிந்து கிடக்கின்றன. அதே குழந்தைகளின் மருத்துவப் பட்டியலோ அதைக் காட்டிலும் பெரியதாக இருக்கின்றது. 'பிறந்த நாளில் இருந்தே ஊட்டச்சத்து ஊசிகள், மருந்துகள், உணவுகள் கொடுக்கிறோமே. நம் பிள்ளைகள் ஏன் இவ்வளவு மோசமாக நோயுற்றுத் தவிக்கிறார்கள்?' என்ற அடிப்படையான கேள்வியைக் கூட நீங்கள் எழுப்புவது இல்லை.

நாகப்பட்டினத்தில் நண்பர்களுடன் கடற்பயணம் சென்ற போது எங்களுடன் படகில் வந்த ஒரு சிறுவனை மீனவர்கள் கடலில் தள்ளிவிட்டனர். நாங்கள் கரையிலிருந்து வெகுதொலைவில் இருந்தோம். அந்தச் சிறுவனுக்குப் பத்து வயது இருக்கும். நடுக்கடலில் அவன் தனியொருவனாக நீந்தி விளையாடிய அழகை படம் பிடித்தோம். துளியும் அச்சமின்றி, சோர்வின்றி அவன் அந்த ஆழக் கடலில் நீந்தினான். படகில் ஏறிய பின்னர், 'விளம்பரங்களின் காட்டப்படும் ஊட்டச்சத்து உணவுகளை உனக்குக் கொடுக்கிறார்களா?' என அவனிடம் நான் கேட்டேன். அந்தச் சிறுவனுக்கு நான் குறிப்பிட்ட ஊட்டச்சத்து உணவுகளின் 'பெயர்' கூடத்தெரியவில்லை.

நமது உடலும் மனமும் அளப்பரிய ஆற்றல் கொண்டவை. நாம் வாழும் நிலத்தில் என்ன உணவுகள் இயற்கையாகக் கிடைக்கின்றனவோ, அவற்றிலிருந்து, தமக்குத் தேவையான சத்துக்களை உறிஞ்சிக் கொள்ளும் வரம் நமக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்து எனும் கருத்து, நவீன அறிவியலுக்கு சொந்தமானது. நமது மரபு, "நிலத்தின் வளமையைத் தீர்மானிக்கும் ஆற்றல் வானில் உள்ளது" என்ற மெய்யறிவை முன்வைத்தது. விலங்கு எலும்புகளின் சுண்ணாம்புச் சத்தும், தலைமுடியின் புரதமும், விலங்குகளின் கொழுப்பும் நமக்குத் தேவையில்லை. நமது நிலத்தில் கிடைப்பவற்றை உண்போம். வானில் இருந்து இறங்கும் ஆற்றல் பெற்று வளர்வோம்!


திரும்புவோம்

# எப்படி வந்தது தீபாவளி?



விஷ்ணுவிற்கும் பூமாதேவிக்கும் மகனாகப் பிறந்தவன் பவுமன். சிவபெருமானிடம் பக்தி கொண்ட இவன் சிவபெருமானிடம் மற்ற தேவர்களுக்கு இணையாக விளங்கும் வரத்தைப் பெற்றான். மேலும் தன் தாயைத் தவிர வேறு யாராலும் தனக்கு அழிவு ஏற்படக்கூடாது என்று நிபந்தனையுடன் வரம் ஒன்றையும் பெற்றான்.

இறைவனால் அளிக்கப்படும் நல்ல வாய்ப்புகள் நல்ல வழியில் செல்லும் பொழுது நன்மை கிடைக்கிறது. ஆனால் அதிகமான செல்வம், அதிகாரம் போன்றவை வந்து விட்டால் மனம் தவறான பாதையை நோக்கியே போகிறது. பவுமனும் இப்படித்தான் தவறான வழிகளில் சென்றான். தன்னைப் பற்றித் தாயிடம் புகார்கள் சென்றாலும் தாய் எப்படித் தன்னைக் கொல்வாள் என்கிற எண்ணத்தில் தவறுகளை அதிகமாக்கிக் கொண்டே இருந்தான். பூலோகத்தில் இருந்த மக்களும், தேவலோகத்தில் தேவர்களும்



இவனுடைய கொடுமைகளால் மிகவும் பாதிப்படைந்தனர்.

சிவனிடம் சொன்னார்கள். விஷ்ணுவிடம் அவரது பிள்ளை என்பதால் சொல்லத் தயங்கினார்கள். தாயான பூமாதேவியோ, பிறர் தனக்கு செய்யும் கொடுமைகளைக் கூட ஏற்றுக் கொள்ளும் பொறுமைசாலி. சொந்த மகனைக் கொல்ல அவள் சம்மதிப்பாளா? என தேவர்களின் தலைவன் இந்திரன் தவித்தான்.

இருப்பினும் தாயான பூமாதேவி அவனுக்கு அறிவுரை செய்தார். ஆனால் அவன் யார் சொல்லையும் கேட்கவில்லை. மனிதன் (நரன்) ஆக இருந்த அவனிடம் அரக்கன்(அசுரன்) குணம் இருந்ததால் அவனை நரகாசுரன் என்று அழைக்கத் தொடங்கினர். சிவபெருமானும் வேறுவழியின்றி நரகாசுரனைக் கொல்ல உத்தரவிட்டார். பெற்ற தாயான பூமாதேவிக்கோ அவனைக் கொல்ல விருப்பமில்லை. இந்த விஷயத்தை விஷ்ணுவிடமே ஒப்படைத்தார்.

பூமாதேவி சத்யபாமாவாகவும், விஷ்ணு கிருஷ்ணராகவும் பூவுலகில் பிறந்தனர். கிருஷ்ணர் மேல் பற்று கொண்டு அவரைக் கைப்பிடித்தாள். அவருக்குத் தேரோட்டும் சாரதியாகப் பொறுப்பேற்றாள்.

கிருஷ்ணர் நரகாசுரனை அழிக்கப் புறப்பட்டார். அவனுடன் போரிட்டார். ஒரு கட்டத்தில் மயக்கமடைந்தது போல் நடித்தார். நரகாசுரன் அவரைக் கொல்ல முயன்றான். உடனே சத்யபாமா ஒரு அம்பை எடுத்து நரகாசுரனை நோக்கி எய்தாள். அந்த அம்புபட்டு நரகாசுரன் இறந்தான். முற்பிறவியில் அவனது தாயாக இருந்து, இப்பிறவியில் சத்யபாமாவாகப் பிறந்த பூமாதேவியின் கையாலேயே அவன் அழிந்தான்.


அவன் இறக்கும் சமயத்தில் பூமாதேவிக்கு முற்பிறவி ஞாபகம் வந்தது. கிருஷ்ணரிடம், "எனது மகன் கொடியவன் என்றாலும் அவன் என் கையால் அழிந்தது வருத்தமளிக்கிறது. அவன் இறந்த இந்நாளை மக்கள் அனைவரும் கொண்டாடும் வகையில் விழா எடுக்க வேண்டும். ஐப்பசி சதுர்த்தசி திதியில் அவன் இறந்ததால், இந்த நாளை இனிப்புகளுடனும், தீபங்களுடனும் அனைவரும் கொண்டாட வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தாள். கிருஷ்ணரும் அவளின் வேண்டுகோளை நிறைவேற்றினார்.

இப்படித்தான் தீபாவளித் திருநாள் கொண்டாட்டம் தொடங்கியது.

இறைவனுக்கே மகனாக இருந்த போதிலும் சில நடைமுறைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் இயங்க வேண்டும்.

தாய் ஒருவனை எவ்வளவு கண்டிப்புடன் வளர்த்தாலும் அவனைச் சுற்றியுள்ளவர்கள் எப்படியிருக்கிறார்களோ அப்படியே அவனது குணங்களும் மாறுகின்றன.

இறப்பு என்பது தவிர்க்க இயலாது. ஒருவன் வாழும் காலத்தில் பிறருக்குப் பயன்படும் படியாக வாழ வேண்டும். இப்படி சில படிப்பினைகளைச் சொல்லும் தீபாவளி சொல்வது இதுதான். நல்ல எண்ணங்கள் என்ற ஒளி விளக்கை ஏற்றி இருள் எனும் தீமையை அழித்து நல்லவர்களாக வாழ்க்கையை வாழுங்கள். அதையும் பிறருக்குப் பயனுடையதாய் வாழுங்கள்.



## தமிழ் எண் கணித பலன்கள்

# எண் - ஒன்று

1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும் பெயர் கூட்டெண் ஒன்றாக உள்ளவர்களும் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள் ஆவர்.

எண் ஒன்றுக்குரிய கோள் புதன் ஆகும். சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் இக்கோள்தான் மற்ற எல்லாக் கோள்களையும் விட அதிக வேகத்தில் சூரியனைச் சுற்றி வருகின்றது. சூரியனுக்கு அருகில் இருப்பதால் சூரியனிடமிருந்து அதிக ஆற்றலையும் பெறுகிறது. எனவே அதிக ஆற்றலும் வேகமான செயல்பாடும் இக்கோளின் பண்புகள் என்று கூறலாம்.

இக்கோளின் தாக்கம் பெற்றவர்கள் எப்போதும் சுறுசுறுப்புடன் வேலை செய்து கொண்டிருப்பார்கள். இவர்கள் சோர்வாக உட்கார்ந்து பார்க்க முடியாது. எதையாவது செய்துகொண்டே இருப்பார்கள். இவர்களது முடிவு எடுக்கும் திறனும் மற்றவர்களை ஆச்சர்யப்படுத்தும். எவ்வளவு மோசமான சூழ்நிலையிலும் விரைவாக முடிவெடுத்து செயலில் இறங்கியும் விடுவார்கள். பொழுதை வீணடிப்பது இவர்களுக்கு எள்ளளவும் பிடிக்காத விசயம்.

பூமிக்கு அடுத்ததாக அதிக அடர்த்தி கொண்ட கோள் இதுவே ஆகும். அடர்த்தி என்பது பொருள் செறிவைக் குறிப்பது. இக்கோளைப் போலவே இக்கோளின் தாக்கம் பெற்றவர்களிடத்தில் அதிக பொருள் வளம் இருக்கும். அத்துடன் இவர்களுடைய மனதில் ஒளிவுமறைவு என்பதே இருக்காது. ஒரே எண்ணம் ஒரே செயல் ஒரே வாக்கு என்று வாழ்வார்கள். கோள்களில் மிகவும் சிறியது புதனே ஆகும். சிறுமை நுணுக்கத்தைக் குறிப்பதால், பொருள் வளம் மட்டுமின்றி நுண்ணிய அறிவையும் இவர்களிடம் காணலாம். பயணம் செய்வது இம்மக்களுக்குப் பிடிக்காத ஒன்றாகும்.

எண் ஒன்றுக்குரிய எழுத்துக்கள் க், ங், ர், ஷ் என்பன. இவ்வெழுத்துக்களின் தோற்றத்திற்கான அடிப்படை வினை "திரள்தல்" ஆகும். திரள்தல் என்பதன் விரிவாக கவர்தல், ஈர்த்தல், ஒன்று சேர்த்தல் போன்ற வினைகளைச் சொல்லலாம். எனவே தான் இவ்வெண்ணுக்கு உரியவர்கள் தங்களது சுறுசுறுப்பான பண்பினால் மற்றவர்களை எளிதில் கவர்ந்து விடுகின்றனர். அத்துடன், அதிகசெயல்திறனும்விரைந்துமுடிவெடுக்கும் பண்பும் கொண்ட இவர்கள் சமுதாயத்தில் முதன்மை மாந்தராக இருப்பதையும் காண லாம். எண் ஒன்று என்பதால், யாரையும் சந்தேகிக்காமல் எளிதில் நம்பிவிடுவர். தங்களது முடிவில் எந்த மாற்றமும் இன்றி உறுதியாக இருப்பர். இவருடைய முடிவை யாராலும் மாற்ற முடியாது.

வணிகத்தின் மூலமாக பணம் சேர்த்தல், நிறைய நூல்களைக் கற்று அறிவு சேர்த்தல் போன்ற வினைகளில் அதிகம் ஈடுபடுவர்.

மேற்கூறிய நற்பலன்கள் எல்லாம் புதன் கோள் நல்லநிலையில் வலுவாக இருந்தால் மட்டுமே கிடைக்கும். புதனின் நிலையில் பாதிப்பு ஏற்பட்டால், இவர்களுக்கும் பாதிப்பு ஏற்படும். சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பதால் நாம்புத் தளர்ச்சி, உடல் சோர்வு, மனச்சோர்வு, மன அழுத்தம் போன்ற நோய்கள் இக்காலத்தில் இவர்களுக்கு ஏற்பட வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எந்த வேலையையும் உடனே முடித்து விட வேண்டும் என்று எதிர் பார்க்கும் இவர்களுக்கு அலுவலகத்தில் மறைமுகமான எதிர்ப்புகள் இருக்கும். அவசரமாக வேலைகளைச் செய்யும்போது விளைவுகள் எதிர்மறையாகி விடும். எடுத்த முடிவுகள் தவறாகிப்போய் சிக்கலில் மாட்டிக்கொள்வர். வணிகம் பாதிக்கப்படுதல், பணத்தை இழத்தல், மதிப்பு குறைதல் முதலானவை நேரிடலாம். யாரையும் எளிதில் நம்பிவிடுவதால் பிறரால் ஏமாற்றப்படும் வாய்ப்புகள் உண்டு.

# ஒரு இலக்கியக்காரனின் வாழ்வனுபவங்கள் 7

குப்பிழான் ஐ.சண்முகன்



1968 செப்டெம்பரில் எனக்கு எழுது வினைஞர் நியமனம் கிடைத்தது. முதலில் கொழும்பிலும், பின்னர் யாழ்ப்பாணத்திலும், ஏறக்குறைய ஒன்றரை வருட வேலை நிறுத்தத்திற்குப் பிறகு கல்முனையிலும் பணிபுரிந்தேன். 1984 மார்ச் மாத மத்தியில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. கொழும்பில் 1 மாத சேவை முன் பயிற்சியின் பின் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் மே மாத மத்தியில் கடமையாற்றினேன். தொடர்ந்து ஏறத்தாழ 22 வருட ஆசிரிய சேவையின் பின் 2006 ஓகஸ்ட் மாதம் ஓய்வு பெற்றேன். ஆசிரிய சேவையில் ஏறத்தாள 38 வருடங்கள் பணியிலிருந்திருக்கின்றேன்.

ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற போது எங்கள் பாடசாலையில் அதிபர் செ.சேதுராசா தலைமையில் ஒரு பிரிவுபசார விழா நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் எல்லோரும் மண்டபத்திற்குள் வந்து விழாவில் பங்கு கொண்டார்கள். ஆசிரியர்கள் சிலரும் மாணவர்கள் பலரும் மாலைகள் அணிவித்து அன்பளிப்பு வழங்கி என்னைக் கௌரவித்தார்கள். குறிப்பிட்ட சில மாணவர்களும், ஆசிரியர்களும் என் சேவை நலன்களை நினைவுகூர்ந்து பேசி என்னைப் பெருமைப்படுத்தினார்கள். அத்துடன் ஒரு தனியார் வாகனத்தில் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் என்னை வீடுவரை அழைத்து வந்து எங்கள் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறிய தேநீர் விருந்திலும் பங்குபற்றி என்னை வாழ்த்திச் சென்றார்கள்.

இதைப் போன்ற ஒரு கௌரவத்தை எனது துணைவியாரின் பாடசாலையான உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர்களும் எனக்கு வழங்கினார்கள். எனது 60 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதென எனது துணைவியார் தன் பாடசாலை சக ஆசிரியர்களுக்கும் அறிவித்திருந்தார். பிறந்தநாள் விழாவை மாலை 5 மணியளவில் கொண்டாடுவதென தீர்மானித்திருந்தோம். ஆனால் மனைவியாரின் பாடசாலை ஆசிரியர்கள் 2.30 மணியளவில் ஒரு பெரிய பஸ்ஸில் எங்கள் வீடு வந்து சேர்ந்துவிட்டார்கள். உண்மையில் நாங்கள் அந்நேரம் தயார் நிலையில் இருக்கவில்லை. என்றாலும் வீடுவந்தவர்களை வரவேற்று எங்களால் இயன்றளவிற்கு உபசரித்தோம். அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியில் அன்பளிப்பு வழங்கினார்கள். சங்கீத, நடன ஆசிரியர்கள் தங்கள் இனிய குரலால் பாடல்களைப் பாடி எங்களை மகிழ்வித்தனர். அதிபர் திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி ஒரு சிறிய உரையாற்றி எங்களை வாழ்த்தினார்.

இவ்வாறு இரு பாடசாலை சமூகத்தினராலும் நான் கௌரவிக்கப்பட்ட போதும், கிராம மட்டத்தில் இவ்வாறான ஒரு கௌரவிப்பு இடம்பெறவில்லை என்ற ஆதங்கம் என் துணைவியார் மனதில் இருந்தது. கிராமத்தில் பல நிகழ்வுகளில் பங்கு கொண்டும், கிராம மக்கள் பலருக்கு ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழங்கியிருந்த போதிலும் அதற்கான கவனிப்போ, பாராட்டோ இடம்பெறவில்லை என என் துணைவி நினைத்தார்.

இக்காலங்களில் எங்கள் அயலில் உள்ள கருப்பையடி மனோன்மணி அம்மன் ஆலய கும்பாபிஷேகத்திற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு முன்னிரவுப் பொழுதில் ஊரடங்கு நேரத்தில் எண்ணெய்க் காப்பு சாத்துவதற்காக அலயத்திற்குச் சென்றிருந்தோம். எண்ணெய்க் காப்பு சாத்தி வீடுதிரும்பலாம் என எத்தனித்த நேரத்தில் அங்கிருந்த ஆலய நிர்வாக சபை முக்கியஸ்தர் ஒருவர் என்னிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தார். கும்பாபிஷேக நிகழ்வுகள் நிறைவேறிய பின் கிரியா குருவான திருசிவகுமார் ஐயா அவர்களை கௌரவிக்க வேண்டும் என்றும், அதற்காக அவரைப்பற்றி ஒரு வாழ்த்துப்பா எழுதித்தரும்படி என்னிடம் கேட்டார். ஐயா பற்றிய விபரங்கள் ஒன்றும் எனக்குத் தெரியாதபடியால் அது பற்றி அவரை விசாரித்தேன். அப்போது சிவகுமார் ஐயாவும் உடனிருந்தார். அவர் இந்தியாவில் குருத்துவப் பயிற்சி பெற்றவர் என்றும், பல கோயில்களில் கும்பாபிஷேகக் கிரிகைகள் நடத்தியவர் என்றும் சொன்னார்கள். இவை எல்லாவற்றையும் இணைத்து வாழ்த்துப்பா எழுதி அடுத்தநாள் அவர்களிடம் கையளித்தேன்.

இந்நிலையில் ஆலய நிர்வாகத்திலிருந்த இன்னொரு முக்கியஸ்தகர் என்னிடம் வந்தார். கோவிலில் நித்திய பூசகரான கந்தையா குருக்கள் அவரது 12 ஆவது வயதிலிருந்து 5060 வருடங்களாக இந்தக் கோயிலில் பூசகராகப் பணிபுரிகின்றார் என்றும், அவரையும் இச் சந்தர்ப்பத்தில் கௌரவிக்க வேண்டும் எனவும் சொன்னார். எனவே அவருக்காகவும் ஒரு வாழ்த்துப்பா எழுதித் தரும்படி என்னிடம் கேட்டார். அவரை ஓரளவுக்கு நான் நன்கறிந்த படியால் அவரைப் பற்றி நான் ஒரு அழகான கவிதை எழுதினேன். அதில் எந்த மழையோ, வெயிலோ, புயற்காற்றோ, எதுவாக இருந்தாலும் அவர் மதில் மேலால் பூப்பறித்து பூசை செய்வார் என்று எழுதிய நியாபகம்.

கும்பாபிஷேக கிரியைகள் எல்லாம் நிறைவுற்ற பின் சிவகுமார் ஐயாவிற்குப் கந்தையா குருக்களுக்குமான பாராட்டு நிகழ்வு இடம்பெறுவதாக இருந்தது. பொன்னாடை போர்த்தி கவிதை வாசித்து கையுறை வழங்கி கௌரவிப்பதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். குருமார்கள் சிலர், பிறர் பொன்னாடை போர்த்துவதை விரும்புவதில்லை. எனவே குருமார்கள் பரஸ்பரம் பொன்னாடையை போர்த்தலாம் என எமக்குள் தீர்மானித்தோம்.

இந்நிலையில் வாழ்த்துப்பாவில் பொருள் சிதையாமலும், உயிர்ப்புடனும் வாசித்து கையளிப்பதற்காக நான் தயார் நிலையில் இருந்தேன். அப்போது தலைவரும் பொன்னாடை போர்த்தும் சடங்கை ஆரம்பித்தார். அவர் என்ன கூறினாரோ தெரியாது. செயலாளர் ஒரு பொன்னாடையை எடுத்து வந்து எனக்குப் போர்த்திக் கௌரவித்தார். நான் இதனைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. இறை சித்தத்தை யாரறிவார். கருப்பையடி மனோன்மணி அம்மாள் தான் ஊர் மக்கள் சார்பில் எனக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்துள்ளார் எனத்தான் நினைத்ததாக என்று துணைவி பின்னர் எனக்குச் சொன்னார். அவரது ஆதங்கம் இவ்வாறு நிறைவேறி விட்டதென நான் நினைத்தேன்.




(தொடரும்)





▶ பரந்தன் பிரதம தபால் அலுவலகத்தில் தபால் அதிபராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் த.தங்கவடிவேல் அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு பரந்தன் தபால் அலுவலகத்தில் இடம்பெற்றது. இடமாற்றம் பெற்றுச் செல்லும் தபால் அதிபரை கௌரவம் செய்து அழைத்து வரப்படுவதையும் புதிதாக பொறுப்பேற்றுள்ள செல்வி சிந்துஜா மற்றும் அஞ்சல் உத்தியோகத்தர்கள் தபால் அதிபருக்கு நினைவுப் பரிசில்களை வழங்குவதையும் படத்தில் காணலாம்.



எந்த இடத்திற்கும் பொருத்தமான தலைமுடி அலங்காரம் இது. சிம்பிளாக அழகாக பெண்கள் ஹாஸ்டெயார் விடும் பொழுது இந்த ஸ்டைலினை போட்டு கொள்ள முடியும்.

# செவ்வரத்தை

வீடுகளில் இன்று அருகி வரும் பூ மரம். ஆனாலும் அழகுக்காக இதை மதில் ஓரங்களில் நட்டு வளர்க்கின்றார்கள. இந்த செம்பரத்தையின் மகத்துவம் பற்றி அறிவீர்களா? இதன் இலை பூ வேர் ஆகிய மூன்றுமே பலன் தரும் பாகங்கள் தான்.

**இதன் மருத்துவ குணம்**

பூவை நீரில் ஊற வைத்து சிறுவர் களுக்கு கொடுத்து வந்தால் உடல் குளிர்மை யாடையும். அத்துடன் இதய நோயுள்ள வர்கள் குணமடைவார்கள். செவ்வரத்தை பூவை ஊறவைத்து அந்த நீரை அருந்தும் பொழுது இரத்த ஓட்டம் சீராகும் சிறு நீர் நன்றாக வெளியேறும். தலையில் கசக்கி தேய்த்து குளித்தால் பேன் தொல்லை நீங்கி விடும்.

அதே போல் செவ்வரத்தை இலையை இலுப்பை அரப்புடன் சேர்த்து அரைத்து முழுக பொடுகு தொல்லை நீங்குவதுடன், தலைமுடி மென்மை பெற்று நரையும் நீங்கும். இதன் வேரை எண்ணெய் காய்ச்சும் பொழுது போட்டு காய்ச்சவார்கள் . செவ்வரத்தை இலையில் விற்றமின் சி உள்ளது. இது சளி, இருமல், காய்ச்சலை கூட குணப்படுத்த வல்லது, செவ்வரத்தை எமது சிறந்த மூலிகை . அதன் பயன்களை பெற்று இயற்கையோடு ஒன்றி வாழ்வோம்.





# சுவையான கருவாட்டு குழம்பு

தெவையானவை

தேங்காய் தேவைக்கேற்ப, வெங்காயம் 8 பல், உள்ளி 8 பல், மஞ்சள் தூள்2 ஸ்பூன், மிளகாய் தூள்2 ஸ்பூன், உப்பு தேவைக்கேற்ப, மிளகு தூள்2 ஸ்பூன், கடுகுசிறிதளவு, சீரகத்தூள் 2 ஸ்பூன், அரிசி மா2 ஸ்பூன், தக்காளிப்பழம்3, கத்தரிக்காய் 2, புளிதேவைக்கேற்ப

செய்முறை

தேங்காய் பூ வெங்காயம் இரண்டையும் அரைத்துக் கொள்ள வேண்டும். புளியை கரைத்து அதற்குள் தக்காளி பழத்தையும் நறுக்கி போட்டு பிசைந்து கரைத்து கொள்ள வேண்டும். பின்னர் அரைத்து வைத்த தேங்காய் கலவையை கொட்டி பிசைந்து கலக்கி கொள்ள வேண்டும். பின்னர் சட்டியில் எண்ணெய் விட்டு குத்தி வைத்த கடுகு கருவேப்பிலையை தாளிக்க வேண்டும். உள்ளி பொன்னிறமாக வேண்டும். பின்னர் கத்திரிக்காய் துண்டுகளையும் சேர்த்து நன்றாக வதங்க விட வேண்டும்.

பின்னர் மஞ்சள், மிளகாய், சீரகம், மிளகு தூள்களை சேர்க்க வேண்டும். அத்துடன் தேவையான உப்பையும் சேர்க்கலாம். கருவாட்டு குழம்பு என்பதால் உப்பு குறைவாக சேர்க்க வேண்டும். பின்னர் புளி கரைசலை ஊற்றி கொதிக்கவிட்டு அரிசிமாவையுடம் சேர்த்து கொதிக்க விட வேண்டும். 5 நிமிடங்கள் கொதித்ததும் கருவாட்டையும் சேர்த்து 15 நிமிடங்கள் விட்டு இறக்க வேண்டும்.



# சிவப்பழகு பெற வேண்டுமா?


உங்கள் அழகைப் பாதுகாக்க இயற்கையான வழிமுறைகளாவன, வெயிலில் அலைந்து விட்டு வந்தவுடன், சோபபுப் போட்டு அலம்புவதால் அந்த சில விநாடிகள் மட்டுமே முகம் பளபளப்பாக இருக்கும். ஆனால் நிறம் அப்படியேதான் இருக்கும். சோப்புக்குப் பதிலாக இதோ, இந்தக் குளியல் பவுடரை பயன்படுத்தினால் சருமம் மிளிரும்.

பயத்தம்பருப்பு 100 கிராம்
கடலைப்பருப்பு 100 கிராம்
கஸ்தூரி மஞ்சள் 50 கிராம்
வெள்ளரி விதை 100 கிராம்
வெட்டி வேர் 25 கிராம்

இவற்றை அரைத்து வைத்து தினமும் பூசி குளியுங்கள். வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டும், இந்தக் குளியல் பவுடருடன் இரண்டு தேக்கரண்டி முல்தானிமெட்டி. எலுமிச்சை சாறு தேவையான அளவு தேங்காய்ப் பால் 1 தேக்கரண்டி சேர்த்து குளித்து வந்தால் சருமத்தில் உள்ள கருமை மறைந்து நிறம் கூடும்.

தோல் சீவிய உருளைக்கிழங்கை சிறிய துண்டுகளாக நறுக்கி வெயிலில் நன்றாக உலர்த்துங்கள். பின்பு பவுடராக அரைத்து வைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பவுடரைத் தண்ணீரில் குழைத்து தினமும் முகத்தில் பூசுங்கள். இது முகத்தில் உள்ள கருமைத் திட்டுக்கள், புள்ளிகளைக் களைந்தெடுத்து முகத்தைப் பளிங்கு போல மாற்றிவிடும்.

உடம்பில் சூடு அதிகமாகும் போது தோலின் கருமையும் அதிகமாகிவிடும். அதனால் கீரை, பச்சைக்காய்கறிகளை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. மோர், இளநீர், பழச்சாறு, இவற்றை அருந்தி உடம்பை எப்போதும் குளிர்மையாக வைத்துக் கொண்டால் சிவப்பழகு ஓடிவந்து ஒட்டிக் கொள்ளும்.



# உங்கள் குழந்தைகளும் பள்ளிக்கு செல்ல மறுக்கின்றனரா?

பிள்ளைக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய தொடர் அறுந்து விடுவதால் பிள்ளை பாடசாலைக்குப் போக பயந்து அழுது அடம்பிடிக்கிறது. பிள்ளையிடம் காணப்படும் குறைகள் கோளாறுகளை ஆசிரியர் தண்டிப்புடன் தண்டிக்கும்போது ஆசிரியரின் சுபாவத்தைக் கண்டு பாடசாலைக்குப் போக அஞ்சுகிறது. பாடசாலையைப் பற்றி கதைத்தாலே பிள்ளை அஞ்சுவதற்கு இதுவே காரணம்.

எல்லாப் பிள்ளைகளும் அறிவிலும் புத்திக் கூர்மையிலும் ஒரே நிலையில் இருக்க மாட்டார்கள். ஒரு பிள்ளை புரிந்து கொள்ளும் முறையில் மற்றப் பிள்ளை புரிந்து கொள்ளாது. ஒரு பிள்ளை சரியாக புரிந்து கொள்ளும் அதேவேளை மற்றப் பிள்ளை பிழையாக விளங்கிக் கொள்ளும்.

பிள்ளைகளிடத்தில் இவ்வாறான கோளாறுகள் இருப்பதை ஆசிரியர் புரிந்து கொண்டு தான் கற்பிக்க வேண்டும். பிள்ளைகளின் மனோநிலையையும்கோளாறுகளையும் கவனிக்காமல் ஆசிரியர் பிள்ளைகளுக்கு கற்பிக்க முனைந்தால் ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்காது.

அப்போது ஆசிரியர் பிள்ளையிடத்தில் கடினமாகவே நடந்து கொள்ள முனைவர். பிள்ளை ஆசிரியரை விட்டு விலகி பாடசாலையை விட்டு தூரமாகவே விரும்பும். நாளடைவில் அதுவே ஒரு அச்ச நோயாக மாறும். அதைத்தான் பாடசாலை அச்சநோய் எனக் குறிப்பிடப்படுகிறது.

இரண்டாவது தாயுடனுள்ள மிதமிஞ்சிய பிணைப்பு

அதாவது பிறந்ததிலிருந்து தாயுடைய மடியில் அரவணைப்பில் வளர்ந்து வந்த அந்தப் பிள்ளை முதன் முதலாக தாயை விட்டு பிரிந்து செல்வதாலும் பயந்து அஞ்சுகிறது. அறிமுகமற்றவர்களுடன் கலந்துறவாடுவதை பயப்படுகிறது. தாயின் அன்பும் பாசமும் கிடைக்காமல் போகுமோ என்று அஞ்சுகிறது.

அதுபோல் பெற்றோரின் பிரச்சினை அல்லது விவகாரத்தின் காரணத்தால் பெற்றோர் பிரிந்திருக்கும்போது அதனால் தாயுடைய தந்தையுடைய பாச பிணைப்பு கிடைக்காமல் தவிர்க்கும்போது பிள்ளை உளரீதியாக பாதிப்படைந்து விடுகிறது. அதன் காரணமாகவும் தாயைவிட்டு பிரிந்து செல்ல அஞ்சுகிறது.

# ஆண்கள் அழகாக மாற இப்படி செய்யுங்கள்

ஆண்கள் பொதுவாகத் தலையில் எண்ணெய் தேய்ப்பது கிடையாது. பொடுகு அதிகரிக்க இதுவும் ஒரு காரணம். சூடான உடலைக்கொண்டவர்கள், தலைக்கு நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் பயன்படுத்தலாம். குளிர்ச்சியான உடல்வாகு கொண்டவர்கள், தேங்காய் எண்ணெய் பயன்படுத்தலாம்.

இரவு படுக்கைக்குச் செல்லும் முன்னர், தலைக்கு எண்ணெய் தேய்த்து விட்டு காலையில் தலைக்குக் குளிக்கலாம். பொடுகுப் பிரச்னை உள்ளவர்கள் தலையில் எண்ணெய் வைக்கக் கூடாது.


மன அழுத்தம், தலைக்கு எண்ணெய் தேய்க்காதது, சரிவிகித உணவு உண்ணாமை, தூக்கமின்மை போன்ற காரணங்களால், இளம் வயதிலேயே முடி கொட்ட ஆரம்பிக்கும். விற்றமின் சி அதிகம் உள்ள பழங்கள் மற்றும் பாதாம் பருப்பு ஆகியவற்றைச் சாப்பிட்டுவந்தால் நன்றாக முடி வளரும்.

ஹேர் ஸ்டரெயிட்டனிங், ஹேர் கலரிங் போன்றவை செயற்கையான அழகு மட்டுமே. இதனால் பக்க விளைவுகள் ஏற்படலாம். ஊட்டச்சத்து நிறைந்த உணவு உட்கொண்டு, முறையாகத் தூங்கி எழுந்தாலே நன்றாக முடி வளரும்.

ஆண்கள் சந்திக்கும் மிக முக்கியமான பிரச்னை முகப்பருக்கள். பருக்களை உடைப்பது, கிள்ளுவது, அதன் மீது எண்ணெயைத் தடவுவது கூடாது. கொழுப்புச் சத்து மிகுந்த பொருட்களை உட்கொள்வதை அறவே தவிர்த்தால் போதும். பருக்கள் சில நாட்களில் மறைந்துவிடும்.

நகங்களை ஒழுங்காக வெட்டாமல் இருப்பதாலும் நகம் கடிப்பதாலும் நகத்தில் சேரும் அழுக்குகள், சாப்பிடும்போது உடலுக்குள் செல்கிறது. சிலருக்கு கியூட்டிகில்ஸ் எனப்படும் வெள்ளை நிற சிறிய அளவிலான சதை நகத்தின் ஓரத்தில் வளரும்.

தலையில் எண்ணெய் வைக்காதது, ஒழுங்காகத் தண்ணீர் குடிக்காதது போன்றகாரணங்களால் சிலருக்குக் குதிகால் வெடிப்பு ஏற்படலாம். எனவே நன்றாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். வாரம் ஒருமுறை வாளியில் சுடு தண்ணீர் நிரப்பி, அதில் எலுமிச்சைச்சாறு மற்றும் கல் உப்பு சேர்த்து, பாதங்களை 15 நிமிடங்கள் ஊறவைத்து எடுத்தால்வெடிப்பு குறையும்.



காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை கடுமையான வெயில் இருக்கும். அந்த நேரத்தில் பைக் ஓட்டுபவர்கள் முகத்துக்கும் கைகளுக்கும் சன் ஸ்க்ரீன் லோஷன் தடவிக்கொள்ள வேண்டும். எண்ணெய் சருமம்கொண்டவர்கள் சன் ஸ்க்ரீன் பயன்படுத்தக் கூடாது. ஸ்லிப்பர் போடுபவர்கள், பாதங்களிலும் சன் ஸ்கிரீன் பயன்படுத்த வேண்டும்.

பேஷியல் செய்வதால், முகத்தில் உள்ள அழுக்குகள் படிப்படியாக நீக்கப்பட்டு, கரும் புள்ளிகள் நீக்கப்படும். நீராவி பிடிப்பதால் முகம் புத்துணர்ச்சி அடைவதோடு பிரகாசமாகவும் இருக்கும். முகத்தைச் சுத்தப்படுத்தவே ஃபேஷியல்.

அதிகளவு தண்ணீர் குடிப்பது உதடு வறண்டு போகாமல் பாதுகாக்கும். பொதுவாகவே, தண்ணீர் அதிகம் எடுத்துக்கொள்வது சருமத்தைப் பொலிவாக்கும். பழங்கள் அதிகம் சாப்பிடுவது, உதட்டை அழகாக்கும். இரவு நேரத்தில் உதட்டில் வெண்ணை தடவிவிட்டுப் படுக்கலாம். பாதாம் எண்ணெய், ஒலிவ் எண்ணெய் ஆகியவற்றை உதட்டுக்குத் தடவுதவன் மூலம், உதடு கருமையாகமல் தடுக்க முடியும்.



# கர்ப்பிணிகளுக்கு இது தேவை

பிரசவத்தை சுகமானதாக மாற்றி விட யோக சிறந்த பயிற்சியாகும். இந்த ஆசனங்களை கர்ப்பிணி பெண்கள் செய்துவந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

### வண்ணத்து பூச்சி ஆசனம்

சுவரில் சாய்ந்த படி உட்கார்ந்து இரு கால்களையும் மடித்து பாதங்களை சேர்த்து வைத்து பிடித்து கொள்ளவும்.வண்ணத்து பூச்சி சிறகுகளை விரிப்பதை போல இரு தொடைகளையும் பக்கவாட்டில் உயர்த்தி தாழ்த்தவும்.தொடர்ந்து 10 முதல் 20 முறை வரை இதை செய்யவும். ஆசனத்தை செய்ய பின் ஓய்வு பயிற்சியை செய்யவும்.

### உட்கார்ந்து உடலை தளர்த்தும் பயிற்சி

சுவரோடு சாய்ந்து நிலத்தில் உட்கார்ந்து இரு கால்களையும் அகற்றி கைகளை அப்படியே மேலே தூக்கி ஓய்வெடுக்கவும்.

### படுத்து உடல் தளர்த்தும் பயிற்சி

கால்களை நீட்டி கைகளை விரித்து படுக்கவும். வலது காலை மடக்கி இடது முட்டியருகே பாதத்தை வைக்கவும். அப்படியே கீழே சாய்க்கவும். இதே முறையில் இடது காலையும் செய்யவும்.

வலது கையை தலைக்கு கீழே மடித்து வைக்கவும். வலது பக்கமாக திரும்பி படுக்கவும். இடது காலை இடுப்பு வரை உயர்த்தி பிறகு கீழே இறக்கவும். இதே போல் மறு புறமும் செய்ய வேண்டும்.

### படுத்தபடி செய்யும் வண்ணத்து பூச்சி ஆசனம்

கால்களை நீட்டி கைகளை சிறிது தள்ளி விரித்து வைத்து படுக்கவும் . இரு கால்களையும் மடக்கி இரு பக்கமும் பக்கவாட்டில் வண்ணத்து பூச்சியின் இறக்கைகள் போல லேசாக மேலும் கீழும் ஆட்டவும். பின்பு ஓய்வு பயிற்சி செய்யவும்.

### யோகா பயிற்சி பலன்கள்

பிரசவ காலத்தில் நீரிழிவு நோய் வராமல் தடுக்கும்

கால் சுரப்பு மற்றும் வீக்கம் வராமல் தடுக்கும்

கர்ப்பிணிகளுக்கு முதுகு வலி வராமல் தடுக்கும்

இடுப்பு தசைகள் மற்றும் கர்ப்பபை வாயை சுற்றியுள்ள பகுதிகளில் நெகிழ்வு தன்மையை ஏற்படுத்தி குழந்தை வரும் வழியை தயார்படுத்தி சீர்ப்படுத்தும்.

கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் உடல் அசதியை போக்கி உடலை நன்கு தளர்த்த உதவும்.

### இடுப்பை உயர்த்தும் பயற்சி

தரையில் அமர்ந்து இரு பாதமும் தரையில் படும்படி கால்களை மடக்கி இரு கைகளையும் உடலுக்கு பின்னே வைத்து கொள்ள வேண்டும். கைகளை ஊன்றியபடி மெதுவாக இடுப்பு பகுதியை மேலே உயர்த்தவும்.ஒரு சில விநாடிகள் இதே நிலையில் இருந்து பின் இறங்கி சிறு ஓய்வுக்கு பின் மீண்டும் செய்யலாம்.

# சமையல் அறையில்

1. கருவேப்பிலை, பூக்கள், வல்லாரை பொன்னாங்காணி போன்ற இலை வகைகள் வாடாமல் இருக்க வாழை மடலுக்குள் சுற்றி வைத்தால் வாடாமல் இயற்கையான செழிப்பாக இருக்கும்.
2. இட்லி தோசைக்கு மா குழைத்து வைத்துவிட்டு காலையில் சமையல் செய்ய முடியவில்லை என்றால் மாலையில் மா புளித்து விடுமே என்ற கவலையை விடுங்கள். மா புளிக்காமல் இருப்பதற்குஇரண்டுவெற்றிலை இலையை மாவுக்குள் போட்டு வைத்தாதால் புளிக்காமல் இருக்கும்.
3. காய்கறிகளை குளிர்சாதன பெட்டியில் வைக்கும் பொழுது பிளாஸ்ரிக் கவர் ஒன்றில் போட்டு வைத்தால் காய்கறி அழுகாமல், தன்மை மாறாமல் அப்படியே இருக்கும்.
4. சோறு அவிந்ததும் கஞ்சி வடிப்பதற்கு முன்னர் பாதி தேசிப்பழத்தை பிழிந்து விட்டு அதன் பின் வடித்தால் சோறு குழையாமல் ஒற்றை ஒற்றையாக வரும்.பார்பதற்கும் உண்பதற்கும் அழகாக சுவையா இருக்கும்.
5. நீங்கள் வைப்பதை போன்றே இரசம் வையுங்கள் . முடித்ததும் 23துளி நெய் சேர்த்து கொள் ளுங்கள். இரசத்தின் சுவையே வேறு.

சிவசேனை:

# தமிழர்களிற்குள்ளும் மத சண்டை மூளுமா?

**பிரமபுத்திரன்**

இலங்கைக்கும் சிவசேனை வந்துவிட்டது! என்ன நடக்கும்? வடக்கு, கிழக்கில் உள்ள கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதத்தினர் நெருக்கடிகளை சந்திப்பார்களா? மதரீதியான பதற்றங்கள் நடக்குமா? இந்து அடையாளம் மேலெழ தமிழ் அடையாளம் பின்தள்ளப்படுமா? தமிழ் அடையாளம் பின்தள்ளப்பட்டால் தமிழர்களின் உரிமைப் பயணம் பலவீனப்படுமா? தமிழர்களை பலவீனப்படுத்த திட்டமிட்டரீதியில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதா?

இப்படி நிறைய கேள்விகளாலும், சந்தேகங்களாலும், விவாதங்களாலும் தமிழ் இணைய, சமூகவலைத்தளங்கள் நிறைந்துள்ளன.

உண்மையில் சிவசேனை ஆபத்தானதா?

இதற்கு தெளிவான பதிலை இப்பொழுது சொல்ல முடியாதென்பதே உண்மை. சமூகவலைத்தளங்களில் மாற்றுக்கருத்தாளர்கள் எனப்படுபவர்கள் அதீதமாக பதட்டப்படுவதைப் போலவோ அல்லது சிவசேனை சும்மா அமைப்பு என அசட்டையாக இருப்பதை போலவோ அதனை அணுக முடியாது. சற்று எச்சரிக்கை கலந்த விழிப்பு அவசியம்.

இந்திய அரசியலில் சிவசேனா முக்கிய சக்தி. இந்து மதத்தின் பெயரால் அங்கு நடக்கும் வன்முறைகளின் ஊற்றுவாய் அந்த அமைப்பு. மும்பை தாரவி பகுதியில் சிவசேனை நிகழ்த்திய வன்முறைக்கு வரலாறே சாட்சி. இந்திய சிவசேனாவின் நீட்சிதான் இலங்கை சிவசேனை எனில் அது அவதானமாக கையாளப்பட வேண்டிய விவகாரம்.

ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான மறவன்புலவு க.சச்சிதானந்தத்தின் கூற்றுப்படி பார்த்தால், இரண்டு அமைப்புக்களிற்குமிடையில் நெருக்கமான பிணைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அப்படி நிகழ்ந்தால் அது ஆபத்துக்களை விளைவிக்கலாம்.

இந்திய சிவசேனா முஸ்லீம்களுடன் தீராத பகையை வைத்துள்ளது. சிவசேனாவின் நீட்சிதான் சிவசேனையெனில் அது தமிழர் போராட்டத்தை வழியில்லாத முட்டுச் சந்திற்குத்தான் கொண்டு செல்லும்.

பிரச்சனைகளை மதத்தின் பெயரால் அணுகும்போது ஏற்படும் விளைவுகள் பெரியவை. உதாரணமாக, திருக்கேதீஸ்வரத் திற்கு அண்மையில் மாதா சொரூபம் வைக்கப்பட்டதாக கூறப்பட்டது. அதை இந்து, கிறிஸ்தவ விவகாரமாக அணுகியதைவிட, தமிழர்களாகத்தான் பெருமளவிற்கு அணுகப்பட்டது. அதனால் சிறிய சச்சரவுகள் தோன்றினாலும் அது பதற்றத்தை ஏற்படுத்துபவையாக மாறவில்லை.

நயினாதீவு புத்தர்சிலை விவகாரமும் அப்படித்தான். இந்த விவகாரங்களை தமிழர்கள் அரசியலின் ஒரு பகுதியாகத்தான் அணுகுகிறார்கள். மத விவகாரங்களாக குறுக்கவில்லை. புத்தர்சிலை பெருக்கத்தின் பின்னணியில் மத நோக்கங்களை விட அரசியல் நோக்கங்கள்தான் பெரிதும் இருக்கும்.

இந்த பின்னணியில் மத அமைப்பொன்று


சீ.யோகேஸ்வரன்

தலையெடுத்து, இப்படியான விவகாரங்களில் தலையிட்டால், போராட்டங்களில் இறங்கினால் அது சிக்கலை அதிகப்படுத்தும். தமிழர்களாக ஒன்றிணைவதை மதங்களாக பிளவுபடுத்துவது நிச்சயம் ஆபத்தே.

மத அடையாளங்களை காப்பாற்றுவது, மத மாற்றங்களை தடுத்து நிறுத்துவது போன்ற வேலைத்திட்டங்களைத்தான் சிவசேனை முன்மொழிந்துள்ளது.

மத அடையாளங்களை பேணுவதென்பதன் அர்த்தம் என்ன?

தமிழர்கள் எல்லா விடயத்தையும் விடவும் மதத்திற்கு முன்னுரிமையளிப்பவர்கள். கோயிலில்லா ஊரில்ல; கோவியல்லா தெருவிலேயே குடியிருக்க மாட்டோம் என வீதிக்கு வீதி கோயில் கட்டி வைத்துள்ளார்கள். மத அடையாளங்களை வெளிப்படுத்த தடையிருப்பதாக எந்தப்பகுதியிலும் தமிழர்கள் முறையிட்டதில்லை. ஆலயத்தில் பகிரங்கமாகவழிபட அச்சப்பட்டுபனதிற்குள். கோயில் கட்டி வழிபடும் பூசுலார்களும் இங்கில்லை.

வன்னியில் இறுதி யுத்தம் தீவிரம் பெற்றிருந்தது. கொத்துகொத்தாக இந்துக்கள், கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். யுத்த வலயத்திற்கு வெளியில் இருந்த யாழ்ப்பாணம் உள்ளிட்ட எந்த தமிழர் பகுதியிலும் ஒரு இந்து ஆலயத்தில், ஒரு கிறிஸ்தவ ஆலயத்தில் திருவிழா தடைப்பட்டவில்லை. வழிபாடுகளிற்கு அரசும் தடைவிதிக்கவில்லை.

இதற்காக, சிறுபான்மை தமிழர்களின் மத சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது என்பது அர்த்தமல்ல. இந்த விவகாரம் அரசியல் விவகாரம். வடக்கில் வகைதொகையில்லாமல் விகாரைகள் முளைப்பது. இந்து ஆலயங்கள் தாக்கப்படுவது அரசியல் பின்னணியை கொண்டது. அது அரசியல்தீர்வின் மூலமே தீர்க்கப்பட கூடியது. சிவசேனை சூலாயுதத்துடன் கோயில்களில் காவல் நின்று அனுராதபுர ஆலயம் இடிக்கப்பட்டதை போன்ற அடாவடித்தனங்களை நிறுத்த முடியாது. தேவையெனில் மோதல் போக்கை அதிகரிக்க மட்டும் செய்யும்.

அடுத்த விவகாரம் மதமாற்றம். தமிழர்கள் யாரும் அது இந்துவோ, கிறிஸ்தவர்களோ கட்டாயமாக பௌத்த மதத்திற்கு மாற்றப் படுவதாக ஒரு தகவலும் வெளியாகவில்லை. நில அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் போன்ற விவகாரங்கள் வேறு. மதமாற்றம் வேறு. பௌத்த மதமாற்ற அபாயம் இந்துக்களிற்கு கிடையாது.

ஆக நடப்பது இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதே. அதிலும் றோமன் கத்தோலிக்கர் களாக மாறும் அபாயம் இல்லை. சிறிய சபைகள்தான் ஆட்களை உள்ளீர்ப்பதில் அதித ஆர்வம் காட்டுகின்றன. ஆனால் இந்த விவகாரம் அக்கறுத்துமளவிற்கு பெரிதாக இல்லை. இன்னொருவிடயம் இந்த மதமாற்றங்களும் கட்டாய மதமாற்றங்கள் அல்ல.

ஆகவே தற்போதைய நிலையில் மதத்தை முன்னிறுத்திய அமைப்புக்களின் தேவை தமிழர்களிற்குகிடையாது, மதத்தை முன்னிறுத்திய நகர்வுகள் நிச்சயம் தமிழர்களை பிளவுபடுத்தும். நாங்கள் தமிழர்களாக சிந்திக்கப் போகிறோமா, அல்லது இந்துக்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் சிந்திக்கப்போகிறோமா என்பதே இப்பொழுதுள்ள கேள்வி.

சிவசேனை விவகாரத்திற்கு இந்த பார்வை மட்டும்தான் உள்ளதென்றுமில்லை. இன்னொரு பார்வையும் உள்ளது.


இந்துக்கள் தமது அடையாளங்களை பேண ஒரு அமைப்பை உருவாக்கும் சகலவித உரித்தும் கொண்டவர்கள். பொதுபலசேனா தீவிரமாக பௌத்த மதவாதத்தை முன்னிறுத்துகிறது; முஸ்லீம்கள் அரசியலாலும் மதத்தாலும் ஒன்றுபட்டு, மத நிறுவனங்களை பலமாக பேணி வருகிறார்கள். கிறிஸ்தவ மத நிறுவனங்கள் நமது சமூகத்தில் எவ்வளவு பலமானதென்பதை அதிகம் எழுத வேண்டியதில்லை. அரசியல், காவல்த்துறையில் ஆதிக்கம் செலுத்த வல்லவை கிறிஸ்தவ மத நிறுவனங்கள். இவற்றுடன் ஒப்பிடும்போது இந்து மத நிறுவனங்கள் அதிகாரபீடங்களாக உருவெடுக்கவில்லை. அதிகார பீடங்களாக உருவெடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களெதுவும் இந்து மத நிறுவனங்கள், அமைப்புக்களிடம் இருக்கவில்லை. பற்றற்றதன்மையை வலியுறுத்திய மதமல்லவா!

தேர்தல் சமயத்தில் செல்வாக்கு செலுத்தாத ஒரே மதம் இந்துதான். மற்றைய மதங்கள் தம்சார்ந்த வேட்பாளருக்கு ஆதரவளிக்கும். வடக்கு, கிழக்கிலும் இதுதான் நிலை.

மத அமைப்பொன்றை உருவாக்குவது ஒன்றும் சாவான பாவமல்ல. ஆனால், இந்த கட்டுரையின் ஆரம்ப பகுதியில் குறிப்பிடப் பட்ட விடயங்களில் அவதானமாக இருக்க வேண்டியது அவசியம். யதார்த்தம் என்னவென்றால், தீவிர மத அமைப்புக்களை கட்டுக்குள் வைத்திருக்க முடியாது. படிப்படியாக தீவிர நிலையை நோக்கி அவை நகர்ந்துவிடும்.

இந்த விவகாரத்தில் உள்ள ஒரே ஆறுதல் மறவன்புலவு சச்சிதானந்தம் மட்டுமே. தமிழ்தேசிய அரசியலின் பாதையில் நடந்த நீண்ட வரலாறுடையவர். மத தீவிரவாத அமைப்பாக மாறுவதோ, மத சிக்கலை தோற்றுவிப்பதோ இந்த அமைப்பின் நோக்கமல்ல என்று அவர் கூறுகிறார். அவருக்குள்ள இந்திய தொடர்பை குறிப்பிட்டு, இது உள்நோக்கமுள்ள ஆபத்தான இந்திய இறக்குமதியென்ற எச்சரிக்கையை விடுபவர்களும் உள்ளனர்.

இன்னொரு ஒருங்கிணைப்பாளரான தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனும் சிவசேனை குறித்து, யாரும் அச்சப்பட தேவையில்லை, இது அகிம்சைவழியிலான ஒரு அமைப்பு என்றுள்ளார். ஆனால் உலக வரலாறு சொல்வது வேறுவிதமாக மதம் ஒரு போதை. அதை அருந்தியவர்கள் சாத்தான்களாகிறார்கள் என்கிறது.


மறவன் புலவு க.சச்சிதானந்தம்

கடந்த 09.10.2016 அன்று வவுனியா வேப்பங்குளம் வைரவர் கோவில் மண்டபத்தில் சிவசேனை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் ஒருங்கிணைப்பாளர்களாக 'மறவன்புலவு' க.சச்சிதானந்தம், சீ.யோகேஸ்வரன் தேர்வாகியுள்ளனர். இலங்கையின் 25 மாவட்டங்களிலும் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்து மத அடையாளங்களை பேணுவதும், மதமாற்றத்தை தடுப்பதும் தமது பிரதான நோக்கம் என அறிவித்துள்ளனர்.

# கிளார்க் கிளப்பிய புயல்




அவுஸ்திரேலிய கிரிக்கெட்டை ஆட வைத்துள்ளது முன்னாள் கப்டன் மைக்கல் கிளார்க் எழுதிய வாழ்க்கை சரிதை புத்தகம். 'மை ஸ்டோரி' என்ற அவரது சரிதை புத்தகத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் போக்கு பற்றிய வெளிப்படையான விமர்சனங்கள் உள்ளன. இது அவுஸ்திரேலியாவில் பரபரப்பை கிளப்பியுள்ளது.

கிளார்க்கின் முக்கிய குற்றச்சாட்டு, அணியில் கப்டனின் அதிகாரம் இல்லாமல் போய் பயிற்சியாளர் மற்றும் அணி நிர்வாகமே அணியை நடத்துகிறார்கள் என ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

டரன் லீமன் தனக்கு மிகவும் பிடித்தவர் என்று கூறியுள்ள மைக்கல் கிளார்க், தான் பொதுவாக தற்போது இருக்கும் அமைப்பு முறையைத்தான் நான் விமர்சிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். 2013 ஆஷஸ் தொடரின் போது மிக்கி ஆர்தரிடமிருந்து டரன் லீமன் பயிற்சியாளர் பொறுப்பை பெற்றார், அப்போதிலிருந்து கப்டன்சி தொடர்பாக தனக்கு அதுவரை இருந்த சில அதிகாரங்கள் பறிக்கப்பட்டது என்கிறார் கிளார்க். ஆனால் அணித்தேர்விலிருந்து தான் விலகியது தன் சொந்த முடிவே என்றும் நேர்மையாகப் பதிவு செய்துள்ளார் கிளார்க்.

2014 சிம்பாப்வேவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஸ்டீவ் ஸ்மித் அணியில் இடம்பெற வேண்டும் என்று கப்டனாகத் தான் கோரியதை பயிற்சியாளரும், அணித் தேர்வுக்குழுவும் நிராகரித்ததை சுட்டிக் காட்டியுள்ளார் மைக்கல் கிளார்க்.

"நடைமுறையில் சில அதிரடி மாற்றங்களை நான் தாமதமாகவே ஏற்று கொண்டேன். அணி திறன் மதிப்பீட்டாளர் பாட் ஹோவர்ட் ரக்பியிலிருந்து வந்தவர், அங்கு பயிற்சியாளர்தான் எல்லாம். அதனால் அவருக்குபிரச்சினைதெரியவில்லை. ரக்பியில் களத்தில் கப்டன் தான் பாஸ், களத்திற்கு வெளியே பயிற்சியாளர் பாஸ். ஆனால் கிரிக்கெட்டை நான் அவ்வாறாகப் பார்க்கவில்லை.

கிரிக்கெட் கால்பந்து அல்ல, பயிற்சியாளர் ஆட்டி வைக்கும் விதத்தில் இங்கு ஆட முடியாது. எனக்கு பொறுப்பு இருக்கிறது எனவே எனக்கு ஒரு முடிவு குறித்த காரண காரியங்கள் அவசியமானது.

இயன் சப்பல் என்னிடம் அடிக்கடி கூறுவார், வெற்றிதோல்வி கணக்கு உன்பெயரில்தான் இருக்கும் என்று. கப்டனிடமிருந்து மில்லியன் விஷயங்களை அவர்கள் எடுத்து விடுகின்றனர். அதாவது அப்போதுதான் நான் களத்தில் கவனம் செலுத்த முடியும். சரி! ஆனால் எனக்கு அந்த விஷயங்கள் தேவை எனும்போது எப்படி என்னை அதிலிருந்து விலக்க முடியும்? எல்லைக்கோட்டுடன் கப்டன் பணி முடிந்து விடுவதில்லை. களத்திற்கு வெளியே நான் செயலாற்றும் விதமும் களத்தில் பிரதிபலிக்குமே. என்னுடைய வருத்தங்கள் எந்த ஒரு தனிநபருக்கு எதிராகவும் கிடையாது, எனக்கு டரன் லீமனை மிகவும் பிடிக்கும்.

ஆனால் மிக்கி ஆர்தர் என்னைக் கேட்காமல் முடிவுகளை எடுக்க மாட்டார். இதுதான் நான் பழகிய விதம். ஆனால் இப்போது வித்தியாசமாக உள்ளது. இன்னும் கூட என்னால் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள கடினமாகவே உள்ளது" என்கிறார் கிளார்க்.


இந்த சரிதை புத்தக வெளியீட்டின் முன்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில், அவுஸ்திரேலிய அணியிலிருந்து புற்றுநோய் குழுவில் வட்சனும் அங்கமாக இருந்தார் என கூறி பரபரப்பை கிளப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## 100 விக்கெட் எடுத்த சாதனை

குறைந்த போட்டிகளில் 100 விக்கெட் என்ற மைல் கல்லை எட்டிய உலகின் இரண்டாவது வீரர், ஆசியாவின் முதல் வீரர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார் பாகிஸ்தானின் யசீர் ஷா. மேற் கிந்தியாவுடனான முதலாவது போட்டியின் முதல் இன்னிங்சில் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார்.

1896 இல் இங்கிலாந்து வீரர் ஜி.ஏ.லோமன் என்ற இங்கிலாந்து வீரர் தனது 16வது டெஸ்ட்டில் 100 விக்கெட் மைல்கல்லை எட்டினார். அடுத்ததாக அவுஸ்திரேலியாவின் கிரிம்மெட், டர்னர், இங்கிலாந்தின் பார்ன்ஸ் ஆகியோர் இருந்தனர். அவர்களுடன் யசீர் ஷா இணைந்துள்ளார்.

முன்னதாக இந்தியாவின் அஸ்வின் 18 போட்டிகளில் 100 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இந்தவகையில் ஆசியாவில் விரைவாக அந்த மைல்கல்லை எட்டிய வீரராக அஸ்வின் இருந்தார். அஸ்வினை பின்தள்ளியிருக்கிறார் யசீர் ஷா.









## வரவேற்புக்கள்

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் சாதித்த மாணவர்களிற்கு பாராட்டு நிழ்வுகள் நடந்துள்ளன. அவரவர் பாடசாலைகளில் சிறப்பான வரவேற்புகள் நடந்துள்ளன.

21 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான குண்டு எறிதலில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தை சேர்ந்த நாகராசா ரிசாந்தினி 9.76 மீற்ரர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

21 வயதிற்குட்பட்டவர்களிற்கான 5000 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தை சேர்ந்த புலேந்திரராசா செனந்தன் வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தார்.

21 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான நீளம்பாய்தலில் வெண்கலப்பதக்கம் வென்றிருந்தார் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி சி. ஆரணி.

## பழ மொழிகள்

1. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
2. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
3. அடாது செய்வர் படாது படுவர்
4. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
5. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
6. ஆழம் அறியாமல் காலை விடாதே
7. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
8. உட்பிட்டவரை உள்ளவும் நினை
9. அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்
10. ஆனைக்கும் அடி சறுக்கும்
11. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
12. சிறு துளி பெரு வெள்ளம்
13. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

*நிவேதா, தரம்3டி*
*வ. முருகனூர்*
*சாரதா வித்தியாலயம்*

## ஆன்றோர் சொன்னது

தேவைக்கு மேலுள்ள பொருள், தேவையில்லாதவற்றை வாங்கவே பயன்படும். - தோரோ.

நாம் காட்டும் பணிவிற்கும் மரியாதைக்கும் பிரதிபலனாக ஏதேனும் ஒரு நன்மையைப் பெற வேண்டும் என்று எதிர்பார்ப்போம் எனில் நம்மிடம் உண்மையான அன்பு உருவாகாது. - விவேகானந்தர்.

செல்வங்களின் சுமையை ஏற்றிக் கொண்டு இன்பம் எனும் செங்குத்துப் பாதையில் ஏறிச் செல்வது ஒரு மனிதனுக்குக் கடினம்.
- முகம்மது நபிகள்.

சிந்திக்காமல் பேசத் தொடங்குவது, குறி பார்க்காமல் அம்பை விடுவது போன்றது. - ஒஸ்கர் ஒயில்ட்.

சிறிய தவறுகளைத் திருத்திக் கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது.
- கொன்ஃபூசியஸ்.

ஒழுக்கம் என்பது வெள்ளைக்காகிதம் போன்றது. ஒரு முறை கறை பட்டால் மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டு வர முடியாது. - ஹாவ்ஸ்.

கடினமான வேலைகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைபவர்களே எப்போதும் புகழ் பெறுகிறார்கள்.
- மகாகவி மில்டன்.

தவறுகளை ஒத்துக்கொள்ளும் தைரியமும் அவற்றை விரைவில் திருத்திக் கொள்வதற்கான வலிமையும்தான் வெற்றி பெறுவதற்கான குணங்களாகும்.
- லெனின்.

ஆரோக்கியம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும். நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் இருக்கும்.
- ஹால்டேன்.

தற்பெருமை கொள்ளும் மனிதனுக்கு வேறு விரோதிகளே தேவையில்லை.
- ஃபிராங்கிளின்.

பயன்படுத்தாத இரும்பு துருப்பிடித்து விடும். தேங்கிய நீர் தூய்மையிழந்துவிடும். சுறுசுறுப்பான செயல்பாடுகளற்று முடங்கிய மனம் தன் வலிமையை இழந்துவிடும்.
-- லியனார்டோ டாவின்சி

ஒரு காட்டில் நிறைய விலங்குகள் வசித்து வந்தன. அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்தன.

அங்கே வசித்த மயில் மட்டும் எப்போதும் மற்ற பறவைகள் மற்றும் விலங்குகளை பார்த்துப் பொறாமை பட்டுக்கொண்டே இருந்தது. அது யானையைப் பார்த்து பெரியதாய் இருக்கிறது என்றும் மானைப் பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் பொறாமைப்படும்.

இந்நிலையில் ஒரு மழைக்காலத்தில் அந்த மயில் அழகாக ஆடத் தொடங்கியது. பாட

# பலவீனம் பயப்பிடுவதற்கு அல்ல



ஆரம்பித்த மயில் தன் மோசமான குரலை எண்ணி அழத் தொடங்கியது. அப்போது அங்கு வந்த மைனா, மயிலைச் சமாதானப்படுத்த அருகில் சென்றது. மயில் தனது வருத்தத்தை மைனாவிடம் கூறியது. மைனா மயிலிடம் ' நீ மிகவும் அழகாய் இருக்கிறாய். அதை நினைத்து நீ எப்போதாவது மகிழ்ச்சியடைந்திருக்கிறாயா' என்று கேட்டது.

மயில் சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு, இல்லை என்று பதில் சொன்னது. இதனைக் கேட்டு சிரித்த மைனா, 'உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு சிறப்பும் வலிமையையும் இருக்கும். அது எது என்பதைத் தெரிந்து அதை மேம்படுத்த வேண்டுமே தவிர எது நம்மிடம் இல்லையோ அதை நினைத்து வருத்தப்படவோ, பொறாமைப்படவோ கூடாது' என அறிவுரை கூறியது.

தன் தவறை உணர்ந்த மயில் மைனாவிற்கு நன்றி சொன்னது. நம்மிடம் இருக்கும் பலத்தை பயன்படுத்தி, நமது பலவீனத்தை எதிர்கொள்ள வேண்டும்.






யாழ்ப்பாணம் அரசடி ஞானக்குழந்தை பாலர் பாடசாலை மாணவர்களிடம் தீபாவளிக்கு வீட்டில் என்ன எல்லாம் செய்யப் போகிறீங்கள் என்று கேட்டோம். உற்சாகமான குட்டீஸ் சொன்னவை இவை.

தீபாவளிக்கு நாங்கள் பாட்டி வீட்ட போகப்போகிறோம். கே.கே.எஸ் போகப் போகிறோம். நயினாதீவு கோவிலுக்கு கப்பலில் போகப்போகிறோம் என்று சுற்றுலா பற்றி சிலர் ஆரவாரப்பட, இன்னும் சிலர் எங்கட அம்மா பனங்காய் பனியாரம் செய்யப் போகிறா. எங்கட அம்மா லட்டு செய்யப்போகிறா. சீனி பலகாரம் செய்யப் போகிறா என்று உற்சாகமானார்கள். வீட்டில் உடுப்பெல்லாம் வாங்கியாச்சு என்று இன்னும் சிலர் குதூகலமாக வரவேற்கின்றனர் தீபாவளியை.



# பூனை



பூனை பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு ஊனுண்ணி ஆகும். இவை மனிதனால் பழக்கப்பட்டு வீடுகளில் வளர்க்கப்படுகின்றன. வீடுகளில் வளர்க்கப்படும் பூனைகள் சைவ உணவையும் உண்கின்றன. பூனைகள் பண்டைய எகிப்தில் வழிபாட்டு விலங்குகளாக இருந்து வந்ததால், அவைகளை பொதுவாக வீட்டில் வளர்த்து வணங்கினர். அரசர்களுடன் அவர்களது பூனைகளுக்கும் பிரமிடுகளில் இடங்கள் ஒதுக்கப்பட்டது.

பூனைகள் பொதுவாக 2.5 லிருந்து 7 கிலோகிராம் வரை (5.5I6 இறாத்தல்) எடை கொண்டவையாக இருக்கின்றன. சிறிய அளவிலான பூனைகள் 1.8 கிலோ கிராமுக்குக் (4.0 இறாத்தல்) குறைவாகக் காணப்படும்.

பூனைகளுக்கு 30 முள்ளந்தண்டு எலும்புகள் உண்டு (மனிதனுக்கு 33). நுண்ணிய கேள்விப்புலனைக் கொண்ட பூனைகளின் காதுகளில் 32 தசை நார்கள் காணப்படுகிறது. பூனைகளின் அதிகூடிய சத்த அதிர்வுகள் 64 கிலோஹேர்ட்ஸ். நாளாந்தம் 12-16 மணி நேரம் உறங்கும்.

நுகரும் புலன், மனிதனை விட 14 மடங்கு அதிகம். பூனைகளின் நாக்கில் இனிப்புச் சுவையை அறியும் நுகர்மொட்டுகள் இல்லாததால், பூனைகளால் இனிப்புச் சுவையை அறிய இயலாது.

மரபணு மாற்றத்தினால் இத்திறனை பூனைகள் இழந்துவிட்டன. ஒரு பூனை தமது வாழ்நாளில் 150 குட்டிகள் வரை ஈனும். பூனைகள் சிறந்த இரவுப்பார்வையைக் கொண்டுள்ளன.


பாந்த அளவிலான மீடிறன் கொண்ட ஒலிகளையும் கேட்க முடியும். இவற்றால் மனிதன், நாய் என்பவற்றை விட உயர் சுருதியினாலான ஒலிகளைத் தெளிவாகக் கேட்க முடியும். முதன் முதலில் ஆபிரிக்கர்களே பூனைகளை பழக்கப்படுத்தினர். ஆரம்பத்தில் எலிகள் உண்பதற்காகவே பூனைகள் பழக்கப்படுத்தப்பட்டன. பின்னர் அவை மனிதனுடன் பழகும் விதத்தினால் ஈர்க்கப்பட்டு வளர்க்கத் தொடங்கியுள்ளனர்.



நேபாளத்தை சேர்ந்த 2 வயது சிறுவன் 3 கைகளுடன் வாழ்கிறான். 3வது கை நடுமுதுகில் இருந்து முளைத்து வளர்ந்து வருகிறது. இதனால்அவன் தனது அன்றாட வாழ்க்கையில் மிகவும் அவதிப்படுகிறான், தூங்கும் போது மிகவும் சிரமப்படுகிறான். தாயின் கருவில் இரட்டைக் குழந்தைகளாக உருவாகி அது முழு வளர்ச்சி அடையாமல் இருப்பதால் இது போன்று கைகள் உருவாகின்றன,அந்த கையை அகற்றுவதன் மூலம் சிறுவனின் தண்டு வடத்தில் பாதிப்பு ஏற்பட்டு உடலில் பக்கவாதம் நோய் உருவாக பெருமளவில் வாய்ப்பு உள்ளதென வைத்தியர்கள் கூறியுள்ளனர்.



அமெரிக்காவின் மெக்ஸிகன் மாகாணத்தில் உள்ள இப்சிலான்டி நகரில் அமைந்திருக்கும் ஒரு சலூனில் சிறுவர்களுக்கு முடி திருத்தும்போது அவர்கள் கையில் ஒரு புத்தகத்தைக் கொடுக்கிறார்கள். அவர்கள் அதைச் சத்தமாகப் படித்தால் 2 டொலர்கள் பரிசாகக் கிடைக்கிறது, அல்லது கட்டணத்தில் கழிக்கப்படுகிறது. சிறுவர்களுக்குப் புத்தகம் படிக்கும் பழக்கத்தைஏற்படுத்தும் இந்தச் சலூனுக்கு, நகர மக்களிடம் நல்ல வரவேற்பும் மரியாதையும் கிடைத்துள்ளது.



பேர்முடா பகுதியில் பிடிக்கப்பட்ட பிரமாண்ட இறால். 14 பவுண்ட் நிறையுள்ளதாம்.



வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு சுமார் 3 மில்லியன் ரிங்கிட் (10.5 கோடி இலஙகை ரூபா) செலவில் தங்க இரதம் ஒன்று தயாராகி வருகின்றது. மலேசியாவின் பினாங்கு இந்து அறக்கட்டளை வாரியத்தின் ஏற்பாட்டில், தமிழ்நாடு காரைக்குடியில் இந்தத் தங்க இரம் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே நாட்டுக்கோட்டை செட்டியார்களால் 120 ஆண்டுகாலம் பழமைவாய்ந்த வெள்ளி இரதம் இயக்கப்பட்டு வருகிறது. 1.6 தொன் எடையுள்ள இந்தத் தங்க இரதம் 4.3 மீட்டர் உயரமும், 4 மீட்டர் அகலமும் கொண்டதோடு, இரண்டு தங்கக் குதிரைகளும் இரதத்தின் முன்பகுதியில் வைக்கப்படவுள்ளன.



புங்குடுதீவு புளியங்கூடல் பகுதியில் எடுக்கப்பட்ட படம். மாடொன்று மதில் ஏறி குதித்து தப்பியோடும் போது எடுக்கப்பட்ட படம். பின்னர் மிகச்சிரமத்துடன் மாட்டை பிடித்ததாக இணையங்களில் இந்த படம் வெளியாகியுள்ளது.

BRIGHT INN
பிறைபிட் இன் ஹோட்டல்



அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறைபிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | | |

BRIGHT INN

யாழ் பிறைபிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு
0112 329664, 0117 242233, 0117 242244
E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933













இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 23.10.2016 அன்று வெளியிடப்பட்டது.